
ஞானச்சுடர்
சந்நிதியான் ஆச்சிரமம்
ஆடி
2016
223 ஆவது மலர்
ஓம்
முருகா
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**இலனென்று தீயவை செய்யற்க செய்யின்**
**இலனாகும் மற்றும் பெயர்த்து.**

**பொருள் :** யான் வறியவனென்று கருதி அதைத் தீர்த்துக்கொள்வதற்குப் பிறர்க்குத் தீவினைகளை ஒருவன் செய்யாதிருத்தல் வேண்டும்; தீவினை செய்வானாயின் முன்னிலும் வறியவனாவான்.

(205)

**தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால**
**தன்னை யடல்வேண்டா தான்.**

**பொருள் :** துன்பம் தரும் தன்மையுடைய பாவங்கள் தன்னைப் பின் வந்து வருத்துதலை விரும்பாதவன், தீமை தரக்கூடிய செயல் களைத் தான் பிறர்க்குச் செய்யாதிருத்தல் வேண்டும்.

(206)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்




சேணிடை விடைமேற் றிருஞான சம்பந்தர்
காணிய வண்ணங் காட்சி கொடுத்த
ஆணிப் பொன்னே அம்பல வாணா
வேணியா வென்முன் வெளிப்பட வருக
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 71

சைவனே யுன்னைத் தமசம மாதியோ
டைவரும் பொன்ற வடியே னுக்குக்
கைவர மருள்வாய் கால காலா
மைதவ மும்மை மருவு மார்பனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 72

சொன்ன பாணன் சுந்தரன் கவிக்காய்ச்
சொர்ண மளித்த சொக்க நாதனே
இன்னு மென்னை யிடருற வைத்தால்
என்ன செய்குவே னேழை யேனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 73

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 223

2016 ஆடி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பக்தி நெறி | கு. சோமசுந்தரம் | 01 -03 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 04 -07 |
| ஆன்மீக வாழ்க்கை | செல்வி. பா. வேலுப்பிள்ளை | 08 -09 |
| சந்தம், இராகம், தாளம்... | மு.க. மாசிலாமணி | 10 -11 |
| பக்தி இலக்கிய வரலாற்றில்... | செல்வி மு. சோபிதா | 12 -14 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 15 -18 |
| ஆரா அமுத ஆழ்வாரும்... | முருகவே பரமநாதன் | 19 -21 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 22 -24 |
| நளமகாராஜன் | அ. சுப்பிரமணியம் | 25 -28 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 29 -30 |
| மானுடா! பயம் ஏன் உனக்கு? | பு. கதிரித்தம்பி | -31 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 32 -34 |
| கண்ணப்பர் ஆன காளத்தி... | நா. நல்லதம்பி | 35 -37 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 38 -39 |
| சங்கு முழங்கடா தமிழா! | ச. லலீசன் | 40 -41 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 42 -43 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 44 -48 |
| இந்து தத்துவத்தினூடாக... | செல்வி ந. தில்லைநாயகி | 49 -50 |
| ஆராமையின் முகிழ்ப்பே... | கே.எஸ். சிவஞானராஜா | 51 -53 |
| மலேசியப் பயணத்தின்... | செ. மோகனதாஸ் சுவாமிகள் | 54 -55 |
| திருமுறை ஓதுக... | செல்வி செ. ஐடா | 56 -57 |
| தமிழகத் திருக்கோயில் ... | வல்வையூர் அப்பாண்ணா | 58 -60 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் ஆனிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:


ஞானச்சுடர் 222ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆசிரியர் திரு த. கணேசராசா அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

அவர் தமது உரையில் இம்மலருக்குரிய வெளியீட்டுரையை ஆற்ற இருந்த திரு கு. தியாகராஜசர்மா (நீர்வை மணிஐயர்) வருகை தரமுடியாத சந்தர்ப்பத்தில் இவ்வெளியீட்டுரையினை ஆற்றுமாறு பணித்திருந்தார். அவரது வேண்டுகோளுக்கு அமைவாக முதன் முதலாக இவ் வைபவத்தில் கலந்து எனது வெளியீட்டுரையினை ஆற்றுகின்றேன் என்று கூறி, சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சகல சமய, சமூகப் பணிகளின் தன்மைபற்றி பாராட்டியதோடு தொடர்ந்து 222ஆவது மலராக மலர்ந்து கொண்டிருக்கும் ஞானச்சுடர் பற்றிய கருத்தினை சபையில் உள்ளோருக்கு விளக்கிக் கூறியதுடன் தன்னையும் இப்பணியில் இணைத்த சந்நிதி வேற்பெருமானுக்கும் நன்றிகூறி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.




## மதிப்பீட்டுரை:

ஆனிமாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை வருடா வருடம் ஆற்றிவருகின்ற இளைப்பாறிய ஆசிரியர் திரு க. நவரத்தினம் அவர்கள் வருகை தராத வகையில் ஆச்சிரம சுவாமி அவர்கள் மலருக்குரிய மதிப்பீட்டுரையின் செயற்பாட்டில் ஈடுபடாமல் ஞானச்சுடர் மலரின் ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை உள்ள வளர்ச்சி பற்றிய விபரங்களை சபையில் உள்ளோருக்கு எடுத்துக்கூறியதோடு புரட்டாதி மாதம் வெளிவருகின்ற 225ஆவது மலருக்குரிய விபரங்களையும் கூறி தனது உரையை நிறைவு செய்தார்.



# சுடர் தரும் தகவல்

சந்நிதியானைத் தரிசிக்க வருகின்ற அடியார்களுக்கு அன்னதானத் தொண்டை மேற்கொண்டு அடியார்களுக்கு அடியவராக விளங்கி ஆற்றங்கரையானின் அருட்கடாட்சத்தைப் பெற்றவரே ஸ்ரீமத் மயில்வாகனம் சுவாமிகளாவார். இளம் வயதிலேயே ஆத்மீக ஈடுபாடுள்ளவராக விளங்கிய சுவாமிகள் தென்னிந்தியா சென்று பல தலங்களை வழிபட்டதுடன் திருவண்ணாமலை சென்று ரமண மகரிஷியின் சீடனாகவும் வாழ்ந்தார்கள். இறுதியில் **''நீ வந்த இடத்திற்கே சென்று இவ்வகையான அன்னப் பணியைச் செய்து அடியவருக்குரிய ஆன்மீகத் தொண்டை ஆற்று''** என்ற ரமண மகரிஷியின் வாக்கிற்கு அமைவாக ஆற்றங்கரையானை நாடிவந்து சந்நிதியில் தங்கி இருந்து ஆலய வழிபாட்டிலும் அவன் புகழைப் பாடுவதிலும் தனது காலத்தைக் கழித்தார். இக்காலத்தில் 1940ஆம் ஆண்டு ஆனந்தாச்சிரமம் எனும் பெயரில் ஒரு மடத்தை ஆரம்பித்து அன்னப்பணியை ஆரம்பித்தார்கள்.



சுவாமிகள் ஆரம்பித்த இத்தொண்டு தூய்மையானதாகவும் முருகன் அடியார்கள் பசியாற வேண்டும் என்ற நோக்கத்தையும் கொண்டிருந்தால் அவரது பணி இன்றும் போற்றக்கூடிய வகையில் உள்ளது.

அவர் மறைந்து 30 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அவரது அன்னப் பணியின் மகிமையை சந்நிதியான் ஆச்சிரமம் இன்றும் பறைசாற்றிக் கொண்டு இருக்கிறது.

சுவாமி அவர்களின் 31ஆம் ஆண்டு குருபூசைத்தினம் 09.08.2016 செவ்வாய்க்கிழமை வெகு விமரிசையாகவும் பக்திபூர்வமாகவும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற உள்ளது.

குருபணி என்றும் சிறக்க சந்நிதியானை வேண்டி அந்நன்நாளில் நாம் அனைவரும் ஒன்றிணைவோமாக.

# கிளிக் கண்ணி

செல்வச்சந் நிதியானை
சேயோனை முருகன் தனை
நல்லசெந் தமிழாற் பாடவே - கிளியே
நாடி நீயே கேட்க ஓடிவா - கிளியே
நம்பினோரைக் காப்பா னெடி.
செந்தமிழாம் தேன் கலந்து
திருப்புகழாம் பாட்டிசைத்து
வந்தனைகள் செய் வோமெடி - கிளியே
வரங்கள் கேட்க தருவானெடி - அன்பரது
வல்வினைகள் நீக்குவா னெடி.
மோனை எதுகை மலராக
முட்டித் தமிழ் மாலை கட்டி
ஞானாலங் காரமும் பூட்டியே - சூட்டி
நம்மையனைப் பணிந்தேத்துவோம் - கிளியே
நல்லவராய் வாழ்வும் பெறுவோம்.

ஐம்புல வேடரைத் துறந்து
அகன்றே தினைப்புனஞ் சென்ற
மங்கை வள்ளி மானை வேட்டவன் - கிளியே
வளமா யவளை மணந்து கொண்டவன்

ஆண்கள்பாற் காவடி யாட
அடுத்துப் பெண்கள் கரக மாட
தானும் மகிழ்ந்து வீதி வருவான் - சந்நிதி
தாண்டவஞ்செய் முருகனெடி - கிளியே

தக்கவர் நெஞ் சிலு மாடுவான்
உலகனைத்தும் வாழ மன்பர்
உத்தமன் சந்நிதி யானை
நலமுடனே சிந்திக்கும் வரங்களை - சந்நிதியான்
நன்றாக அள்ளிக் கொடுப்பான் - கிளியே
நாடியுணர்ந்து தேடிப் பாரெடி.

-அமரர்: முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்-

# ஆடிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

திரு ந. ஜவகர்லால்நேரு
(லண்டன்)
மாதர்க்கரசி பொன்னுத்துரை
(கொழும்பு)
T.கனகசபேசன்
(கனடா)
செல்வி தம்பு சறோஜா
(சங்கீத முதன்மை இளை. ஆசிரியர், நெல்லியடி)
திரு இ. பேரின்பநாயகன்
(நாவலர் பாலர் பாடசாலை ஸ்தாபகர், சுதுமலை)
திரு Dr. V. ஸ்ரீஸ்காந்தன்
(ரஞ்சிதா மெடிக்கல் கிளினிக், சுதுமலை)
திரு சி. பஞ்சலிங்கம்
(லிகிதர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)
திரு வே. பாராளன்
(தொழில் நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்)
திரு S. தர்மரெத்தினம்
(அதிபர், சிறுப்பிட்டி)
திரு ச. நவரத்தினராசவேல்
(அதிபர், வேல்பதி, புத்தூர்)
திரு நா. இராசலிங்கம்
(இளை. அத்தியட்சகர்)
திரு செ. சுந்தரலிங்கம் J.P
(நிர்வாகி சதா பொன்ஸ் கல்வி நிலையம், மாலி சந்தி)
திரு ந. சேகர்
(கிராம சேவையாளர், வீரபத்திரர்கோயிலடி, உடுப்பிட்டி)
திரு கு. ஸ்ரீமுருகமூர்த்தி
(கிளை முகாமையாளர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)
திரு சு.பொ. நடராசா
(அண்ணா தொழிலகம், இணுவில்)

திரு த. கந்தசாமி
(இருபாலை வீதி, கோண்டாவில்)
செல்வி இ. வல்லிபுரம் ஆசிரியை
(நவக்கிரி)
திரு சு. சர்வேஸ்வரன்
(காளிகோயிலடி, மல்லாகம்)
திரு சுப்பிரமணியம் அருளானந்தசிவம்
(அல்லாரைவீதி, மீசாலை கிழக்கு)
திரு பாலசுப்பிரமணியன் ராகுலன்
(யாழ்ப்பாணம்)
திரு ச. இராசரத்தினம்
(நாவலர்வீதி, யாழ்ப்பாணம்)
திருமதி மாலதி இராஜேஸ்வரன்
(உடுப்பிட்டி)
திரு த. திருஞானசம்பந்தர்
(ஏழாலை வடக்கு)
திரு புஸ்பநாதன் பிரதீபன்
(உரும்பராய் வடக்கு)
திரு க. குணசிங்கம்
(சாவகச்சேரி)
திரு இ. சிவஞானம் J.P
(புத்தூர்)
திரு N. குலசேகரம்
(வருணன், அச்சுவேலி)
திரு க.ம. செல்வரெத்தினம்
(நவாலி கிழக்கு, மானிப்பாய்)
திரு சி. தனபாலசிங்கம்
(புலோலி)
திரு இ. சிவராசா
(யாக்கரைவீதி, கரவெட்டி)
சிதம்பரப்பிள்ளை அனுஜா
(அல்வாய்)
செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை
(பொலிகண்டி)

திருமதி உ. பேரானந்தம்
(தெல்லிப்பழை
திரு வி. சிவபாலசிங்கம்
(கரன் பான்சி, சுன்னாகம்)
திரு க. ஸ்ரீஸ்கந்தராசா
(கிராமசேவகர், சிறுப்பிட்டி கிழக்கு)
திரு M. பாலசுப்பிரமணியம்
(ஸ்ரீ முருகன் கபே, ஈவினை)
திரு மு. இராஜேந்திரன்
(முருகையா கோவிலடி, புலோலி)
திரு பொன். சற்குணநாதன்
(வேம்பன் வீதி, உரும்பராய்)
திரு சொ. செல்லத்துரை
(பத்திரகாளி ஒழுங்கை, பருத்தித்துறை)
திரு நா. தெய்வேந்திரம்
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
திரு வி. தவத்துரைராசா
(மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய்)
சு. அனுஷியாதேவி
(முருகவாசா, சித்தங்கேணி)
திரு சி. கணேசமூர்த்தி
(அல்வாய்)
திரு தயானந்தன் சுஜந்தன்
(அச்சக வீதி, கொக்குவில்)
உரிமையாளர்
(சுந்தர்சன்ஸ், மானிப்பாய்)
திரு ச. சூரியப்பெருமான்
(ராகுலசூரியன், பருத்தித்துறை)
திரு மா. அருட்செல்வம்
(எழுதுவினைஞர், புலோலி வடமேற்கு)
திரு ச. சிவரூபன்
(சிறுப்பிட்டி)
திரு செல்லையா சர்வேஸ்வரன்
(செல்வறங்கம், இணுவில்)

**திரு ஆ. மகேந்திரலிங்கம்**
(வேம்போலை, இணுவில்)
**உரிமையாளர்**
(நாதன் அன் பிறதேர்ஸ், இணுவில்)
**திரு சி. கருணா**
(கல்வியங்காடு, யாழ்ப்பாணம்)
**செல்வன் சி. கௌதமன் C/O சி. சிவபாலன்**
(யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(ரேவதி நகைமாடம், யாழ்ப்பாணம்)
**திரு செ. வாமதேவன்**
(இணுவில் மேற்கு, இணுவில்)
**திரு V. சேனாதிராசா**
(கரவெட்டி கிழக்கு, கரவெட்டி)
**பிறேமதாஸ் சசிகலா**
(K.K.S வீதி, யாழ்ப்பாணம்)
**செல்வி தர்மினி ரவிச்சந்திரன்**
(கட்டுடை, மானிப்பாய்)
**திரு க. சிவஞானசுந்தரம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**திருமதி பொ. இரத்தினசோதி**
(கதிரவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை)
**திரு ச. கிருஷ்ணமூர்த்தி**
(கணாதிபன் அச்சகம், கரணவாய்)
**திரு செ. அட்செயலிங்கம்**
(ஆசிரியர், அல்வாய்)
**திரு மூ.சிவலிங்கம்**
(காரைக்கால் வீதி, இணுவில்)
**திரு க. விகர்ணன்**
(குமரகோட்டம், கோண்டாவில்)
**திரு R. பொன்னுராசா**
(வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை)
**திரு S. தர்மலிங்கம்**
(கமலபதி மாதர்சங்க வீதி, சித்தங்கேணி)
**திரு சி. குகநாதன்**
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)

# பக்தி நெறி

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

இறைபக்தி, சமய பக்தி, பக்தி நெறி என்றெல்லாம் பேசுகின்றோம். பக்தி என்றால் என்ன? என்றும் சிலர் வினாவெழுப்புகின்றனர். அனுபவம் வாயிலாக உணரப்படவேண்டிய ஒன்றிற்கு; வெறுமனே வார்த்தைகள்மூலம் வரைவிலக்கணம் தருவது என்பது அத்துணை இலகுவான காரியமன்று. சமயம் என்பது அனுபவம்; அவ்வாறே பக்தி என்பதும் அனுபவம். இன்றைய விஞ்ஞான உலகில், எதற்கெடுத்தாலும், விஞ்ஞான ரீதியான விளக்கம் கோரப்படுகின்றது. அறிதல் என்பது பௌதீகச் செயற்பாடு. உணர்தல் ஆன்மீகச் செயற்பாடு. இதனைச் சரிவரப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். இதைவிட்டு, விதண்டா வாதங்களில் ஈடுபடுவது, குளத்தைக் கலக்கிப் பருந்துக்குக் கொடுப்பதற்கு ஒப்பாகும். சிலர் தான்தோன்றித்தனமாக, சமயம், பக்தி என்பவற்றிற்கு விளக்கம் தரமுயன்று, சமயத்தைக் கெடுத்துவிடுகின்றனர். மாம்பழம் இனிக்கின்றது; பாகற்காய் கசக்கின்றது. இவற்றிற்கெல்லாம், ஏன்? எப்படி? என்று விளக்கம் கேட்டு நேரத்தை வீணாக்குகின்றார்களா? அனுபவத்தால் உணரப்படவேண்டியவற்றிற்கு, அறிவுபூர்வமான விளக்கத்தைக் கேட்பது அநாவசியமானது. பக்தி என்பதை முழுமையாக உணர்ந்துகொள்ள, அனுபவம்மூலம்தான் சாத்தியமாகும். கண்ணப்பர், சாக்கிய நாயனார், பூசலார், சிறுத்தொண்டர், சண்டேசுர நாயனார் ஆகிய மெய்யடியார்களின் பக்தி நலத்தினை வெறுமனே அறிவை அளவுகோலாகக் கொண்டு அளந்து அறிய முடியுமா? முடியாது.

பக்தி என்பதை வரையறை செய்து, வரைவிலக்கணம் கூற இயலாவிட்டாலும்; பக்தித்திறன், பக்தி நலம் என்பனபற்றி சேக்கிழாரின் பெரியபுராணம் போன்ற சைவ நூல்கள், எடுத்து விளக்கியுள்ளன. "பக்தி என்பது இறைப் பொருளிடத்துக் கொள்ளப்படும் மிக உயர்ந்த அன்பு ஆகும்". "இறை பக்தி என்பது, பக்தன், தான் உலகில் வாழ்ந்து கொண்டிருந்தாலும்; தம்மால், மனம், மொழி, மெய் என்பவற்றால் ஆற்றப்படுகின்ற செயல்கள், பணிகள் மற்றும் தொழில்கள் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி, யாவற்றையும் இறைவன் செயல் எனத் தூய்மையுடன் புரிகின்றதும், அர்ப்பணிக்கின்றதுமான பக்குவ நிலையாகும்".

இறைவன் மீதுள்ள பக்தி முழுமையடைவதற்கு, தம்மிடமுள்ள "நான்" என்னும் தற்பற்றும்; "எனது" என்னும் பொருட்பற்றும் நீங்க வேண்டும். இவற்றை முறையே, அகந்தை, மமதை என்று சைவசித்தாந்தம் கூறும். இவ்விரண்டும் ஆணவ மலத்தின் இரு அங்கங்கள். பற்றுக்கள்தான், மனிதனின் துன்பங்களுக்குக் காரணம். "யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்; அதனின் அதனின் இலன்" என்கிறது தமிழ்மறையாகிய திருக்குறள். ஒருவன் எந்தெந்தப் பொருள்களிலிருந்து பற்று நீக்கியவனாக இருக்கிறானோ, அந்தந்தப் பொருளால் அவன் துன்பம் அடைவதில்லை. பற்று விட்ட இடத்தில் பக்தி அரும்பி, மலர்கிறது.

உலகப் பொருள்களில் பற்று வைப்பதால்; துன்பங்கள், துயர்கள், ஏமாற்றங்கள்,

கவலைகள் என்பனவற்றைத்தான் ஈற்றில் விளைச்சல்களாக அறுவடைசெய்ய வேண்டி வரும். உலகில் வாழ்வதற்கு; உலகப் பொருள்களில் பற்று வைப்பதும்; அவற்றை அடைவதற்கு முயற்சி செய்வதும்; அடைந்து அவற்றை அளவோடு அனுபவிப்பதும்; வேண்டு வனவே, இந்த மாநிலத்தே, என்கின்றனர் உலக மாந்தர்கள். இதில் நியாயம் இருப் பதை மறுப்பதற்கில்லை. அவற்றை அளவோ டும், நல்லமுறையிலும், தேடி அனுபவித்து, தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தவறு இல்லை. பற்றுக்கள் கடும் பற்றுக்கள், பேரா சைகள் ஆக மாற்றம் பெற்று விடக்கூடாது என்பதில் கண்ணுங் கருத்துமாக இருத்தல் இன்றியமையாதது. "பேராசை பெருந் தரித் திரம்" என்பது ஆன்றோர் வாக்கு. தேடிய பொருளை, தமது தேவைகளை நிறைவு செய்வதற்குப் பயன்படுத்திக்கொண்டு; மற் றொரு பகுதியை, நலிந்தோருக்கு உதவு வதற்கும், தான தருமங்கள், அறப்பணிகள் செய்வதற்கும் பயன்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு செய்தல் அறம் ஆகும்.

கடும் பற்றினை விடுவதற்குத் திரு வள்ளுவர் வழி கூறியுள்ளார். "பற்றுக பற்றற் றான் பற்றினை, அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என்பதே அந்த நல்வழியாகும். பற்றில்லாதவனாகிய இறைவனில் பற்று வைத்து, அவனை இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும்; உலகியல் சார்ந்த கடும் பற்றுக் களை விட்டொழிப்பதற்கும், அவற்றின் தாக் கங்களிலிருந்து தம்மை விடுவிப்பதற்கும் அது ஒன்றே வழி என்பது இக்குறட்பா தரும் கருத்து ஆகும். இறைவனில் வைக்கின்ற பற்றுத்தான் இறைபக்தி எனப்படுகிறது.

"சித்தம் சிவமாக்கிச் செய்தனவே; தவ மாக்கும் அத்தன்" என்னும் திருவாசக வரி கள், இங்கு நோக்கற்பாலது. பக்தர்கள், தம் சித்தத்தில் சிவத்தை அமர்த்தி; சித்தத்தைச் சிவமயம் ஆக்கி; பொழுதை - நேரத்தை - தவப்பொழுது ஆக்கி; தூயவாழ்வு வாழ்பவர் கள். பிறரையும் தூய்மை செய்ய வல்ல வர்கள்.

பிறருடைய துன்பங்களைத் துடைப் பதற்காகத், தம்வசமுள்ள உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்யவும், அர்ப்பணிக்கவும் தயார் நிலையில் உள்ள வர்களே உண்மைப் பக்தர்கள். இதற்கு என்ன காரணம். என்பதை ஆராயின், பக்தன் எந்தப் பரம்பொருளிடம், தமது ஆழ்ந்த பக்தி யைச் செலுத்துகின்றானோ; அந்தப் பரம் பொருளே, எங்கும் எவற்றிலும், எல்லா உயிர் களிடத்திலும்; பரந்தும், செறிந்தும், நிறைந் தும் காணப்படுகிறது என்ற உண்மையில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளமையே அதற்குக் காரணம் என்பது தெரியவரும். மனிதநேயம், ஆன்மநேயம் இரண்டையும் ஒருசேரப் பெற்றவர்கள், பக்தர்கள். அவர்கள், தொண்டு மனத்தவர்; மிண்டு மனத்தவர் அல்ல. அன்பும், கருணையும்; பக்தர்களின் பண்பும், பயனுமாக விளங்குகின்றன.

பக்தி நெறியின் மறுபெயர், தொண்டு நெறி என்பதாகும். சைவ நாயன்மார்கள், தொண்டு நெறி- பக்தி நெறி என்பதன் இலக் கணத்திற்கு, இலக்கியமாக வாழ்ந்து காட்டியுள்ளனர். எனவேதான், "இறைவனோ தொண்டர் பாகத்துள் அடக்கம்; தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே", என, உலகிலே பெரியது எது? என்று கேட்ட கேள்விக்குத் தமிழ் மூதாட்டி ஔவையார், விடையளிக்கின்றார்.

"நம் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது, தொண்டு நெறியின் உச்சியை அடைந்து, அந்நெறியில் நின்ற, நாவுக்கர சரின் நல்வாக்கு.

*மரியாதை பெறும் ஒரே வழி அதனை முதலில் கொடுப்பதாகும்.*

"அன்பர் பணி செய்ய எனை ஆள் ஆக்கிவிட்டு விட்டால்
இன்பநிலைதானே வந்து எய்தும் பராபரமே
எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறு ஒன்று அறியேன் பராபரமே"

என்று தொண்டின் அருமை பெருமை பற்றித் தாயுமானவர் பாடியருளியுள்ளார்.

மக்கள் தொண்டு மகேஸ்வரன் தொண்டு ஆகக் கருதிப் பணி செய்பவர்கள் பக்தர்கள். பக்தர்களிடம் உயர்வு, தாழ்வு மனப்பான்மை அறவே கிடையாது. எல்லா உயிர் களிலும், ஒரே கடவுள்தான் குடிகொண்டிருக்கின்றார், என்னும் நம்பிக்கையில் வாழுகின்ற பக்தர்கள், எவ்வாறு மனிதர்களிடையே உயர்வு தாழ்வுகளைக் காணமுடியும்? ஆன்மீக ரீதியில் பார்க்கப்போனால், பக்திநெறி, எல்லாவித வேறுபாடுகளையும் கடந்த நிலையில், ஆன்மீகத்தை எளிமையாக்கி, யாவராலும் அதனை வாழ்க்கையில் பின்பற்றி வாழ்வதற்கு, வழியைக் காண்பிக்கிறது எனலாம்.

உண்மை பக்தர்கள், இறை பக்தியோடு, பண்புடைமை, ஒழுக்கமுடைமை என்பவற்றிலும் சிறந்து விளங்குவர். அடக்கம், அமைதி, எளிமை, இனிமை, அன்பு, இரக்கம், தயை, பணிவு, தூய்மை, நேர்மை, உண்மை, பிறர் நலம்பேணல், இன்னா செய்யாமை, நடுநிலைமை ஆகிய மனித விழுமியப் பண்புகளை வாழ்க்கையில் பேணி, அவற்றின் நலம் காத்து, ஒழுகுபவர்களே "பக்தர்கள்" ஆவர். புறச் சின்னங்களையும், வேடங்களையும் தரித்துக் கொண்டால் மாத்திரம், பக்தன் ஆகிவிடமுடியாது. பக்தி நெறி என்பது ஒரு பாதை. அதனைப் போர்வையாக்கி, அதனுள் மறைந்தொழுகுதல் பெரும் பாவகாரியம் ஆகும். பக்தி நெறிக்குறிய ஒழுக்கப் பண்புகளையும் அநுட்டானங்களையும் பேணிவர வேண்டியது, பக்தனுக்கு இன்றியமையாததாகும். குளிக்கப் போய்ச் சேறு பூசிக் கொள்ளுதல் தகாத செயல் ஆகும்.

"வானுயர் தோற்றம் எவன் செய்யும் தன் நெஞ்சம்
தான் அறி குற்றப் படின்"

என்பது வள்ளுவம் தரும் அறக்கருத்து. தன் மனம், தான் அறிந்த குற்றங்களைச் செய்வதற்கு உடந்தையாக இருக்குமானால், வானத்தைப்போல உயர்ந்து விளங்குகின்ற பக்தி தவக்கோலம் ஒருவனுக்கு என்ன பயன் செய்யும்? என்று திருவள்ளுவர் வினா எழுப்புகிறார். மனவடக்கம், புலனடக்கம் இரண்டும் உண்மைப் பக்தனின் இலட்சணங்கள், என்பதைப் பக்தி நெறியில் தம் வாழ்க்கையை இட்டுச் செல்பவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

பக்தனின் வாழ்வு, தியாக வாழ்வு; தவ வாழ்வு; தன்னலம் சிறிதும் இல்லாதது; பிறர் நலம் பேணி வாழும் பண்புடையது; பிறருக்கும் பிற உயிரினங்களுக்கும் துன்பம், துயர்கள், தீங்குகள், இம்சைகள் செய்யாத வாழ்வு ஆகும். நடிப்பு வாழ்வாக இருத்தல் ஆகாது என்பதை அடிக்கடி நினைவு கூருதல் உண்மை பக்தனின் கடமை. எல்லாப் படைப்புக்களிலும், கடவுளைக் காணும் தகுதியைப் பெற்றவனே, சிறந்த பக்தன்.

பக்தி நெறியில் நின்று வாழ்வது, எல்லோருக்கும் இயலக் கூடியது. இறையுணர்வு, இறை நம்பிக்கை, அறநெறி வாழ்வு இம்மூன்றையும் உள்ளடக்கமாகக் கொண்டது, பக்திநெறி. இத் தூய பக்திநெறியில் நின்று, பக்தனாக வாழ எமக்குத் திருவருள் புரியுமாறு, இறைவனைப் பிரார்த்திப்போமாக.

வாழ்க! வையகம்.
வாழ்க! வளமுடன்.

*எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சமநிலையுடன் இருப்பதுதான் மகிழ்ச்சி.*

(தொடர்ச்சி...

# திருச்சதகம்
## பத்திவைராக்கிய விசித்திரம்
(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

### 2. அறிவுறுத்தல்

21. பரவுவா ரிமையோர்கள் பாடுவன நால்வேதங்
குரவுவார் குழன்மடவாள் கூறுடையா ளொருபாகம்
விரவுவார் மெய்யன்பி னடியார்கண் மேன்மேலுன்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ வரியானே.

**ப.ரை:**

அரியானே- யாவர்க்கும் அறிதற்கும் காண்டற்கும் அரியவனே, இமையோர்கள் பரவுவார்- தேவர்கள் வாழ்த்துவர்; நால்வேதம் பாடுவன- நான்கு வேதங்களும் நின்னைப் புகழ்ந்து பாடுவன; குரவு வார் குழல் மடவாள்- குராமலரை அணிந்த கூந்தலையுடைய உமையம்மையார், ஒரு பாகம் கூறு உடையாள்- நின் திருமேனியின் இடப்பாகத்தை தனக்குக் கூறாகவுடையாள்; அடியார்கள் மேல் மேல் மெய் அன்பின் விரவு வார்- அடியார்கள் மேன்மேலும் உண்மையான அன்பினால் நின்னொடு கலப்பார்கள்; உன் அரவு வார் கழல் இணைகள் காண்பாரே- அவரெல்லாம் உன்னுடைய ஒலிக்கின்ற நெடிய வீரக்கழலணிந்த திருவடிகளைக் காணப்பெறுவாரோ?

அரியானே, இமையோர்கள் பரவுவார்; நால்வேதம் பாடுவன; மடவாள் ஒரு பாகம் கூறுடையாள்; அடியார்கள் மேன்மேலும் மெய்யன்பினால் நின்னோடு கலப்பார்கள். அவரெல்லாம் உன் கழலிணைகள் காண்பாரோ என்பதாம்.

தேவர்கள் இறைவனை முன்னிலைப் படுத்தித் துதித்தலின் "பரவுவார் இமையோர்கள்" என்றார். பரவல் முன்னிலைக்கண் வருமென்பது "பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்" (புறத் சூ 22) என்னும் தொல்காப்பியச் சூத்திரவுரையில், "புகழ்தல் படர்க்கைக் கண்ணும் பரவல் முன்னிலைக் கண்ணும் வரும்" என இளம்பூரணர் உரைத்தமையானுமறிக. மறைகளெல்லாம் இறைவன் புகழைப் பாடுதலின் பாடுவன நால்வேதம்" என்றார்.

குரவு- ஒருவகை மரம். "நின்ற குரவின் மிசையேறி நிகழ்வதறிய வொளித்திருந்தான்" (பெரிய புரா. சண்டேசுர 45) என வருதல் காண்க. ஈண்டுக் குராமலரை உணர்த்தியது. "குராப்பயில் கூழையிவள்" (திருக்கோவை 362) என்புழிபோல, குரவு குழன் மடவாள் எனக் கூட்டிக் குரா மலரையணிந்த கூந்தலையுடைய உமையம்மையார் எனவுரைக்க.

"குரவங் கமழ் நறுமென்குழ லுமை" ஞான 10:5.
"குரவங் கமழ் நறுமென்குழ லரிவை யவள் வெருவ" ஞான 13:1.

"குரவங் கமழ் குழலாள்" ஞான 153:2.
"குரவார் குழலா ளொருகூறன்" ஞான 88:2.

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. ஒரு பாகம் என்றது இடப்பாகத்தை, மாதிடங் கொண்டம்பலத்து நின்றோன்" எனத் திருக்கோவையாரில் (138) வருதலுங் காண்க.

அடியார்கள் மேன்மேல் மெய்யன்பின் விரவுவார் என மாற்றிக் கூட்டிப் பொருளுரைக்க. இனி, மெய்யன்பின் அடியார்கள் மேன்மேல் விரவுவார் எனக் கூட்டிப் பொருளுரைப்பினுமமையும். விரவுதல்- கலத்தல். ஈண்டு உள்ளத்தாற் கலத்தலைக் குறித்தது. அரவுதல்- ஒலித்தல். "வண்டரவு கொன்றை" எனத் தேவாரத்து வருதலுங் காண்க. இனி, அரவு வார்கழலிணைகள் என்பதற்குப் பாம்பினையும் நீண்ட வீரக்கழலினையும் அணிந்த திருவடிகள் எனினுமாம். நான்கு வேதங்களையும் சேர்த்து எண்ணிக் காண்பாரோ என உயர்திணையாற் கூறியது மிகுதிபற்றியாகும். தேவர்கள் தம் உலக இன்ப வாழ்வை விரும்புதலிற் பரவியும் இறைவன் திருவடிகளைக் கண்டிலர். நான்கு வேதங்களும் நின்னைப் புகழ்ந்தும் நின்னைக் காண்டற்குரியனவல்ல.

"வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரிந்த
போதக் காட்சிக்குங் காணலன்" (சூரன் அமைச் 127)

எனக் கந்தபுராணத்து வருதலும் ஈண்டு அறியத்தக்கது, அரியான்- எத்தகைய மேம்பாட்டினரும் அறிதற்கும் காண்டற்கும் அரியவன்:

"அந்தமாதி யயனுமாலு மார்க்கும் அறிவரியான்"
ஞான 73:9.
"ஒன்று மறிவானவர்க்கு மறியாமை நின்ற அரன்"
ஞான 224:4.
"ஒருவர்க்கு முணர்வரியான்" ஞான 319:6.
"யாவரு மறிதற் கரியான்றனை" நாவு 176:2
"அவன் இவன் என்றியாவர்க்கும் அறியவொண்ணாச்
செம்பொன் காண்" நாவு 299:3.
"காண்டற்கரிய கடவுள் கண்டாய்" நாவு 237:1.

எனத் தேவாரத்து வருவனவும் காண்க.

இதன்கண், மொழியினாற் பாடியும் பரவியும் இன்பமடைதலினும் மெய்யன்பினால் விரவித் திருவடிக் காட்சியைப் பெறுதலே சிறந்ததாகும் என்னும் உண்மையை இறைவனை முன்னிலைப்படுத்திக் கூறும் குறிப்பினான் நெஞ்சிற்கு அறிவுறுத்தமையின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 17.

22. அரியானே யாவர்க்கும் அம்பரவா அம்பலத்தெம்
பெரியானே சிறியேனை ஆட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறேன் நயந்துருகேன்
தரியேன் நான் ஆமாறென் சாவேன்நான் சாவேனே.

**ப.ரை:**

யாவர்க்கும் அரியானே- எத்தகைய மேம்பாட்டினர்க்கும் அறிதற்கும் காண்டற்கும் அரியவனே, அம்பரவா- சிதாகாயத்தையுடையவனே, அம்பலத்து எம் பெரியானே- தில்லைத்

*பிடிவாதமும் கோபமும் உன் இயலாமையின் வெளிப்பாடாகும்.*

திருச்சிற்றம்பலத்தில் திருக்கூத்தாடும் எங்கள் பெரியோனே, சிறியேனை ஆட்கொண்ட பெய் கழல் கீழ்- சிறியவனாகிய என்னை ஆட்கொண்டருளிய இட்ட வீரக்கழலினையுடைய திருவடியின்கண், விரை ஆர்ந்த மலர் தூவேன்- நறு மணம் பொருந்திய மலர்களை இட்டு வழிபடேன்; வியந்து அலறேன்- பெறுதற்கரிய நின் திருவடிக் காட்சியைப் பெற்று வியப்படைந்து வாய்குழறேன்; நயந்து உருகேன்- விரும்பி அன்பினால் மனம் உருகேன்; நான் ஆம் ஆறு என்- அடியேன் உய்யும்வழி யாது? அதனை அருளாதொழியின், தரியேன்- உனக்கு ஆளாகிய யான் மலர் தூவல் வியந்தலறல் நயந்துருகல் செய்யாமல் இவ்வுலகில் தங்கி வாழேன்; நான் சாவேன் சாவேன்- அதனால் நான் இறந்திடுவேன் இறந்திடுவேன்.

யாவர்க்கும் அரியானே, அம்பரவா, அம்பலத்தெம் பெரியோனே, சிறியேனை ஆட் கொண்டருளிய உன் திருவடிக்கண் மலர்தூவேன்; வியந்தலறேன்; விரும்பி அன்பினால் மனமுருகேன்; இவைகளைச் செய்யாத யான் உய்யும் வழி யாது? மனமொழி மெய்களால் நின்னை வழிபடாது இவ்வுலகில் தங்கி வாழேன்; இறந்துபடுவேன்; இறந்துபடுவேன் என்பதாம்.

யாவர்க்கும் என்பதில் உம்மை முற்றுப்பொருளைத் தருவதாயினும் அறிவாற்றல்களிற் குறைந்தவர்களைக் குறியாது அவற்றின் மேம்பட்டுயர்ந்த திருமால் பிரமன் இந்திரன் முனிவர் முதலியோரைக் குறித்தது. தேவர் முனிவர் முதலிய யாவர்க்கும் இறைவன் அறிதற்கரியான் என்பது,

"தேவரு மறியாச் சிவனே காண்க" அண்ட 56.
"கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி" போற்றி 143.
"தேவர்கோ வறியாத தேவதேவன்" சத 30.
"பாரார் விசும்புள்ளார் பாதாளத்தார் புறத்தார்
யாராலுங் காண்டற் கரியான்" அம்மானை 2.
"வான்வந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனுங்
கானின்று வற்றியுங் காண்பரிய கனைகழலோன்"
அம்மானை 4.
"மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவருங் காணாச் சிவபெருமான்" வெண்பா 9.
"உலவாக் காலந் தவமெய்தி உறுப்பும் வெறுத்திங்
குனைக்காண்பான், பலமா முனிவர் நனிவாட" சத 54.

என இத் திருவாசகத்தும்,

"தன்னையார்க்கு மறிவரியான்" திருமலை 1.
"சார்வரு தவங்கள் செய்து முனிவரும் அமரர்தாமும்
கார்வரை யடவி சார்ந்துங் காணுதற் கரியான்"
கண்ணப் 128.

எனப் பெரியபுராணத்தும் வருவனவற்றாலுமறிக.

அம்பரம்- ஆகாசம். "அம்பர மனல் கால்" (திவ். பெரிய தி. (1) 8:8) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. இதனைச் சிதாகாசம் எனவும், சூக்குமவெளி எனவும் கூறுவர். இதன்கண் விளங்கும் பெரியோனாகிய இறைவன் திருச்சிற்றம்பலத்தின்கண் யாவரும் காணுமாறு திருக்கூத்தியற்றுதலின் "அம்பரவா அம்பலத்தெம் பெரியோனே" என்றார். இனி,

*நிஷப்தத்தை நாடுபவன் வாழ்வின் உண்மை நிலையை உணர்ந்துள்ளான்.*

"திகம்பரவா என்பது அம்பரவா என முதற்குறைந்து வந்ததெனக் கொண்டு திசைகளை யாடையாகவுடையவனே என உரைத்தலுமொன்று.

பெரியோனாகிய இறைவனை நோக்கத் தான் மிகச் சிறியனாதலின் அடிகள் தன்னைச் சிறியேன் என்றார். ஆட்கொள்ளல்- ஆளாக்கொள்ளல். ஆட்கொண்ட கழல் என இயையும். "போற்றியாம் உய்யவாட் கொண்டருளும் பொன் மலர்கள்" (திருவெம் 20) என வருதலும் காண்க. இறைவன் திருவடியைக் காட்டி அடிகளை ஆட்கொண்டமையின் "ஆட்கொண்ட பெய்கழல்" என்றார்.

"கண்ணார் கழல்காட்டி அடியேனை ஆட்கொண்ட
அண்ணாமலை யானை" அம் 10.

"நாண்மலர்ப் பாதங்காட்டி... நம்மையிம்மை ஆட்கொண்ட
வண்ணங்கள்" பொற் 8.

"பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாச மறுத்தெனை யாண்ட
ஆருடைப் பொன்மேனி யமுதினை" குயில் 9.

"அந்தண னாகிவந் திங்கே அழகிய சேவடி காட்டி
...என்னையும் ஆட்கொண்டருளும்.... தேவர்பிரான்"
குயில் 10.

"மைப்புலாங் கண்ணால் ஏறுண்டு கிடப்பேனை மலரடியிணைகாட்டி
அப்பன் என்னைவந் தாண்டுகொண் டருளிய அற்புதம்"
அற் 7.

"விரைமலர்க் கழல்காட்டி அச்சன் என்னையும் ஆண்டுகொண்
டருளிய அற்புதம்" அற் 9.

"பெருந்துறை யாளி யன்று... தன் கழல்காட்டி... என்னை ஆண்
டருளுங் கிடப்பறிவார்" வார்த்தை 9.

என அடிகள் அருளியவாறுங் காண்க.

பெய்கழல்- இட்ட வீரக் கழல். "பெய்கழலான்" (பு.வெ. மா. 162) என்பதற்கு "இட்ட வீரக்கழலினையுடையான்" என அதன் உரையாசிரியர் உரைத்தமையுங் காண்க. கழல் என்றது கழலையுடைய திருவடியை உணர்த்தியது. விரை- மணம். மலர் தூவேன் என்பது மொழியின் வழிபாட்டையும் நயந்துருகேன் என்பது மனத்தின் வழிபாட்டையும் , மெய்யின் வழிபாட்டையும் வியந்தலறேன் என்பது செய்யாமையைக் குறித்தன. உனக்கு ஆளாகிய யான் மலர்தூவல் முதலியவற்றைச் செய்யாமையின் இவ்வுலகில் தங்கியிரேன் என்பார் "தரியேன்" என்றார்.

இதன்கண்; அடிகள் தமது மனமொழி மெய்கள் வழிபாடு செய்யாமையைக் குறித்து வருந்தி இறைவனை முன்னிலைப்படுத்தி இந்நிலையில் இருத்தலினும் சாதலே நன்று என்று கூறுமுகமாகக் குறிப்பினால் அம்மூன்று கருவிகளுக்கும் அறிவுத்தமை பெறப்படுதலின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம் பத்து நுதலிய பொருள் புலப்படுமாறு காண்க. 18.

(தொடரும்...

# ஆன்மீக வாழ்க்கை

– செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் –

நம்மிடம் எவ்வளவோ ஆற்றல்கள் மறைந்துள்ளன. நாம் அவற்றைப் பயன்படுத்துவதில்லை. வீண்பேச்சு, அரட்டைப் பேச்சு, அரசியல், சினிமா விமர்சனம், புறம் பேசுதல் என்பவற்றில் எம்மிடையே உள்ள சக்தியை விரயமாக்குகிறோம்.

பயனில பேசுதல், புறங்கூறல், கோள் சொல்லுதல், கடவுளர்களைக் கேலி செய்தல், ஞானிகள், யோகிகள், மகான்களை கிண்டல் செய்வது, பிறர் மனம் நோக வன்சொல் பேசுவது இவை யாவும் வாயினால் தேடிக்கொள்ளும் பாவங்கள்.

மேற்கூறிய செயல்களைத் தவிர்க்க வேண்டுமாயின் மௌனம் வேண்டும். மௌனம் கடைப்பிடிக்க தியானம் தானே வரும். ஆன்ம ஈடேற்றம் பெற மௌன விரதம் அவசியம். வேதம், ஆகமம், மெய்கண்ட சாஸ்திரங்களைக் கற்றுத் தேறிய ஜனகாதி முனிவர்கள் நால்வர் சிவனிடம் சென்று, சுவாமி! இவை தவிர இன்னும் ஏதாவது படிக்க உண்டா? எனக் கேட்டார்கள். இதைக் கேட்ட சிவன் சின்முத்திரை காட்டி மௌனத்தைக் கடைப்பிடியுங்கள். அறிவிற்குப் புலப்படாத ஆழமான உண்மைகளை மௌனத்தில் காணலாமெனச் சொல்லாமற் சொல்லி இருந்தபடி இருந்தார். "மோனம் என்பது ஞான வரம்பு" ஔவையார் சொல்கிறார்.

மனக் கஷ்டங்கள் வரும்போது தனிமையாக இரு. மௌனம் தியானம் வரும்.

*மௌனத்தின் வகைகள்:*

1) உடல் உறுப்புகட்கு ஓய்வு தருவது.
2) உடம்பை அசையாமல் வைத்திருப்பது.
3) கனவு இல்லா ஆழ்ந்த உறக்கம்.

மனதிலிருந்து எந்த எண்ணம் வரவில்லையோ அதுவே மேலான மௌனம்.

*மௌன விரதத்தில் கடைப்பிடிக்க வேண்டியவை:*

1) நண்பர்கள், சுற்றத்தவர்கள் தவிர்ந்த தனிமை.
2) எத்தகைய எண்ணமும் மனதிலிருந்து வெளிப்படாமை. இதனால் மன உறுதி, அமைதி ஆனந்தம் உண்டாகும்.
3) பால், பழம் போன்ற எளிய உணவு.
4) கடற்கரை, திறந்தவெளி (ஏகாந்தம்)
5) சற்குருவை நாடிப் பயிற்சி.

மனதைத் தூய்மையாக்கி தியானம் செய்து மெய்ப்பொருளைக் கண்டவர்கள் ஞானிகள்.

ஆன்மீக வாழ்வை விரும்புபவர்கள் பொய் பேசாது மனதையும் நாவையும் அடக்கி மற்றையோர் பேச்சில் ஆர்வம் காட்டாது இருத்தல் வேண்டும். மௌன நாட்களில் நாவிற்கு

*துணிவோடு செயற்படாத காரணத்தால் உலகில் பல திறமைகள் சிதறிப் போகின்றன.*

ருசியைக்கூடத் தவிர்க்க வேண்டும். கூடுமானவரை தனித்திருப்பதே மேலானது. கடவுள் சிந்தனை தவிர பிற சிந்தனைக்கு இடமளியாது வாரத்தில் ஒருநாள் மௌனம் இருக்கப் பழகி படிப்படியாகக் கூட்டலாம். நித்திய ஆசாரசீலராக ஆலய தரிசனம் செய்து, சரியைத் தொண்டியற்றி, நியமந்தவறாத கடமைசெய்து, தர்ம காரியங்கள்- விரத அனுட்டானங்களில் ஈடுபட்டு, தாவர போசனம் அருந்தி வாழ்தலே உண்மையான ஆன்மீக வாழ்க்கை நெறியாகும். நம்மவர்கள் கந்தசஷ்டி, விநாயகசஷ்டி, தைப்பூசம், சிவராத்திரி, நவராத்திரி ஏகாதசி காலங்களில் உண்ணாவிரதம், நித்திரை விழிப்பு, மௌனவிரதம் கடைப்பிடிப்பர்.

நாளாந்தம் கிடைக்கும் சொற்ப நேரத்தில் மனதை ஒருநிலைப்படுத்தி, நாம் ஏன் பிறந்தோம்? எங்கிருந்து வந்தோம்? இந்த உடம்பு எப்படி வந்தது? நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்? எனச் சிந்தனை செய்யுங்கள். மௌனம் இருக்கப் பழகுங்கள். அமைதி, மனவலிமை, ஆனந்தம் பெறலாம்.

## அன்பே சிவம்

வாழ்க்கைக்குச் சுவையைக் கூட்டுவது அன்பு. பிறரிடம் நாம் சுயநலம் இல்லாமல் அன்பு செலுத்த வேண்டும். அதனால் ஏற்படுவது நன்மையா தீமையா என்று நாம் ஆராய வேண்டியதில்லை. இத்தகையதே "அன்பே சிவம்" ஆகும். இத்தகைய தூய அன்பும் சுயநலம் இல்லாச் செயலுந்தான் சிவம் என்ற சொல்லுக்கு உரியது.

சுயநலமில்லாமல் பிறரிடம் அன்பு செலுத்தும்போது அது அதிக ஆற்றல் பெறுகிறது. பாகுபாடின்றி அனைவருக்கும் நன்மை செய்வதே நமது நோக்கமாக இருக்க வேண்டும் என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" என்ற திருமூலரின் வாக்கும் சுயநலமற்ற அன்பையே குறிக்கின்றது.

"உயிர்களிடத்து அன்பு வேண்டும்" என்கிறார் பாரதி. அன்பு வழியாக இயங்கும் உடம்பே உயிருள்ள உடம்பாகும். அந்த அன்பு இல்லாதவர்களின் உடம்பு வெறும் எலும்பைத் தோல் போர்த்தப்பட்ட உடம்பாகும்.

"அன்பின் வழியது உயிர்நிலை. அஃது இல்லார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

என்கிறார் வள்ளுவப் பெருமான்.

அதிகாரத்தால் சாதிக்க முடியாததை அன்பு சாதிக்கும். அதிகாரத்தால் துரும்பைக் கூட அசைக்க முடியாமல் போனவர்கள் உண்டு. அன்பால் மலையையே அசைத்தவர்களும் உண்டு. அன்பு என்பது ஒரு அகண்டமான சக்தி; அற்புதமான மாய சக்தி உடையது. எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துவதுதான் மிகவும் சிறந்த தர்மம். எனவே எல்லா உயிர்களிடமும் இறைவனைக் காணும்படி நமது சித்தர்கள். ரிஷிகள் கூறியுள்ளனர்.

-ஆர்.வீ. கந்தசாமி-

தொடங்கிய இடத்தை தெரிந்துகொள்; அப்போதுதான் முடிக்கும் இடத்தை அறிந்து கொள்ளலாம்.

# சந்தம், இராகம், தாளம் அனைத்தும் நிறைந்த இசைக் கருவூலமே அருணகிரிநாதரின் திருப்புகழ்

– திரு மு.க. மாசிலாமணி அவர்கள் – (தொடர்ச்சி...

முருகனின் பேரருளுக்காளாகித் தன் புகழைப் பாடுமாறு அடியும் எடுத்துக் கொடுத்தும் முருகன் பணித்ததிலிருந்து நிறைமொழி மாந்தரான அருணகிரிநாதரின் நாவிலிருந்து வேதசாரம் போல் வெளிவந்த திருப்புகழ்ப் பாசுரங்கள் மந்திரங்களுக்கு நிகரானவை. அவரே சில பாடல்களில் தன் கவிதைகளின் மகிமையினைக் கூறியுள்ளார்.

"அனுதினமுன் திருப்புகழைக் கற்பார்க்குச் சித்தி எட்டும் எளிதாமே" என்றும்

"திருப்புகழை யுரைப்பவர்கள் படிப்பவர்கள் மிடிப்பகை
செயித்தருளும்..." (பழநித் திருப்புகழ்) எனத் திருப்புகழ்ப் பாடல்களை ஓதி விளக்கவுரை செய்பவர்களுக்கும் படிப்பவர்களுக்கும் வறுமை, பகை என்பன நீங்குமென்றும்,

"திருப்புகழ் விருப்பமொடு படிப்பவ
ரிடுக்கினை யறுதிடு மெனவோதும்"
(திருத்தணிகைத் திருப்புகழ்)

எனத் திருப்புகழை விருப்பமுடன் படிப்பவர்களுக்குத் துன்பம் நீங்கும் என்று கூறும் அருணகிரிநாதர்,

"சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்கும்
செகுத்தவ ருயிருக்கு சினமாக
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் செயல்தாராய்..."

என்ற திருத்தணிகைத் திருப்புகழில், திருப்புகழை மனம் ஒன்றி ஓதுவார்க்கு நினைத்தவை எல்லாம் வெற்றியாகக் கைகூடுமென அடித்துச் சத்தியம் செய்வதுபோல் திருப்புகழுக்குள்ள பேராற்றலினை உறுதிபடக் கூறுவர். இவ்வாறு திருப்புகழ் என்னும் சமுத்திரத்துள் உள்ளே செல்லச் செல்ல அருமையான முத்துக்கள் வந்துகொண்டே இருக்கும். அருணகிரிநாதர் "பக்தர்க ணப்பிரிய..." எனத் தொடங்கும் திருச்செங்கோட்டுத் திருப்புகழில் "திருப்புகழ் சிறிது செப்பென வைத்துலகிற் பரவத் தெரிசித்த வநுக்ரக மறவேனே..." எனக் கூறுவதினூடாகத் தனது திருப்புகழ் தான் வாழுங் காலத்திலேயே உலகிற் பரவிய சிறப்பைக் குறிப்பிட்டுள்ளாராயினும் அது அவர் காலத்தில் மட்டுமன்றி இன்றும் இனிவரவிருக்கும் ஊழியுள்ள காலம்வரை நீடு நின்று நிலைத்து மனுக்குலத்திற்கு வழிகாட்டும். ஏனெனில்

மந்திரமனைய உயிர்த்துடிப்புடைய சொற்கள், சொற்றொடர்களைக் கையாண்டு திரும்பத் திரும்ப ஒரு ஒழுங்கில் ஏற்ற ஏற்ற தாளத்துடனான சந்த இசைமூலம் சாதாரண மனித ஆற்றலுக்கு எட்டாத அழகான கவிதை நடையில் மனித வாழ்க்கையினைச் செம்மைப்படுத்தும் அரிய நற்சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ள அப்பனுவல் சமய, சமூக, இலக்கிய, ஆன்மீகத் துறைகளுக்குக் கனதியான பெறுமதி மிக்க ஒரு சொத்தாக அதனை வழங்கியுள்ள மையால் அது சாவா இலக்கியமாக என்றும் வாழும். எல்லாவற்றிற்கும் மேலாக இதிகாசம், புராணம், உபநிஷதம், தேவார திருவாசகங்கள், திருமந்திரம், சைவ சித்தாந்தம் முதலிய அனைத்தும் விளக்குகின்ற தத்துவச் சிந்தனைகளும் அறஞ்சார் கருத்துக்களும் திருப்புகழில் எடுத்தாளப்பட்டுள்ளமையும் திருப்புகழின் மேன்மையினை மேலும் உயர்த்துகின்றன. திருப்புகழின் இத்தகைய சிறப்புக்களினால்த்தான் அதனை நன்கு கற்ற தாயுமானர்,

"ஐயா அருணகிரி அப்பா உன்னைப் போல்
மெய்யாக ஒரு சொல் விளம்பினர் யார்?"

என உணர்வு மேலிட அருணகிரிநாதரின் அதிசிறப்பை வியந்து பாடுவர்.

இசையுலகில் லயம் என்னும் தாள வகைகள் நிரம்பிய கருவூலமாகத் திகழுந் திருப்புகழ் மூலமாக அருணகிரிநாதர் உருவாக்கிய புத்தெழுச்சி சமூக ரீதியான உயர்வுக்கும் பண்பாட்டு ரீதியான மலர்ச்சிக்கும் ஒட்டுமொத்தமாக அருணகிரிநாதர் ஆற்றுப்படுத்துகின்ற இறுதி நிலையான "அனுபூதி" அடைதலென்ற ஆன்மிக இலக்கிற்கும் வழிகாட்டும் ஓர் ஒப்பற்ற பொக்கிஷமே திருப்புகழ். மனுக்குலமும் அவ்வாறான உயர்நிலையினை எய்து வதற்காகத் தன் அவதார நோக்கை அர்ப்பணித்த அவ்வனுபூதிமானின் பாசுரங்களை வெறுமனே பாடுவதனாலோ அல்லது பேசுவதனாலோ மட்டும் முழுமையாக அவற்றினை உணர்ந்தனுபவிக்க முடியாது. மாறாகத் திருப்புகழ் என்ற ஞானப் புதையலில் அந்த மகானு பாவன், வியத்தகு முறையில் விஞ்ஞானம் விரிவடைந்துள்ள இன்றைய நவீன அறிவியல் உலகுக்கும் பொருந்தும் முறையில் பொதிந்து வைத்துள்ள நல்லுரைகளை உள்ளம் ஒன்றிய நிலையில் திரும்பத் திரும்பத் தினமும் ஓதி ஓதி உணர்ந்தும் நிஜ வாழ்க்கையில் கைக்கொண்டொழுகுதல் மூலமுமே அருணகிரிநாதர் தன் ஆக்கத்தினூடாக வற்புறுத்துகின்ற உயர்நிலையினை எய்த முடியும்.

(முற்றும்)

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| செப்ரெம்பர் 10 | ஆவ | 25 | சனி | குங்கிலியக்கலயர் |
| செப்ரெம்பர் 29 | புரட் | 13 | வியாழன் | அருணந்தி சிவாச்சாரியார் |
| ஒக்டோபர் 02 | புரட் | 16 | ஞாயிறு | சங்கரபண்டிதர் |
| ஒக்டோபர் 14 | புரட் | 28 | வெள்ளி | கடையிற்சுவாமி |
| ஒக்டோபர் 30 | ஐப் | 14 | ஞாயிறு | மெய்கண்டதேவர் |

உன் சோம்பேறித்தனம் உன் வாழ்வின் தடைக்கல்லாய் அமையலாம். எச்சரிக்கையாய் இரு.

# பக்தி இலக்கிய வரலாற்றில் காரைக்காலம்மையார்

–செல்வி சோபிதா முகுந்தன் அவர்கள் –

பல்லவர் காலத்தில் பெருக்கெடுத்த பக்தி மார்க்கம் சங்கமருவிய காலத்திலேயே ஊற்றெடுக்கத் தொடங்கியதெனலாம். பெரிய புராணம் போற்றும் அறுபத்துமூன்று நாயன் மார்களுள் மகளிர் மூவர் ஆவர். அவர்கள் காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியர், இசையானியர் ஆகியோராவர். அவர்களில் சைவசமயம் பக்தி இலக்கியம் ஆகியவற் றின் வளர்ச்சிக்கு முன்னோடியாக விளங்கி யவர் காரைக்காலம்மையார் ஆவர்.

அவர் இந்தியாவின் சோழ நாட்டில் உள்ள காரைக்கால் என்னும் நகரில் வாழ்ந்த வணிகர் குலத்தவரான தனதத்தன் என்ப வருக்கு மகளாகப் பிறந்தவர். பெற்றோர் இவருக்கு புனிதவதியார் என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர். புனிதவதியாரின் இள மைப் பருவம் இறையுணர்வு பொலிந்து விளங்கியது. மழலைப் பருவத்திலேயே சிவ னின் திருவடிக்கு ஆட்பட்டு எல்லையற்ற பேரன்பு ததும்பும் சொற்களைப் பேசத் தொடங் கினார். இவ்வாறு அம்மையார் பிள்ளைப் பருவத்திலேயே சிவபக்தியுடன் விளங்கிய மைக்கு அவரது பாடலே அகச் சான்றாக விளங்கியது.

“பிறந்து மொழி பயின்ற பின்னெல் லாங் காதல் சிறந்து நின் சேவடியே சேர்ந் தேன்” என்று தாம் பாடிய அற்புதத் திருவந் தாதியில் கூறியுள்ளார். கொழுந்து வளர்வது போல் வளர்ந்து வந்த புனிதவதியாரிடம் இறையன்பும் உடன் வளர்ந்து வந்தது. சிறுமியருடன் விளையாடும்போது கூட சிவ னைப் பற்றிப் பேசுவதுடன் சிவனடியார் தொண்டிலும் புனிதவதியார் ஈடுபடலானார். பேரழகுடன் வளர்ந்து வந்த புனிதவதியார் மணப்பருவத்தை எய்தினார். இந்நிலையில் நாக பட்டினத்தில் இருந்த நிதிபதி என்னும் பெருங்குண வணிகன் மகன் பரமதத்தனுக்கு புனிதவதியாரை மணம் முடித்து வைத்தனர். திருமணமான பின்னர் மகளிர் கணவர் ஊர் சென்று இல்லறம் நடத்தலே மரபு. ஆனால் தனதத்தனுக்கு புனிதவதியாரே ஒரே மக ளாக இருந்ததால் காரைக்காலிலேயே மகளை யும் மருமகனையும் இல்லறம் நடாத்தப் பெருஞ்செல்வத்தைக் கொடுத்தார். பரமதத் தனும் தன் குடி மரபிற்கேற்ப வணிகத்தில் செல்வம் பெருக்கும் முயற்சியில் ஈடுபட்டான். இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வந்த புனிதவதியாரும் சிவபெருமானின் திருவடி யிடத்து நீங்காத அன்புடையவராக சிவனடி யார்களை உபசரித்தும் இல்லறப் பண்பில் பிறழாமலும் வாழ்ந்து வந்தார்.

இந்நிலையில் பரமதத்தனிடம் வந்த சிலர் அவனிடம் இரு மாங்கனிகளை வழங் கினர். அவனும் அக்கனிகளை ஏவலரிடம் கொடுத்து தன் இல்லத்திற்கு அனுப்பி வைத் தான். அவ்வேளை சிவனடியார் ஒருவர் மிக்க பசியுடன் புனிதவதியாரின் திருமனைக்கு வந்திருந்தார். அத்தொண்டரின் நிலையறிந்த புனிதவதியார் அவரை உபசரித்து உணவு படைத்தார். அப்போது கறி சமைக்கப்படாமல் இருந்ததால் கணவன் பரமதத்தன் அனுப்பி வைத்திருந்த இரு மாங்கனிகளில் ஒன்றைக் கறியமுதாகப் படைத்து மகிழ்ச்சியோடு அடி யாரை அமுது செய்வித்தார். பெரு விருப்போடு

*உன் அவசரப் பேச்சு உன்னை அனாதரவாக்காமல் பார்த்துக்கொள்.*

சுவையான மாம்பழத்தையும் உண்டு புனித வதியாரின் உபசரிப்புக்கு மகிழ்ந்து சென் றார் அந்த சிவனடியார். அதன் பின்னர் பரமதத்தன் தன் வீட்டுக்கு உணவு உண்ண வந்தான். கணவருக்கு சுவைமிகு கறிவகை களுடன் உணவு பரிமாறியபின் கணவன் அனுப்பி வைத்த மாங்கனிகளில் எஞ்சியிருந்த ஒரு மாம்பழத்தையும் புனிதவதியார் கண வனின் இலையில் இட்டார். அந்த மாங்கனி யின் சுவை மிகுதியினால், தாம் அனுப்பிய "இன்னொரு மாம்பழத்தையும் இடுக" எனச் சொல்ல, பழத்தை எடுத்துவரச் செல்பவர் போல புனிதவதியார் அங்கிருந்து அகன்றார். அம்மையார் என்ன செய்வதென்று தெரியாது மனங்கலங்கி இறைவனை வேண்டினார். இந் நிலையில் இறைவன் அருளால் கனியொன்று அவர் கையில் வந்து சேர்ந்தது. அதனை மகிழ்வோடு கொண்டுவந்து கணவரிடம் கொடுத்தார். அதனை உண்ட பரமதத்தன் "இது முந்தைய கனியைவிட மிகவும் சுவை உடையதாய் உள்ளது. உனக்கு இது ஏது?" என்று வினவினான். இதனால் கலக்கங்கொண்ட புனிதவதியார் உண்மையைக் கணவனிடம் மறைத்தலாகாது என்பதால் நடந்தவைகளைக் கூறினார்.

அதைக் கேட்ட பரமதத்தன் "அப்படி யாயின் இன்னொரு மாங்கனியை இறை வனிடம் பெற்றுத்தரும்படி கூற" புனிதவதி யாரும் இறைவனை வேண்டி மாங்கனி பெற் றுக் கணவரிடம் கொடுத்தார். அக்கனியைப் பரமதத்தன் பெற்றவுடன் அது மறைந்து விட்டது. அதனால் வியப்படைந்த கணவன், "இவள் பெண் இல்லை, தெய்வமே" என இவளை விட்டு நீங்கிவிட வேண்டும் என முடிவு செய்தான். வேற்று நாட்டுக் கடற் கரைப் பட்டணத்தை அடைந்தான். அங்கு வேறொரு வணிகக் குலப்பெண்ணை மணந்து வாழ்ந்து வந்தான். அவனுக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. தன் முதல் மனை வியைத் தெய்வமாக நினைத்தவனாகையால் அப்பிள்ளைக்கு புனிதவதி என்ற பெயரைச் சூட்டினான்.

பரமதத்தன் வேறொரு பெண்ணுடன் வாழ்க்கை நடத்துவதை அறிந்த உறவினர், புனிதவதியாரைப் பரமதத்தனிடம் சேர்த்திட விரும்பி, அந்தத் தகவலை அவனுக்கு அனுப்பியதுடன், புனிதவதியாரையும் அழைத் துக்கொண்டு அவனது ஊருக்குப் போயினர். புனிதவதியாரின் வருகையை அறிந்த பரம தத்தன் தன் மனைவியோடும் குழந்தை யோடும் எதிர் சென்று புனிதவதியாரின் திரு வடிகளில் வீழ்ந்து வணங்கி "நான் உம் அருளால் வாழ்கிறேன். இச் சிறு குழந் தைக்கு உங்கள் பெயரைச் சூட்டியுள்ளேன்" என்றான். கணவன் தன்னடியை வணங்கிய தால் புனிதவதியார் கலக்கம் கொண்டார். அவருடைய சுற்றத்தார் "உன் மனைவியை நீ ஏன் வணங்குகிறாய்?" என வினாவினர். அதற்கு பரமதத்தன் "இவர் மானிடரல்ல; தெய்வம். இதனை நானறிந்தே அவரை விட்டகன்றேன். ஆதலால் இவரை நீங்களும் வணங்குங்கள்" என்றான். கணவனின் நிலையை உணர்ந்த புனிதவதியார் சிவனைச் சிந்தித்து மனம் ஒன்றி "கணவன் வேண்டாத இவ் உடலை நீங்கி உன் திருவடிகளைப் போற் றும் பேய் வடிவம் அடியேனுக்கு வேண்டும்" என வேண்டித் தன் அழகை உதறி பேய் வடிவம் பெற்றார். சிவனின் அருளால் சிவஞானம் கைவரப்பெற்ற அம்மையார் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணி மாலை ஆகிய இரண்டையும் பாடி அருளி னார். பின்னர் தம்முள் ஞானவுணர்வு பொங் கக் கயிலாயத்துக்குச் சென்றார். அம்மலை யில் காலால் நடக்கக்கூடாது என எண்ணி தலையினால் நடந்து சென்றார். அப்போது உமையம்மையார், "தலையால் நடந்து

*ஆர்வம் உடையோர் ஆர்வத்தைத் தூண்டுவர்; அன்பு உடையோர் அன்பைத் தேடுவர்.*

வரும் எலும்பு உடம்பு பெற்ற இதன் அன்புதான் என்னே!" என்று கேட்க, இறைவனும் "இவள் நம்மைப் பேணும் அம்மைகாண்! உடம்பையே மாற்றிப் பெருமைசேர் வடிவம் வேண்டிப் பெற்றனள்" என்றுரைத்தார். பின், நாடிவரும் அந்த அம்மையாரை நோக்கி "அம்மையே" என்று அழைக்க அம்மையாரும் "அப்பா" என்று அழைத்தபொழுது "நம்மிடத்து ஈண்டு வேண்டுவதென்ன?" என்று இறைவன் கேட்டதற்கு அவர் இறைவனிடத்தில் இறவாத அன்பு வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

இவ்வாறு அம்மையார் வேண்டியவாறே அருளிச் செய்த இறைவன் திருவாலங்காட்டில் நாம் ஆடும் திருநடனத்தைக் கண்டு "கொங்கை திரங்கி" எனத் தொடங்கி திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் பாடினார். அம்மையார் பாடிய பாடல்கள் பதினோராம் திருமுறையில் உள்ளடக்கப்பட்டது.

காரைக்காலம்மையார் பாடியருளிய பிரபந்தங்கள் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் என்பனவாகும். இவையாவும் 140 செய்யுளையுடையன. இவை பல்லவர் காலத்துச் சமய இலக்கியங்களை உருவாக்கி புதுவழியிற் செல்ல வைத்த அத்துணைப் பெருமையுடையவை. அவர் சைவம் தொடர்பான இலக்கியங்களை பொருள் மரபில் வைத்துப் பாடியுள்ளார். இவருக்கு முதல் யாரும் பக்தி யையும் பாடுபொருளாக வைத்துப் பாடிய சந்தர்ப்பங்கள் மிகமிகக் குறைவு. இவர் பாடிய அற்புதத் திருவந்தியானது பல்லவர் காலத்தில் அந்தாதித் தொடையாக பாடும் மரபு தோன்றக் காரணமாயிற்று. பல்லவர் காலத்து இலக்கியப்போக்கிற்கு வழிகாட்டி வைத்த பெருமை அம்மையார் அருளிச் செய்த பிரபந்தங்களுக்கே உண்டு.

ஒரு புலவரின் பெருமையை இவர் பாடிய பாடற் தொகையை மட்டும் கொண்டு அளவிடுதல் பொருந்தாது. அம்மையார் இயற்றியவை நான்கு சிறிய பிரபந்தங்களெனும் இவை பல்லவர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் பொருள் மரபில் வழிகாட்டி நின்றதனால் அவரை ஒரு பெரும் புலவர் என்றே கொள்ள வேண்டியுள்ளது.

அம்மையே என்று அழைக்கப்பட்ட காரணத்தினால் "காரைக்காலம்மையார்" என்று பெயர் பெற்றார். அம்மையாரின் குருபூசை பங்குனி சுவாதியில் கொண்டாடப்படும் அத்தினத்தில் நாமும் அம்மையாரின் இறைவழிபாட்டின் சிறப்புக்களை அறிந்து பயன்பெறுவோம்.

---

**ஆன்மிகச் சிந்தனை**

பெரும்பாலும் தேவையற்ற ஆசைகளை வளர்த்துக்கொள்வதுதான் மனிதன் படும் அல்லல்களுக்குக் காரணமாக அமைகிறது. வேண்டாத பல விஷயங்களைப்பற்றி நினைத்து நாம் மனதைப் புண்ணாக்கிக் கொள்கிறோம். இந்த வீண் சிந்தனைகளில் பல உண்மையில், நமக்கு சம்பந்தம் இல்லாதவை. இப்படி நடக்குமோ, அப்படி நடக்குமோ, என்று வீணாக கற்பனைகள் செய்வதில் ஈடுபடுவது தேவையற்றது. மனதை நாம் நம்மிடம் வைத்துக் கொண்டால், அது நம்மை துன்பங்களுக்கு ஆளாக்கும் மாறாக, நம் மனதை இறைவனிடம் வைத்துவிட்டால் அது நமக்கு ஏராளமான நன்மைகளையே தரும்.

*எதை இழந்தீர்கள் என்பதல்ல முக்கியம். என்ன மிச்சமிருக்கிறது என்பதே முக்கியம்.*

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்



[விரிவான பொருளுரையும் தெளிவுரையும்]

முனைவர் ஆ. ஆனந்தராசன்

## 45. குருவடிவாகிய போர்வை

பார்வை யென மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வை யெனக் காணா புவி.

**பொருள்:**

பழகிய விலங்கைக் காட்டிக் காட்டு விலங்குகளைக் கைப்பற்றுவதுபோல, இறைவன் நம்மைப்போல் இருப்பவராகிய ஞான குருவைக் கொண்டு பக்குவ ஆன்மாக்களை வயப்படுத்தி ஆட்கொள்ளுகிறான். இறைவன் தன்னை மறைத்துக் கொண்டு வரும் போர்வையே குருவடிவம் என்ற உண்மையை உலகத்தார் உணர மாட்டார்.

**சொற்பொருள்:**

பார்வையென- காட்டு விலங்குகளைக் கைப்பற்றுவதற்கு வசதியாக வேடர் பழக்கி வைத்திருக்கும் பார்வை விலங்குபோல, மக்களை- பக்குவ ஆன்மாக்களை, முன் பற்றிப் பிடித்தற்கு- ஆட்கொள்ளுதற் பொருட்டு, ஆம் போர்வையென- இறைவன் தன்னை மறைத்துக்கொண்டு வரும் போர்வையே குருவடிவம் என்று, புவி- உலகத்தார், காணா- உணரமாட்டார்கள்.

**விளக்கம்:**

தீ இரும்பைத் தன் வண்ணம் ஆக்குவதுபோலச் சுத்தான்மாவாகிய குருவைச் சிவன் தானாக்கி விடுவான். அந்நிலையில் அந்தக் குரு சிவனேயாவார். அவர் சிவனேயான தன்மை பக்குவம் வாய்ந்த மாணவர்க்கு இனிது புலப்படும்.

**சற்குருவின் செயல்:**

சிவனது அருளே தன் வடிவாய் நிற்கின்ற உண்மைக் குருவாகிய அவர் தன்னை அடைந்த மாணவர் பலருள்ளும் பாசப்பற்று அறும் பக்குவத்தை எய்திய மாணவனுக்கே ஞானத்தை உணர்த்துவார். அவர் ஒரு வார்த்தையைச் சொல்வாராயின், அந்த ஒரு வார்த்தை முப்பொருளின் இயல்பை உள்ளவாறு விளங்கச் செய்யும். அவர் தனது அருள்

*அநியாயத்திற்கு ஆயிரம் வக்கீல்கள் தேவை. ஆனால் நியாயத்திற்கு கடவுளின் கருணைபோதும்.*

மொழியாலும், திருவடி சூட்டலாலும் தன்னை அடைந்த மாணவராகிய பசுவைப் பாசங்களினின்றும் நீக்கிச் சிவத்தில் சேர்க்கவல்ல சற்குரு ஆவார்.

மேற்கூறியவற்றால், ஞானகுரு தோற்றத்தால் நம்மில் ஒருவர்போல இருப்பினும் உண்மையில் அவர் நம்மின் வேறானவர் என்பது விளங்கும். ஓர் உவமைமூலம் இக்கருத்தை விளங்க வைக்கிறார் ஆசிரியர் உமாபதிசிவம்.

**பார்வை விலங்கும், குரு வடிவமும்:**

வேடர்கள் காட்டு விலங்குகளைக் கையகப்படுத்துவதற்காக அவ்வவ் இனத்து விலங்கினைப் பழக்கி வைத்திருப்பர். அது பார்வை விலங்கு எனப்படும். அவ்விலங்கினைக் கொண்டு அவ்வினத்தைச் சேர்ந்த காட்டு விலங்குகளை அழைக்கச் செய்து பின் அவற்றைக் கைப்பற்றுவர்.

இந்தப் பார்வை விலங்கு போன்றது குரு வடிவம். பார்வை விலங்கைக் கண்டு ஏனைய விலங்குகள் அச்சமின்றி அணுகி வரும். அதுபோல இறைவன் தன்னை மறைத்துக்கொண்டு நிற்கும் குருவடிவம் பக்குவ ஆன்மாக்கள் ஆகிய மாணவர்கள் அச்சமின்றி அணுகி ஆட்படுவதற்கு வாயிலாய் உள்ளது.

**நம்மின் வேறானவர்:**

பார்வை விலங்கு தோற்றத்தால் ஏனைய விலங்குகள்போல இருப்பினும் உண்மையில் அவற்றினின்றும் வேறானதுபோல, ஞான குருவும் நம்மனோர்போலத் தோன்றினாலும் உண்மையில் அவர் நம்மின் வேறானவரேயாவார்.

## 46. அருளாசிரியரின் இன்றியமையாமை

எமக்கு என்? எவனுக்கு எவை தெரியும் அவ்வ
தமக்கு அவனை வேண்டத் தவிர்.

**பொருள்:**

எந்த ஒருவனுக்கு எந்தக் கலை தெரியுமோ அந்தக் கலையை அறிந்து கொள்வதற்கு அந்த ஒருவனது துணையையே நாடவேண்டியுள்ளது. அப்படியிருக்க, ஞானமாகிய அரிய பொருளை அறிய விரும்பும் நாம் அந்த ஞானத்தை உணர்த்தும் வல்லமையையுடைய ஞானாசாரியாரின் துணையை அல்லவா நாடவேண்டும்? அப்படிச் செய்யாமல், ஞானாசாரியரின் துணை இல்லாமலே ஞானத்தைப் பெறலாம் என்று கருதுவது பேதமையாகும்.

**சொற்பொருள்:**

எவனுக்கு- எவன் ஒருவனுக்கு, எவை தெரியும்- எக் கலைகள் நன்கு தெரியுமோ, அவ்வ- அக்கலைகளை, தமக்கு- தாம் தெரிதற் பொருட்டு, அவனை வேண்ட- அவனது துணையையே உலகத்தார் நாடி நிற்றல் எங்கும் காணப்படும் இயல்பாக இருக்க, எமக்கு- ஞானத்தைப் பெற விரும்பும் எமக்கு, தவிர்- அதனை உணர்த்தவல்ல ஞானாசிரியரின் துணையைத் தவிர்த்தல், ஏன்?- எவ்வாறு கூடும்?

**விளக்கம்:**

இச்செய்யுளின் நடை, அதன் பொருள் எளிதில் விளங்காதபடி கடினமான முறையில் அமைந்துள்ளது.

எனவே, சொற்களைப் பின்வருமாறு அமைத்துக் கொண்டு பொருள் செய்தல் வேண்டும்.

எவனுக்கு எவை தெரியும்- எவன் ஒருவனுக்கு எக் கலைகள் தெரியுமோ?

அவ்வ தமக்கு அவனை வேண்ட- அக்கலைகளை அறிந்து கொள்வதற்கு அந்த ஒருவனது துணையை நாடுதலே உலகத்தில் காணப்படும் இயல்பாக இருக்க,

தவிர் தமக்கு என்?- ஞானத்தை உணர்த்தவல்ல ஞானாசிரியர் துணையைத் தவிர்த்தல் ஞானத்தை உணர விரும்பும் நமக்கு எங்ஙனம் கூடும்?

இதன் பொருளை மேலும் சிறிது விளக்குவோம். வெளியூரில் தங்கி வேலை பார்க்கும் ஓர் இளைஞன் சமையல் செய்யும் முறையைக் கற்றுக்கொள்ள விரும்பினான். கடைக்குச் சென்று சமையல் செய்வது எப்படி என்பது பற்றிய வகை வகையான புத்தகங் களில் சிலவற்றை வாங்கி வந்தான். அவற்றைப் படித்துப் பார்த்தபோது அவனுக்குக் குழப்பந்தான் உண்டாயிற்று. ஏனென்றால் ஒன்றில் உள்ளதுபோல, மற்றொன்றில் இல்லை. ஏதோ ஒரு வகையாகத் தாளில் குறிப்பெடுத்துக்கொண்டு சிற்றுண்டி செய்து பார்த்தான். தோசை மாவைக் கல்லில் வார்த்துப் பெயர்த்துப்போட முயன்றான். ஆனால் அது கல்லோடு அத்துவித இயைபு கொண்டுவிட்டது போலும்! திருப்பிப் போடமுடியாதபடி அது கல்லோடு ஒட்டிக்கொண்டு விட்டது. மற்றொரு சமயம், உப்புமா என்ற பெயரைப் பார்த்து உப்பை அள்ளிப் போட்டுவிட்டான் போலும்! அதைக் கீழே கொட்டுவதைத் தவிர வேறு வழியில்லை. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தான். சமையல் புத்தகங்களையெல்லாம் மூட்டைகட்டி வைத்தான். பேசாமல் (சமையல் தெரிந்த) ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு விட்டான்.

எளிய சமையலுக்குக்கூட நூல்கள் கைகொடுத்து உதவாதபோது, இசை, நாட்டியம் போன்ற நுண்கலைகளை அவை பற்றிய நூல்களைப் பயின்றே ஒருவர் தெரிந்துகொண்டு விடலாம் என்று கூறுவது எவ்வளவு அறியாமை என்பது புலனாகும். அவ்வக் கலைகளில் வல்ல ஆசிரியரைத் துணையாகக் கொண்டே அக்கலைகளை நாம் அனுபவமாகத் தெரிந்து கொள்ள முடியும். அதற்கு அவ்வாசிரியரிடம் பல காலம் முறையாகப் பயில வேண்டும். அவரது வழிகாட்டுதல் மூலமாகவே அக்கலைகளைப் பற்றிய நுணுக்கங்களைப் பெற முடியும்.

உலகியல் கலைகளின் நிலையே இவ்வாறிருக்க, உலகியல் கடந்த பொருளாகிய ஞானத்தை ஞானாசிரியர் இல்லாமலே நூல்கள் வழியாகப் பெற்றுவிட முடியும் என்று கூறுவது எத்துணைப் பேதைமை என்பது இதனால் விளங்கும்.

ஞானாசிரியன் இல்லாமல் கற்கும்போது ஞான நூல்களின் பொருள் விளங்காமல் நிற்கும்; அல்லது மாறுபாடாகத் தோன்றும். ஆதலால் ஞான நூல்கள் ஞானகுரவன் இன்றிப் பொருள் தெளிவைத் தரமாட்டா.

சத்திநிபாதம் என்னும் பக்குவம் வரப்பெற்றோர், தாமே மெய்ந்நெறியை உணர்ந்து ஒழுக முடியாதா? அவருக்கும் ஞானாசிரியர் வேண்டுமோ? என்று கேட்கலாம்.

*பதவி உங்களுக்குப் பெருமை தருவதைவிட நீங்கள்தான் அதைப் பெருமைப்படுத்த வேண்டும்.*

பிறவியிலேயே கண்ணில்லாதவன் ஒருவன் மருத்துவ முறையினால் கண் பார்வை பெற்றான் என்றால், அவன் பொருள்களைக் காணும் திறனைப் பெற்றவன் ஆகிறான். "ஆனால், இது இன்ன பொருள்" என்பதை அவனால் உணரமுடியாது. அந்தப் பொருளை அறிந்த வேறொருவன் உணர்த்தவே அவன் அதனை உணர்தல் கூடும்.

அதுபோல, சத்திநிபாதம் என்னும் பக்குவநிலையில் ஆணவ மல மறைப்பு நீங்கப் பெற்றவர் முப்பொருள்களின் இயல்பை உள்ளவாறு உணரும் ஆற்றலைப் பெறுவரே யன்றித் தாமே அப்பொருள்களின் இயல்பைத் தெரிந்து கொள்ள மாட்டார். அவற்றின் இயல்பையெல்லாம் உணர்ந்த ஞானாசிரியர் உணர்த்தவே அவற்றை உணர்ந்து கொள்ள முடியும்.

சத்திநிபாதம் வரப்பெற்றோர்க்கும் அருளாசிரியரின் துணை இன்றியமையாதது என்பதை இச்செய்யுளில் வலியுறுத்தியுள்ளார் உமாபதி சிவம்.

(தொடரும்...

**சந்நிதியில் வீற்றிருந்து தரணியெலாம் காப்பவனே**

சந்நிதியில் வீற்றிருந்து தரணியெலாம் காப்பவனே
உன்னியிடு வோர்க்குநல்ல உறுதுணையே - தன்னிகரில்
வேலதனைத் தாங்கி வினையெலாம் தீர்த்திடுவாய்
பாலனே யெமக்கா ருளர்.

**தேறியிடா மாந்தர்க்கு வழிகாட்டுவாய்**

மூவிரண்டு முகமுடையாய் முகமுழுதும் அருளுடையாய்
ஆறிரண்டு தோளிலும்தான் அருளுடையாய் - தேறியிடா
உளமுடைய மாந்தர்க்கு உய்யும்வழி காட்டிடுவாய்
அழகுநிறை சந்நிதி யுளோய்.

**கார்த்திகையின் கந்தனே காத்திடுவாய்**

கன்னியரின் நாயகனே கலியுகத்தின் வரதனே
மன்னிய சந்நிதியில் உறைவோனே - தன்னிகரில்
கூர்த்தவடி வேல்கொண்டு குவலயத்தைக் காத்திடுவாய்
கார்த்திகையின் கந்தனே நீ.

**முத்திக்கு வித்தாகும் முருகன் சந்நிதியான்**

சப்திக்கும் கடலருகில் சரவணனே வீற்றிருந்து
எத்திக்கும் அருளலையை வீசுகின்றாய் - முத்திக்கு
வித்தாகும் முருகன் சந்நிதி யானைப்
பற்றிப் பிடித்திடுவோம் நாம்.

-திருமதி பொன். பாக்கியம்-

ஒரேயடியாக உச்சிக்குப் போய்விடவேண்டுமென்ற முயற்சிதான் பல துன்பங்களுக்குக் காரணம்.

# ஆரா அமுத ஆழ்வாரும் வல்லிபுரத்து ஆழ்வாரும்

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

அமுது, அமிழ்து, அமிர்தம், அமுதம், மருந்து என்பன தேவாமிர்தத்தைக் குறிக்கும். உணவு, சோறு என்பனவற்றையும் குறிக்கும். தேவர்கள் அமிர்தம் பெறப் பாற்கடலைக் கடைந்ததாக ஒரு கதை புனையப்பட்டிருக்கிறது. இந்தத் தேவாமிர்தத்தைப் பக்குவம் நிறைந்தோர் பகிர்ந்துண்பர். அவ்வைப்பாட்டி "மருந்தேயாயினும் விருந்தோடுண்" எனப் பாடியதும் இப்பொருளிலேதான். இப்பிரயோகம் பலரால் எடுத்தாளப்பட்டிருக்கிறது. அவை வருமாறு:

ஆராத இன்னமுதை அம்மான் தன்னை
அய னொடுமா லறியாத ஆதியானைத்
தாராரும் மலர்க்கொன் றைச்ச டையான் தன்னைத்
தத்துவனைத் தன் னொப்பாரில்லாதானை.

திருமுறை- திருத்தாண்டகம். 6:69.1.

ஆரா அமுது அனைய ஆனந்த வாரி என்பால்
தாராமல் ஐயாநீ தள்ளிவிட வந்தது என்னோ?

தாயுமானவர், பலவகைக்கண்ணி 24.

இ.ன்:

ஐயனே தெவிட்டாத அமுதம் போன்ற சிவானந்த சாகரத்தினை எனக்கு அளிக்காமல் நீ என்னைத் திருவருளுக்கு அன்னியமாகத் தள்ளிவிடும்படி நேரிட்டதற்குக் காரணம் என்ன?

தேசனே தேனார் அமுதே சிவபுரனே

திருவாசகம்- சிவபுராணம் 63.

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே!

மேலது 66-67.

ஆர- நிறைய, ஆரா அமுது- உண்ண உண்ணத் தெவிட்டாத இன்னமுதம் போன்றவனே, தேசனே- குரு முதல்வனே!, இனிமை நிறைந்த பிறவிக்கு மருந்தே, அமுது- சாவா மருந்து, ஆர்அமுதே- அரிய அமுதே, ஆரா அமுதே- தெவிட்டாத அமுதமே.

ஆரா அமுதே அருட்கடலே நாயேன்றன்
பேராத வஞ்சப் பிழை போக்கி - யாரேனு
நின்போல்வார் இல்லாதோய் நீயே புறம் பழித்தால்
என்போல்வார் என் சொல்வார் ஈங்கு.

அருட்பா மூன்றாந் திருமுறை 8.

மனிதனுக்குத் துணிச்சலைப்போல உலகில் உண்மையான நண்பன் வேறு யாருமில்லை.

ஆரா அமுதமாய்
அல்லாவி யுள்கலந்து
காரார் கருமுகில் போல்
என்னம் மான் கண்ணனுக்கு
நேராவாய் செம்பவளம்
கண்பாதம் கைகமலம்
பேரார் நீண்முடி நாண்
பின்னும் இழைபலவே.

திருவாய் மொழி 2:5.5

ஆரா அமுது என்ற பாவனை பலரால் மேற்கொள்ளப்பட்டதை இங்கே தந்தோம். இப்பாவமைப்பை வைத்தே குடந்தைச் சக்கரபாணியின் திருநாமமும் அமைந்தது என்ற நிகழ்விற்குச் சாட்சியங்கள் பல உண்டு. எனினும் வல்லிபுரத்திற் கோயில் கொண்ட பெருமாளுக்கு "ஆழ்வார் சுவாமி"யென்று பெயர். வல்லிபுரம் யாழ்ப்பாணத்தில் அமைந்த திவ்விய தேசம்.

வல்லிபுரத்து ஆழ்வார் சுவாமியின் மகத்துவம் இத்திருநாமத்திலேதான் தங்கியிருக்கிறது. வல்லிபுரம் + ஆழ்வார்- வல்லிபுர ஆழ்வார் என்றாகும். அத்துச் சாரியைநிலை மொழியுடன் இசைத்தால் வல்லிபுரத்து ஆழ்வார் என்றாகும். இப்புணர்ச்சி விதி தெரியாதவர் "வல்லிபுர" என்பது சுவாமியின் பெயர் என நினைக்கின்றனர். இஃது இடத்தால் வந்த ஊரைக் குறிக்கும் இடப்பெயர். இதை முதற் தெரிந்தவர்கள் மூலமூர்த்தியின் பெயர்தான் "ஆழ்வார் சுவாமி" என்று புரிந்து கொள்வர். மூலமூர்த்தியின் பெயர் பற்றி யாரும் சீண்டுவது இல்லை. நம் முன்னோர் எவ்வளவு சிந்தனையோடு இத்திருநாமத்தைச் சூட்டியுள்ளனர். இதை அறியாதோர் தாமும் குழம்பி மற்றவர்களையும் குழப்பிவிடுகின்றனர்.

வைணவ பாரம்பரியத்தில் ஆழங்காற்படல் என்றோர் பிரயோகம் இருக்கிறது. ஆழமான ஈடுபாடு ஆழங்காற்படல். கண்ணனின் திருநாமங்களில் ஒன்று பக்தவத்ஸலன். கண்ணனைப் பிணிக்கும் சாதனம் பக்தி. திருமாலிடம் பக்தி நலம் நிறைந்தவர்கள்- முதிர்ந்தவர்கள் ஆழ்வார்கள். இம்முதிர்வே தீர்ந்த அன்பு. ஆழ்ந்து நின்று அனுபவிப்பவர்கள் என்பது அதன் பொருள். எனவே எம் பெருமானிடம் ஆழ்வார்கள் எப்படி ஆழ்ந்துவிட்டார்களோ, அவ்வளவு அவனும் அவர்களிடத்து அளவற்ற அன்பு உடையவன். இதை "மகிழ்க்குஞ் சிங்கைத் திருவாண்டுள், ஆழநினைவார் தமிலாழ்வார்" என வல்லிபுர மாயவன் பிள்ளைத் தமிழ் நமக்கு உணர்த்துகிறது. (தாலப் பருவம் பக்கம்- 17)

ஆழ்வார் என்றால் கோதைப்பிராட்டி உள்ளிட்ட பன்னிரு ஆழ்வார்களையே குறிக்கும். இவர்களின் அருளிச் செயல்களே திருநாலாயிரம் என்னும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், வைணவ ஆழ்வார் பரம்பரையில் கூரத்தாழ்வார் பிரதான அங்கம் வகிக்கிறார். இராமாயணத்தில் வீபீடணாழ்வார், அநுமாழ்வார் வருகிறார்கள். இராமாயணம் இயற்றியவர் கம்பநாடாழ்வார். சுவாமியின் வாகனமான பெரிய திருவடி கெருடாழ்வார், பாம்பு அநந்தாழ்வார் எனவும் அழைக்கப்படுகிறார். கடைசியாக நம்மாழ்வார் புளியின்கீழ் யோக நிலையில் திருக்கூடலிலும் இருந்தார். அவருக்கும் திருப்புளி ஆழ்வார் என்று பெயர். வைணவ ஷேத்திரங்களில் எழுந்தருளி அருள் பாலிக்கும் ஆலயங்களில் ஆண்டவனுக்கு ஆழ்வார் என்ற திருப்பெயர்

*பெரும் அறிவாளிகள் புத்தகங்களோடு வாழ்க்கையையும் சேர்த்தே படிக்கின்றார்கள்.*

வழக்கில் இல்லை. அவர்கள் திருவாய் மலர்ந்த பாசுரங்களிலோ, அஷ்ட பிரபந்தத்திலோ, தேசிகர் பிரபந்தத்திலோ அவ்வழக்காறு காணப்படவில்லை. ஆனால் குடந்தை ஆரா அமுதனை நாதமுனிகள் ஆரா வமுத ஆழ்வார் என்று பவ்வியமாக அழைக்கிறார்.

ஆரா அமுதாழ்வார் ஆதரித்த பேறுகளைத்
தாராமையாலே தளர்ந்து மிகத் - தீராத
ஆசையுடன் ஆற்றாமை பேசி அமைந்தான்
மாசறுசீர் மாற னெம் மான்.

-திருவாய் மொழிநூற்றந்தாதி 48.

நம்மாழ்வார் திருநாமங்களிலொன்று திருமாறன். அவரது அருளிச் செயல்கள் திருவாய் மொழி. இந்தத் திருவாய் மொழி நூற்றந்தாதி ஒவ்வொரு திருவாய் மொழிப் பகுதியின் இறுதியிலும் அமைந்துள்ளது. எந்தச் சேத்திரங்களிலும் இல்லாத திருநாமம் ஆரா அமுத னோடு சேர்ந்திருக்கக் காரணமே குடந்தைதான்.

ஆரா அமுதே அடியேன் உடலம்
நின்பால் அன்பாயே
நீராய் அலைந்து கரைய வுருக்கு
கின்ற நெடு மாலே
சீரார் செந் நெல் கவரிவீசும்
செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்
கண்டேன் எம்மானே!

-திருவாய் மொழி 5:8.1.

எனவே அதை நினைந்து பாடிய 48ஆம் பாடல் திருவாய் மொழி ஐந்தம் பத்து எட்டாந் திருவாய் மொழியின்கீழ் அமைந்துள்ளது. ஆழ்வார்கள் திருவாய் மலர்ந்த நாலாயிரம் பாசுரங்களையும் ஸ்ரீமத் நாதமுனிகள் "ஆரா அமுதாழ்வார்" எனத் திருநாமம் சாற்றியருளினார்.

இவ்வண்ணமே- வல்லிபுரத்து, கோயில் பராபத்தியக்காரரான எம் மூதாதைகள் ஆழ்வார் சுவாமி என்ற திருநாமத்தை வழங்கினர். நாராயணனுக்கு வாத்ஸல்யம், ஸ்வாமித் துவம், ஸௌசீல்யம், ஸௌலப்பியம் என்னும் நான்கு குணங்களுண்டு. நம்மோடு பெருமானுக் குள்ள ஒரு சம்பந்தந்தான் சுவாமித்துவம். இக்குணம் என்னைக் காட்டிலும் சிறந்தது ஒன்றும் இல்லை என்ற பொருளுடையது இது. எனவே ஆழ்வார் சுவாமி- ஆழ்வார் சுவாமி என்ற திருநாமம் வல்லிபுரத்திற் குடிகொண்ட நாராயணனுக்கே உரிய திருப்பெயராகும். உலகத்திலே ஆழ்வார் சுவாமி என்று மூலவரை அழைக்கும் ஒரேயொரு திருப்பதி வல்லிபுரம் ஒன்றேயாகும்.

தென்பாற் குடந்தை வல்லிபுரச்
செல்வா சிற்றில் சிதை யேலே
திருவார் சிங்கைப் பெருமுதலே
தேவேசிற்றில் சிதை யேலே.

-வல்லிபுர மாயவன் பிள்ளைத்தமிழ். சிற்றில்-10

*உன்னை உண்மையிலே புரிந்துகொண்டிருக்கும் நண்பன்தான் உன்னையே உருவாக்குகின்றான்.*

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

### அத்தியாயம் – 04

## எல்லை இல்லாததை அடைவதற்கான போராட்டம்

### 01. வாழ்க்கைக்கான வழிகாட்டியே கீதை

பகவத்கீதை நன்கு அறியப்பட்ட ஓர் ஆன்மீக நூலாகக் கருதப்படுகின்றது. எனினும் அது உண்மையில் சாதாரண மனிதனுக்கு உரிய ஒரு நூல் அன்று. கீதையின் போதனைகள், அதன் ஒழுக்க விதிகள், அதன் இறுதிக் குறிக்கோள்கள் முதலான எல்லாமே ஒரு வித்தியாசமான தன்மையைக் கொண்டனவாக இருக்கின்றன. அவை யாவும் மனிதனது ஆசைகள், பேராசைகள், முற்கோட்டங்கள், மரபுரீதியாயுள்ள பல வகையிலான சிந்தனைப் போக்குகள் என்பவற்றை வேரோடு அறுத்து எறிகின்றன. இதனால் பகவத்கீதை வாழ்க்கை பற்றிய முற்றிலும் வித்தியாசமான ஒரு பார்வையை எம்முன் வைக்கின்றது. கீதையின் செய்தியை மேலும் மேலும் நாம் சிந்திக்கத் தொடங்குகின்றபோது அதனை எமது நாளாந்த வாழ்க்கைக்கான ஒரு வழிகாட்டியாக ஆக்கிக்கொள்வது மேலும் மேலும் கடினமானதாகவே தோன்றுகிறது. எனினும் கீதையின் குறிக்கோள் அதனை வாழ்க்கை வழிகாட்டியாக ஆக்குவது அன்றி வேறேதும் இல்லை.

### 02. புலன்கள் புதிய அறிவைத் தருவதில்லை.

கீதையின் முதலாவது அத்தியாயத்தில் வருகின்ற அருச்சுனனது வாதங்கள் யாவும் எமது வாதங்களாகக் கொள்ளக்கூடியனவே ஆகும். இந்த உடம்பே இறுதியில் உண்மையானது என்றும், அதனால் உடம்போடு தொடர்புபட்டவை எல்லாம் அதேபோல உண்மையானது என்றும் புலன்கள் தரும் தகவல்கள் தவறில்லாதன என்றும் மனித மனம் சிந்திக்கின்றது. புலன்களும், அவற்றால் புரிந்துகொள்ளப்படுவதும், காரண காரிய நியாயமுமே. இந்த உலகில் நாம் பெறும் அறிவைத் தருகின்ற கருவிகளாக இருக்கின்றன. நாம் இவற்றைப் பயன்படுத்தியே விழுமியங்களை மதிப்பீடு செய்கின்றோம். ஆனால், புலன்கள் இன்றியே புரிதலையும், காரண காரிய நியாயத்தையும் நாம் பெற்றுக்கொள்வது போல மேலோட்டமாகத் தோன்றினாலும் உண்மையில் அவை இரண்டும் புலன்களின் கையாட்களே ஆகும். புலன்கள் தமது காட்சியால் சேகரிக்கும் தகவல்களை அந்தக் கையாட்கள் தமது சொந்த வழியிலேயே புரிந்துகொண்டு நியாயப்படுத்தி அதற்கு உடன்படுவதுபோல எமக்குத் தோன்றுகின்றது. அதனால் உண்மையில் அக்கையாட்கள் எமக்குப் புதிய தகவல்கள் எதையும் தருவதில்லை. உணர்ச்சிகளாலும் காட்சிகளாலும் புலன்கள் எமக்கு எவற்றை

*தன்னைத்தானே சீர்திருத்திக்கொள்பவன்தான் உலகிலேயே மிகச்சிறந்த சீர்திருத்தவாதி.*

வழங்குகின்றனவோ அவற்றுக்கும் மேலான தரத்திலுள்ள அறிவை எமது புரிதல் எமக்கு வழங்குவதில்லை. இதனாலேதான் நாம் ஒரு தோற்றப்பாடான உலகத்திலே இருக்கின்றோம் என்று கூறப்படுகிறது. அத்துடன் எமது நியாயத்தையும், அதற்குப் பின்னாலுள்ள அதன் தொழிற்பாடுகளையும் நாம் மிகவும் கவனமாக உபயோகித்துக் கொள்ளாவிடின் எதிர்பாராத விதமாகத் திடீரென அந்த நியாயமும் புரிதலோடு கைகோர்த்துச் செல்வதாக அமைந்துவிடும். அதனால் அந்தப் புரிதலும் புலன்கள் சொல்வதையே திருப்பிச் சொல்வதாக அமைந்து விடுகிறது.

**03. சரியான நியாயம்.**

அருச்சுனனின் வாதங்கள் அப்படிப்பட்ட புலன்களின் தகவல்களைத் திருப்பிக்கூறும் நியாயமும், புரிதலுமாகவே இருக்கின்றன. நாம் எமது மனோபாவங்களையும், உணர்ச்சிகளையும் நியாயப்படுத்தவேண்டி வரும்போது நாம் பின்பற்றும் வாதங்கள் எல்லாம் அருச்சுனனது வாதங்கள் போலவே இருக்கின்றன. அத்துடன் நாம் அந்த நியாயங்களை எவ்வகையிலாவது வளைத்து மாற்றி நியாயப்படுத்துகின்றோம். இப்போதைக்கு மகாபாரதத்தின் கதையையும், அதன் இதிகாசச் சந்தர்ப்ப சூழ்நிலையையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்துக்கொள்வோம். அப்படி அவற்றை ஒதுக்கி வைத்துவிட்டுக் கீதையின் போதனைகளுக்குப் பின்னாலுள்ள பிரதான ஆன்மீகச் செய்தியை மட்டும் எடுத்துக்கொள்வோம்.

அருச்சுனன் தனது வாதங்களின் அடிப்படையில் ஆயுதம் ஏந்திப் போர் செய்யத் தயங்குவது ஓர் ஆன்மீகச் சாதகன் உண்மையை எடுத்துக்கொள்ளத் தயங்குவதை ஒக்கும் என்றவகையில் நாம் அவதானிக்க முடியும். எமது புலன்களுக்கும், மனோ பாவங்களுக்கும், உணர்ச்சிகளுக்கும், மரபுகளுக்கும், சமூக முற்கோட்டங்களுக்கும் பொருத்தமான ஒரு கடவுளையே நாம் விரும்புகின்றோம். எமது யதார்த்தமும் வாழ்வின் குறிக்கோளும் இந்த உணர்ச்சிகள் முதலானவற்றினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அத்துடன் புலன்களினால் ஒளியூட்டப்பட்ட புரிதலின் அடிப்படையிலேயே ஒரு குறிக்கோளுக்காக எமது வாழ்வை நாம் மதிப்பிடுகின்றோம் என்றே தோன்றுகின்றது. நம்மில் ஒவ்வொருவரும் இந்த முக்கியமான விடயங்களைப் பொறுத்தவரையில் நாமே நமக்கு ஒரு தீர்ப்பு வழங்குபவராக இருக்கவேண்டி உள்ளது. எமது ஆன்மீக இலட்சியங்களுக்கான ஆவல்கள் அல்லது கடவுளை அடைவதற்கான ஆவல்கள் வெளித்தோற்றத்தில் இருப்பதுபோல உண்மையில் நல்ல அடிப்படையின்மீது அமைக்கப்படாது போயிருக்கலாம். உயர்வான புரிதலைக் கொண்டு, ஆன்மீக ஆவல் என்று அழைக்கப்படும் இந்தக் கட்டுமானம் முழுவதையும் பரிசோதிப்போமாயின் அது நொறுங்கிப் போய்விடலாம். நமது சொந்த ஆசை, பேராசை என்ற பலவீனமான வாதங்களின் மீது அக்கட்டுமானத்தை அமைத்துள்ளோம் என்பதைச் சரியான நியாயத்தைப் பயன்படுத்தும் போது நாம் உணர்ந்து கொள்வோம்.

**04. நிறைவுறாத திருப்திகள்.**

உடலோடு வாழ்வதற்கான விருப்பம், அகங்காரத்தைத் திருப்தி செய்வதற்கான விருப்பம், சமூக உறவுகளோடு ஒத்துப்போவதற்கான விருப்பம் என்பவற்றைத் திருப்திகள் என்று சுருக்கமாகக் கூறலாம். நாம் ஒருநாள் இறக்க வேண்டியவர்களே. மாறிக்கொண்டு

*ஆர்வம் இல்லாத இடத்தில் மாபெரும் புதுமைகள் பிறப்பதில்லை.*

இருக்கும் ஓர் உலகிலேதான் நாம் வாழுகின்றோம். அந்த உலகம் எமது விருப்பங்களைத் திருப்தி செய்வது போலத் தோன்றினாலும் உண்மையில் திருப்தி செய்வது இல்லை. எனினும் இந்தப் போலித்தன்மையை உண்மையானது என்றே எடுத்துக்கொள்கிறோம். இந்தப் புலன் உலகப்போலி உத்தரவாதத்தை நியாயப்படுத்தும் நிலையிலேயே நாம் எங்களை வைத்திருக்கின் றோம். எப்படியும் புலன் உலகம் எதனைத் தருகிறதோ, உணர்ச்சிகள் எவை தேவைப்படுகின்றன என்கின்றனவோ அவற்றால் நாம் தூண்டப்படுகின்றோம். நாம் வெளிப்படையில் எப்போதும் உணர்ச்சிவசப்படாதவர்களாகவும், மனப்பாங்குகளுக்கு ஏற்ப நடந்து கொள்ளாதவர்களாகவும் இருந்தபோதும் அடிப்படையில் உணர்ச்சிவசப் பட்டவர்களாயும் எமது மனப்பாங்குகளின்படி நடந்து கொள்பவர்களாகவுமே இருக்கின்றோம். அத்துடன் விடயங்களின் பரந்த உலக அமைப்பினுடைய ஒளியில், தனிமனிதன் என்ற ரீதியில் எமது மூலத்தை நாம் நியாயப்படுத்த முடியாமல் இருக்கின்றோம். நாம் சுதந்திரமாக இருப்பதற்காக எமக்குள்ளே இரகசியமான விருப்பம் உடையவர்களாகவும் இருக்கின்றோம். இந்த உலகத்தில் எதனை இழந்தாலும் அந்த இரகசிய விருப்பத்தைத் திருப்தி செய்ய அவாவுகின்றோம். இந்த அவா உணர்வுபூர்வமாக எமது மனதின் மேற்புறத்திற்கு வருவதில்லை.

**05. நோயையே ஆரோக்கியம் என்கிறோம்.**

மனிதர் அடிப்படையில் சுயநலவாதிகளே ஆவர். மனிதர்கள் மட்டும் அவ்வாறு சுயநலவாதிகள் அல்லர். உலகில் உள்ள எல்லாமே உடலமைப்பில் தம்மைப் பேணிப் பாது காக்கும் தூண்டுதலை உடையனவாக இருக்கின்றன. அத்துடன் பயங்கள் எல்லாவற்றுள்ளும் மரணபயம் மிகப் பெரியதாகத் திகழ்கின்றது. ஆவல்கள் எல்லாவற்றுள்ளும் உயிர்வாழ்வதற் கான ஆவல் மிகப்பெரிய ஆவலாகும். வாழ்வின் மீதுள்ள விருப்பமும், மரணத்தின் மீதுள்ள பயமும் ஒன்று மற்றதன் இருப்பை எமக்கு எடுத்துக்காட்டுவதாகவே அமைந்துள்ளது. ஒவ்வொன் றும் இந்த உடல் எமது சொத்து, எமது உடமை, நாம் நாமே என்பதை உறுதிப்படுத்துகின்றது.

சமூக உறவுகள் நடைமுறையில் மனிதர்களுக்கு இடையே உள்ள உறவுகளே ஆகும். அவ்வுறவுகள், உள்ளத் தொடர்பினாலும், வரலாற்றுப் போக்கில் வெளியாகும் உலக இயற்கையின் அம்சங்களினாலும் தற்காலிகமாகச் செம்மைப்படுத்தக்கூடியனவாக உள்ளன. நாம் எப்படியோ இந்தச் சமூக உறவுகளில் வாழப் பழகிக்கொண்டு இருக்கின்றோம். உலகம் தான் கடந்து செல்லும் போக்குக்கு ஏற்ப, நாம் விளங்கிக்கொள்ள முடியாத வகையில் அவ்வாறு ஒருவகையான மாற்றங்களைத் தினமும் செய்துகொண்டே வாழ்ந்து வருகின்றோம். உலக இயல்புக்கு ஏற்றபடி மட்டும் நாம் எம்மைத் தினமும் மாற்றிக் கொள்வதில்லை. எம்மைச் சுற்றியுள்ள மனிதர்களுக்கு ஏற்ப நாம் எமது மனங்களில் ஏற்படும் நெருக்கடிகளோடு கடினமான சிலமுறைகளைப் பயன்படுத்தி எம்மை மாற்றிக்கொள்கிறோம். அத்துடன் இந்த மனநெருக்கடிதான் உண்மையில் எமது இயக்கத்துக்கான அடிப்படை எண்ணம் ஆகும். இவ்வாறு வெளிச்சூழலுக்கு ஏற்ப எமது வாழ்வை மாற்றிக் கொள்ளும் நெருக்கடிக்கு நாம் நன்கு பழக்கப்பட்டு விட்டோம். இந்த நெருக்கடி முயற்சியையே ஒருவகை இன்பமாகவும், திருப்தியாகவும் நாம் தவறாக எடுத்துக்கொள்ளுகின்றோம். தொடர்ந்து இருக்கின்ற நோய் நிலைமையையே சாதாரண ஆரோக்கிய நிலை என்று தவறாகக் கருதிக் கொள்ளுகின்றோம்.

(தொடரும்...

# நளமகாராஜன்

- திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் -

நல்ல மனிதர்களால் தவறானவை என்று தள்ளப்பட்ட ஐந்து பொருட்கள் உள்ளன. அவையாவன: காதல், கவறாடல் (சூதாடல்) கள்ளுண்ணல், பொய் மொழிதல், ஈதல் மறுத்தல் என்பனவாகும். இவற்றில் காதல் எவ்வாறு தவறாகும் என்று இளைஞரும் யுவதிகளும் குமுறுவது கேட்கிறது. இதற்கு ஏற்றதாக நரிக்கதை ஒன்று பாடலாக இசைக்கப்பட்டுள்ளது. அஃதாவது நரியார் ஒருவர் நல்ல சுவையான பெரிய வடை ஒன்றை வாயில் கௌவிக்கொண்டு போய் நீரில் ஓடுகின்ற மீனைப் பிடிக்க எண்ணி வாயைத் திறக்க வடையும் வீழ்ந்து மீனும் ஓடித் தப்பிவிட ஏமாந்து வானம் பார்த்து நின்ற நரியாரைப் பார்த்த பெண் ஒருவர் "புத்திகெட்ட நரியாரே ஏன் வானத்தைப் பார்க்கிறீர்" என்று ஏளனம் செய்தார். அதற்கு நரியார் விடையாக அழகிய பெண்ணே கேள். அரசனை அகற்றிவிட்டு வம்பன் ஒருவனைக் கூட்டிக்கொண்டு ஓடியது போன்றதே என்றது. கயவனைக் கைப்பிடித்த நீ கைப்பொருளும் இழந்து நகை நட்டும் இழந்து நிற்கிறாய் என்றது. இனி அந்தப் பாடலை நோக்குதும்.

"சம்புவே என்ன புத்தி சலந்தனில் மீனை நம்பி
வம்புறு வடத்தைப் போட்டு வானுறப் பார்ப்பதேனோ
அம்புவி மாதே கேளாய் அரசனை அகலவிட்டு
வம்பனைக் கைப்பிடித்த வாறு போலாயிற்று அன்றே"

இருள் சூழ்ந்த கொடிய நெடுங்காடு. அங்கு வேடர்குலம் வாழ்ந்துகொண்டு இருக்கின்றார்கள். வேட்டையாடுதல் அவர்களது தொழில் ஆகும். அவர்களால் பெரிய வீடுகள் கட்டி வாழமுடியாது. ஏனெனில் அவை புலிகளால் அடித்து நொருக்கப்பட்டு அங்கு வாழ்பவரும் புலியினால் கொல்லப்படலாம். ஆதலினால் அவ்வாறு அமைக்கப்படுவதில்லை. மாறாக நிலத்தின் கீழ் இருவர் மட்டுமே உறங்கத்தக்க அளவில் சுரங்க அறை அமைத்துப் படுக்கும் போது பாறாங்கல்லினாலே வாசலை அடைத்து, வெளிவரும்போது திறந்து வெளிவருவர். வேடனும் அவனது பத்தினியும் இருந்துவரும் காலத்தில் ஒருநாள் வெகு நேரம் செல்ல இருட்டில் தட்டுத் தடுமாறி மாதவ முனிவர் ஒருவர் மிகவும் சோர்வு உற்ற நிலையில் வந்து சேர்ந்தார். முனிபுங்கவரை அப்படியே விட்டு வைத்தால் புலிக்கு இரையாவது திண்ணம். சுரங்கத்திலும் மூவரும் உறங்கவோ முடியாது. அதனால் முனிவரையும் மனைவியையும் உள்ளே படுக்க வைத்து வாசலை மூடித் தான் வெளியே உறங்காதிருந்து காவல் காத்தவன் தற்செயலாக உறங்கிவிட்ட வேடனைக் கடித்துக் குதறிய புலி விலகிச் சென்றது. விடிந்து நித்திரை விட்டெழுந்த வேடனின் மனைவியும் முனிவரும் பாறையைத் தள்ளி வெளியே வந்தவள் கணவனது நிலை கண்டு கதிகலங்கி அலறிக்கொண்டு அவன்மேல் விழுந்து உயிர் நீத்தாள். இது கண்டு பதறிப்போன முனிவர் காட்டு மரங்களை விறகாக அடுக்கி இருவரையும் வளர்த்தி நெருப்புமூட்டித் தானும் அதில் வீழ்ந்து உயிர் நீத்தார்.

*பிரார்த்தனைகளை விடவும் மிகவும் உயர்ந்தது பொறுமைதான்.*

இவர்களே மறுபிறவியில் வீமராசன் மகளாகத் தமயந்தியும் நிடத மன்னனாக நளமகாராஜனும் அன்னப் பறவையாக முனிவரும் தோன்றினர். இவர்கள் இருவரையும் இல்வாழ்வில் இணைத்து வைக்கும் தூதுவராக முனிவராகிய அன்னப் பறவையும் செயற்பட்டது. தமயந்திியிடம் நளமகாராஜன்பற்றி எடுத்துக்கூறும்போது எத்துணை அழகாகச் செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் என்று வர்ணிக்கிறார். இதுதான் புகழேந்திப் புலவரது பெருமையாகும். வெண்பாவில் புகழேந்தி என்று சும்மாவா சொன்னார்கள். அஃதே போல் தமயந்தி பற்றி நளமகாராஜனிடமும் இனிய காதல் போதை ஏறும் வாக்கியங்களை வழங்கியிருந்தார் அன்னப்புள்.

ஒரு நாள் இருவரும் முதன்முதல் சந்திப்பை ஏற்படுத்த அழைத்துச் செல்கிறது அன்னம். இடையில் வருணன், அக்கினி, இந்திரன், இயமன் ஆகிய நால்வரும் தமக்காகத் தமயந்தியிடம் தூது செல்லும்படி கேட்கிறார்கள். அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்ட மன்னன் தமயந்தியிடம் வாதாடுகிறார். தமயந்தியோ தனது நிலையிலிருந்து இம்மியளவும் இறங்காது தளர்வடையாது தனது மனதில் வரித்துக்கொண்டவரையே யல்லால் இற்றைவரை உரியவரை நேரில் காணாமலே இருக்கலாம். ஆனால் அவர் ஒருவருக்கேயன்று வேறு எவருக்கும் இடம் இல்லை என்று உறுதிபடக் கூறிவிட்டாள். உண்மையாகவே மனச்சாட்சிப்படி தங்கட்காகவே பேசுகிறானா? என்று உளவறியும் நோக்கில் அமரர்கள் வண்டுருவில் சுற்றி வந்தனர். நளனது உண்மைநிலை கண்ட தேவர்கள் மகிழ்ந்து “அங்கி, அமுத நீர் அம்பு அணி ஆடை எங்கு நீ வேண்டினும் அவ்விடத்தே சங்கையறப்பெற்றாய்” என வருணன் ஆகண்டலன் தருமன். மற்றோனும் ஈந்தார் வரம்.

அக்கால நாட்டு இராச வழக்கப்படி தனக்குரிய துணைவரைத் தானே தெரிவு செய்யும் வழக்கப்படி சுயம்வரம் என்னும் நிகழ்வைத் தந்தையாகிய வீமராசன் மேற்கொண்டார். சுபநாள் குறித்து 56 தேசத்து இளவரசர்கட்கும் திருமண ஓலை அனுப்பி வைத்தார். இவர்களில் நிடதநாட்டு இளவரசகுமாரனாகிய நளமகாராஜனும் ஒருவராவர். இங்கு அழைப்பிதழ் இல்லாத மணமக்களாக நளமகாராஜனது உருவில் தேவர்களும் வந்து மணப்பந்தலில் இருந்தனர். தமயந்தி மணமாலையுடன் சேடியர் புடைசூழ நளமகாராஜனை நோக்கி வந்து கொண்டிருந்தாள். வந்தவள் திகைப்புற்றாள். ஏனெனில் நளமகாராஜனது உருவம் தாங்கிய வேறு நால்வர் வீற்றிருந்தமையே திகைப்பின் காரணமாகும். ஆனாலும் அன்னப்பறவையுருவில் நின்ற முனிவரது அருளால் “கண் இமைத்தலால் அடிகள் காசியில் தோய்தலால் வண்ண மலர் மாலை வாடுதலால் நறும் தாமரை விரும்பும் நன் நுதலே அன்னாள் அறிந்தாள் நளன் தன்னை ஆங்கு அறிந்தவள் நளமகாராஜனை நாயகனாக வரித்துக் கொண்டாள். ஏமாற்றமடைந்த தேவர் தமது இருப்பிடம் போய்க்கொண்டிருந்தனர். சுயம்வரம் முடிந்து தமயந்தி நளமகாராஜனைத் திருமணம் செய்து விட்டாள் என்பதை அறிந்த புட்கரன் என்ற அரசன் நளமகாராஜனோடு சண்டைக்குப் புறப்பட்டான். அவனைத் தடுத்த தேவர்கள் சண்டையில் நளமகாராஜனை வெல்ல முடியாதெனக் கூறிய தேவர் காலம் வரும்வரை பொறுத்திருந்து காலம் கனிந்தவுடன் கடமையில் ஈடுபடு என்றனர். இதனையே திருவள்ளுவரும், “காலம் கருதியிருப்பர் கலங்காது ஞாலம் கருதுபவர்” என்கிறார். “ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு” என்பதுவும் இதுவேயாம்.

ஆழ்ந்த நம்பிக்கை இமயமலை போன்றது. அதை எவராலும் அசைக்க முடியாது.

தேவர்களின் நல்ல ஆலோசனை பெற்ற புட்கரன் காத்திருந்து எதிர்பார்த்த தருணம் கிடைத்தவுடன் நளமகாராஜனைச் சூதாட அழைத்தான். அழைப்பை நிரா கரிப்பது அரசருக்கு அழகில்லையாதலால் புட்கரனின் சூழ்ச்சியை அறியாது நளமகா ராஜன் ஒப்புக்கொண்டான். இது சகுனியின் சூழ்ச்சியை அறியாத தருமன் ஒப்புக்கொண் டது போன்ற செயல் எனலாம். ஆயினும் தன்னையும் தம்பிமாரையும் மனைவியையும் வைத்துச் சூதாடியமை போன்றில்லாது அரசு உரிமையும் நாட்டையும் மாத்திரம் வைத்து இழந்த பெருமைக்கு உரித்தாளரானார். சூதாடி என்ற ஒன்றை எய்தியவர் மானம் குலம் கல்வி அறிவுடைமை முதலிய நூறு நற் குணங்களை இழந்தவராகிறார். இவ்வரிசை யில் நளமகாராஜனும் ஒருவரானார்.

நாடும் அரசுரிமையும் இழந்து செங் கோல் செலுத்தி மக்களை மகிழ்வுடன் வாழ வழிகாட்டி நின்றவன் கொடுங்கோலனாய புட்கரன் கையில் ஆட்சியை ஒப்படைத்து விட்டு மக்களைக் கலங்கவிடுத்து தம் மக்களாகிய இந்திரசேனன், இந்திரசேனை ஆகிய இருவரையும் வீமராசனது மனையில் விட்டுத் தானும் தமயந்தியும் காடேகினர். அங்கு மாயமான புள் ஒன்று பறக்கக் கண்ட தமயந்தி மாயமானைப் பிடித்துத் தருமாறு சீதை கேட்டதுபோற் கேட்டாள். அது கேட்ட நளன் தனது ஆடையைக் களைந்து பறவை யைப் பிடிக்க வீசினான். அது அவனது ஆடையையும் பறித்துக்கொண்டு உயரப் பறந்து சென்றது. இதனால் இருவரும் மனைவியின் சேலையையே கட்டிக்கொண் டனர். இருவரும் சேர்ந்து திரிவது கஷ்டம் என உணர்ந்த நளன் சேலையை இரு பாதி யாகக் கிழித்து ஒரு பாதியை உடுத்தியபடி வனத்தில் சென்றான். அங்கே கார்க்கோடகன் எனும் பாம்பு நெருப்பில் அகப்பட்டு எரிந்த நிலையில் "மன்னா உனக்கபயம் என்னா வனத்தீயில் பல நாகவேந்தன் பதைத்துருக" அவ்வழி நோக்கி ஓடியவன் தீயில் இருந்து காப்பாற்றியவனையே கடித்தது நாகம். அத னால் தேகம் யாவும் கறுத்துக் குறளாகி மெலிந்தான். அது கண்ட நாகம் அரசே கேள். உனது நலனுக்காகவே கடித்து உருவத்தை மாற்றியுள்ளேன். பழைய உருவில் நீ எங்கு சென்றாலும் உன்னை எவரும் சேர்த்துக் கொள்ளவோ வேலை தரவோ மாட்டார்கள். அதன் பொருட்டாகவே உனது உருவத்தை மாற்றினேன். ஆனால் தேவையேற்படும்போது தேவர்களால் தரப்பட்டுள்ள ஆடையை உடுத்துவதன்மூலம் சுய உருவம் பெறு வாயாக என்றது. அது கேட்டுத் தெளிவு பெற்ற மன்னன் மகிழ்ந்து இருதுபன்ன மகராஜனிடம் சமையல்காரனாகவும் தேர்ச் சாரதியாகவும் பணி புரிந்தான். இதனிடையே பாதிச் சேலையுடன் எழுந்த தமயந்தி கண வனைக் காணாது வனம் முழுவதும் தேடி அலைந்து அழுது அரற்றினாள். தந்தையிடம் சென்றடைந்து கணவனைத் தேடும் முயற்சி யில் ஈடுபட்டாள். நாடு முழுவதும் புரோகிதர் களை அனுப்பித் தேடப் பணித்தாள். அவர்கள் வீதி வழியாக பாதி உடையோடு படுத்துறங்கிய நாயகியைக் கைவிட்டு ஓடு வது அரசருக்கு அழகாமோ என்று கூறிச் சென்ற புரோகிதன் இருதுபன்ன இராசனது மனையை அடைந்தபோது அங்கு வந்தவர் கூறியவை கணவனை ஒத்துள்ளது ஆனால் உடம்பை நோக்கும்போது அவராகத் தெரிய வில்லை என்றார் புரோகிதர். அவர்தான் தன் கணவர் என நம்பிய தமயந்தி அவரை விதர்ப்ப நாட்டுக்கு வரவழைக்க யாது வழி என்று கலந்தாலோசித்து தமயந்திக்கு இரண் டாம் சுயம்வரம் எனவும் அதுவும் இன்றே யெனவும் புரோகிதர் கூறக் கேட்ட நளன் எதற்கும் இருதுபன்னனது தேர்ச்சாரதியாகச்

செல்லும் வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு மகிழ்ந்தான். ஏனெனில் நளனைப் போன்று விரைந்து தேர் செலுத்தவல்லவர் வேறு யாரும் இல்லையன்றோ; தேரில் இருந்து இருதுபன்னன் மேலாடை விழுந்தது. "எடு" என்று உரைப்பதற்கிடையில் நாலாறுகாதம் கடந்ததே. அதாவது தேர் 24 காததூரம் சென்று விட்டதாம். அத்துனை விரைவு. ஆனால் வீமராசன் மனையிலே சுயம்வரத்துக் கான எந்த நடைமுறைகளும் காணப்பட வில்லை. நளன் தேரை நிறுத்திவிட்டு மடைப் பள்ளியில் சமையல் வேலையில் ஈடுபட்டான். அப்போது பிள்ளைகள் இருவரையும் தமயந்தி நளனருகே விளையாட அனுப்பி வைத்தாள். அவர்களைக் கண்டவன் "உங்கள் அரசை இன்னொருவன் ஆள நீர் போந்து இங்கள் உறைதல் இழுக்கன்றோ" என்றான். அதற்கு விடையாக அவர்கள் எங்கள் தந்தை வாய்மை தவறாதவர். அதை உன்னால் அறிய முடியுமா அடு மடையா" என்றனர். இங்கு சமையல்காரனே என்ற வார்த்தையும் மடைப் பயலே என்ற கருத்தும் தொக்கு நிற்கின் றமையைக் காணலாம். அவ்வார்த்தை கேட்ட நளன் "மன்னர் பெருமை மடையர் அறிவரோ? உன்னை அறியாது உரை செய்த என்னை மன்னித்தருள்க எனக் கனிந்துருகிக் கண்ணீர் சொரிய நின்றான்". இதனால் ஓரளவு நளன் என ஊகித்துக்கொண்டபோதிலும் உடல் வாகு கொண்டு திருப்தியடைய முடியவில்லை.

இதனிடையே இருதுபன்னன் முடிமன் னன் ஒருவரிடம் வேலை வாங்கினேன் என்று ஆதங்கமுற்று மன்னித்தருளும்படி கேட்டுத் தனது தேரைத் தானே செலுத்திக் கொண்டு தமது அரண்மனை சென்றடைந்தான். தமயந் தியும் தந்தையாராகிய வீமராசனும் பிள்ளை களும் உள்ளூரப் புளகாங்கிதம் அடைந்திருந் தனர். இதனிடையே நளமகாராஜனைப் பற்றி இருந்த ஏழரைச்சனி விலகும் காலம் வரவே திருநள்ளாறில் உள்ள நளதீர்த்தத்தில் நீராடி யெழுந்தவுடன் சனீஸ்வரனது பிடியிலிருந்து நீங்கப்பெற்று சுதந்திரபுருடன் ஆகினான். அவன் நீராடிய தீர்த்தம் இன்றும் "நளகூபம்" என அழைக்கப்படுகிறது. அவ்வாறு சுய நிலையெய்தமையால் தேவர்கள் வழங்கிய ஆடையை உடுத்தி நளமகாராஜன் ஆகினார். மனைவி மக்கள் பிள்ளைகள் மாமனாருடன் இன்புற்றிருந்த நிடத நாட்டரசனான நளமகா ராஜன் சூழ்ச்சியால் புட்கரன் கைப்பற்றிய நாடு நகரையும் ஆட்சி உரிமையையும் மக் களையும் மீட்க ஏற்ற காலத்தை எதிர்பார்த் துக் காத்திருந்தான். முதலாவதாக மாமனரது அரண்மனையில் தூதுவர் பதவி வகிக்கும் உயரதிகாரி ஒருவரைத் தூதுவராக அனுப்பி வைத்தான். அதுவோ துரியோதன மகாராச னிடம் கண்ணபிரான் சென்ற தூது பலிக்காது போனமை போன்றே பலனற்றுப்போனது. "கெடுகுடி சொற் கேளாது" அன்றோ? புட் கரனோ போரில் அல்லது சமாதானத்திலோ நாட்டமின்றி சூதாட்டத்திலேயே நாட்டம் கொண்டிருந்தான். எவ்வகையாக நாட்டையும் அரசையும் இழந்தானோ அவ்வகையாகவே மீட்க வேண்டும் என்பதே அவனுடைய வாதம். அத்தோடு சொக்கட்டான் காய் அன்றி வேறு படைபலம் அவனிடம் கிடையாது. இந்த நிலையில் போருக்கு அறை கூவல் விடுத்துத் தூதுவன் திரும்பினான். நளமகாராஜன் நெறி முறை வழுவாது படையணி நடத்திச்சென்று போராடிக் கொடுங்கோலனாகிய புட்கரனைப் புறமுதுகிட்டு ஓடச்செய்து நல்லோர் நல்லாசி கூறவும் நாட்டு மக்கள் மகிழ்வுடன் வாழவும் செங்கோல் ஆட்சி நடத்தலானான். அமைச்சர் களாக அறநூல் கற்ற அந்தணர்களும் அற நூல் கற்றோரும் அவையை அலங்கரித்தனர். நளமகாராஜாவின் வரலாறு நீதியை விளக்கு வதாகவும் "வாழ்வு" சூதின் கொடுமையை விளக்குவதாகவும் உள்ளதெனலாம்.

கடுமையாக உழைப்பவனுக்கு கவலைப்பட நேரமில்லை.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| R. ரவீந்திரன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 200000. 00 |
| பா. பாலச்சந்திரன் | சுண்ணாகம் | 1000. 00 |
| சி. கணேசமூர்த்தி | அல்வாய் | 5மூடை அரிசி, 2புட்டி பருப்பு |
| சிவநாதன் திருக்குமரன் | இணுவில் | 10000. 00 |
| அ. சிதம்பரநாதன் குடும்பம்<br>சி. ஸ்ரீகரன் குடும்பம்<br>சி. ரமணன் குடும்பம்<br>சு. பாலமுரளி குடும்பம்<br>சி. நிரஞ்சன் குடும்பம் | புத்தூர் | 10000. 00 |
| கா. பரநிருபசிங்கம் | அச்சுவேலி | 1500. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | 5000. 00 |
| திருமதி உ. பேரானந்தம் | கொக்குவில் | 2000. 00 |
| வேந்தன் டினோசன் | கரவெட்டி | 5000. 00 |
| S. தங்கசிவம் | நல்லூர் | 1000. 00 |
| ம. யுகேந்திரன் | நீர்வேலி | 5000. 00 |
| M. நடராசா | கொழும்பு | 10000. 00 |
| செ. சசிவன் | நெல்லியடி | 1000. 00 |
| இ. வசந்தகுமார் | மானிப்பாய் | 2000. 00 |
| தயாநிதி ஸ்ரீகரன் | தெகிவளை | 5000. 00 |
| K. பாலசுப்பிரமணியம் | வவுனியா | 2000. 00 |
| P. துரைசிங்கம் | கொழும்பு-15 | 5000. 00 |
| இ. செந்தூரன் | தாவடி | 2000. 00 |
| க. தேவமனோகரன் குடும்பம் | கனடா | 8000. 00 |
| கா. சிவரூபன் | அளவெட்டி | 1500. 00 |
| சந்திரமலர் அம்பிகைபாலன் | அல்வாய் | 5000. 00 |
| திருமதி தங்கராசா சரஸ்வதிமூலம்<br>அமரர் சட்டத்தரணி தங்கராசா நினைவாக | புலோலி | 5000. 00 |
| க. விநாயகம்பிள்ளை | தும்பளை | 2000. 00 |
| ந. பிரசாந் | அச்சுவேலி | 1000. 00 |
| இ. அஸ்வினி | இணுவில் | 5000. 00 |
| ரா. செல்வதிருக்குமரன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| கெங்காபரன் லதன் | மானிப்பாய் | 1000. 00 |
| உமாமகேஸ்வரி | கொழும்பு | 1000. 00 |

கோபம் அன்பை அழிக்கும். கர்வம் அடக்கத்தைக் கெடுக்கும்.

| | | |
|---|---|---|
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் | பருத்தித்துறை | 5000. 00 |
| சி. சந்திரசேகரம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| N. நிர்மலகுமார் | இணுவில் | 1200. 00 |
| S. சதாசிவம் | கொழும்பு-6 | 5000. 00 |
| கு. நித்தியானந்தன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| பா. அன்னஞானம் | சுழிபுரம் | 1000. 00 |
| வி. சிவகுமார் | பொலிகண்டி | 2000. 00 |
| N. மூர்த்தி | அவுஸ்திரேலியா | 1000. 00 |
| மு. பாலசிங்கம் | சுண்ணாகம் | 250. 00 |
| நா. இரத்தினசிங்கம் | ஈவினை | 1மூடை அரிசி, மரக்கறி |
| இ. ஈஸ்வரி | சுண்ணாகம் | 3000. 00 |
| க. யசோதிகா | அச்சுவேலி | 1200. 00 |
| க. வைத்தியநாதன் | ஊரெழு கிழக்கு | 2புட்டி அரிசி, மரக்கறி 1000. 00 |
| சி. தேவானந்தா | கரவெட்டி | 6500. 00 |
| ச. சிவசுப்பிரமணியம் | மல்லாகம் | 10000. 00 |
| மோகன் கண்ணன் | இமையாணன் | 5000. 00 |
| கு. வரப்பிரியன் | கைதடி | 7500. 00 |
| க. தெய்வேந்திரம் | சண்டிலிப்பாய் | 1500. 00 |
| செல்வி அ. கந்தையா | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| க. நிரஞ்சன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ஆ. சுதர்சனன் | நெல்லியடி | 10000. 00 |
| த. சுதர்சன் | புத்தூர் | 500. 00 |
| மஞ்சுளாதேவி துரைசிங்கம் | கம்பர்மலை | 5000. 00 |
| மு. குகதாசன் | வட்டுக்கோட்டை | 2000. 00 |
| க. மயூரன் | அச்சுவேலி | 3000. 00 |
| திரு ரஞ்சன் (மணியம் ஸ்ரோர்ஸ்) | கனடா | 15000. 00 |
| வை. ரஜீவ் | கொழும்பு | 1000. 00 |
| பொ. பாலசுப்பிரமணியம் | இணுவில் | 1மூடை அரிசி |
| B. பாலேந்திரா | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| பே. சஞ்சீவ் குடும்பம், G. கட்ஷன் குடும்பம், B. சத்தியேந்திரா குடும்பம் | சுவிஸ்லன்ட் | 10000. 00 |
| தேவன் ஸ்ரோர்ஸ் | ஆவரங்கால் | 1மூடை அரிசி, 2புட்டி பருப்பு |
| ப. கீதப்பிரியன் | நீர்வேலி தெற்கு | 2000. 00 |
| சி. பகவத்சிங்கம் | நீர்வேலி | 500. 00 |
| பூ. க. இராசரத்தினம் | கொழும்பு-6 | 500. 00 |
| N. ரட்ணம் | பருத்தித்துறை | 2000. 00 |

(தொடரும்...

நமது வாழ்வை வளமாக்குவது நம்பிக்கைதான்.

# மானுடா! பயம் ஏன் உனக்கு?

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

இறைவன் ஆன்மாக்களை வினைப்பயன்களை அனுபவிக்கப் பூமியில் படைக்கின்றான். ஆன்மாக்கள் செய்த வினைகளின்படி ஓரறிவு தொடக்கம் ஆறறிவு உயிரினங்களாகப் பிறக்கின்றன. இந்த உயிரினங்களில் ஆறறிவு படைத்த மனிதன் எல்லா உயிரினங்களிலும் மேன்மையுடையவனாக மதிக்கப்படுகின்றான். ஆறறிவு படைத்த மனிதன் பஞ்சமா பாவங்களாகிய கொலை, களவு, கள்ளுண்ணல், விபச்சாரம், சூதாட்டம் ஆகியவைகளை ஒழித்து பூரண மனிதனாக வாழ்வான். அதுமட்டுமன்றி இறைபக்தியுடையவனாகவும் வாழ்வான். எனவே மானுடா! பயம் ஏன் உனக்கு? கலியுகவரதனாகிய கந்தன் "யாம் இருக்கப் பயம் ஏன்" என அபயம் அளிப்பான்.

மானுட வாழ்க்கையில் பயம் பல தீமைகளை விளைவிக்கிறது. பஞ்சமா பாவங்கள் மனிதனுக்கு வீண் பயங்களைக் கொடுக்கின்றன. கொலையுண்டு புலால் உண்பவனுக்கு, இரக்கம் நீங்கி ஏனைய நான்கு பாவங்களையும் செய்ய வைக்கின்றது. நான் என்னும் ஆணவம் குடிகொள்கின்றது. சிற்றின்ப ஆசைகளாகிய மண் ஆசை, பெண் ஆசை, பொன் ஆசைகளில் உழன்று செய்வதறியாது அல்லல் படுகின்றான். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற மாயையில் மயங்கிக் கவலைக் கடலில் வீழ்ந்து கரையேற முடியாது தத்தளிக்கின்றான். இவனது கவலை நீங்கி, இறைவனடி சேர புலாலை அறவே ஒழிக்க வேண்டும். வள்ளுவன் கூறுவதுபோல்,

> கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா உயிரும் தொழும்"

என்ற நெறியில் வாழ வேண்டும். தாவரக் காய்கறிகளில், மூலிகை வகைகள் உள்ளன. இவைகளை உண்பதினால் நோய்கள் அகலுகின்றன. மனத்திண்மை ஏற்படுகின்றது. பயம், பயந்து ஓடுகின்றது. "இறைவன்தான் நம்மைப் படைத்தவர். எம்மைக் காப்பவர்" என்ற எண்ணம் உதிக்க நாடோறும் ஆலயம் சென்று வழிபட்டு வருபவன் இறையருளால் பயம் நீங்கி, பேரின்பமாக வாழ்வானென்பது திண்ணம். இன்னும் பொருளும் அறிவும் நிரம்பிய வாக்கியமாகிய கருவாடு தின்றெவர் கைலாயம் சேர்ந்தார்? கருவாடு (தின்று+எவர்) கைலாயம் சேர்ந்தார்? என்ற உண்மையைப் பற்றிக் கொள்வான்.

தாவர. உணவுகளின் சக்தியை, மூலிகைத் தன்மையை இன்னும் உணராத மாந்தர் பலர் உளர். தாவர உணவு உண்ணுகின்ற யானை போன்ற மிருகங்களைப் பாருங்கள். யானைகள் திடமான உடலுடன் நெடுங்காலம் வாழ்வதை நாம் அறிவோம். தவம் செய்வோர் காய், கனிகளை உண்டு பல ஆண்டுகள் உயிருடன் வாழ்ந்ததை புராணங்கள் ஆணையிட்டுக் கூறுகின்றன. இந்தத் தெய்வீக வாக்கை என்றும் மறவாது, தாவர போசனியாய், இறைபணி செய்யுங்கள். தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் கலங்கரை விளக்காகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறான். "சந்நிதியானை வழிபடுபவர்கள் எந்நிதியும் பெறுவார்கள்" என்ற வாக்கியம் கோவில் முகப்பில் ஒளிவீசிக்கொண்டிருக்கின்றது.

தினமும் பயத்துடன் வாழ்கின்ற மனிதா ஒருகால் செல்வச்சந்நிதியான் ஆலய மண்ணில் கால்வை. வினைகள் அகன்றிடும். உன் உடல் வளம்பெற செல்வச்சந்நிதியான் வீதியை உன்னால் இயன்றளவு வலம் வா. நோய்கள் சொல்லாமல் பறந்தோடிவிடும். கணப்பொழுதும் அவனை நினைப்பதை மறவாதே. வீட்டுக்கு உழைத்தது போதும், முருகன் திருவடி சேர தினமும் அவன் ஆலயம் செல். பேரின்பவாழ்வு பெற்று வாழ முருகன் அருளுவான்.

*அன்பும் இரக்கமுமே வாழ்க்கையினஅடிப்படை.*

# விதுர நீதி

(தொடர்ச்சி....

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

விதுரர் மீண்டும் திருதராஷ்டிரனிடம், "மன்னா! இந்த விடயத்தில் ஆத்ரேய மகரிஷிக்கும் சாத்யர்கள் என்னும் தேவர்களுக்கும் இடையில் நடந்ததைச் சொல்கிறேன் கேளுங்கள்" என்று சொல்ல ஆரம்பித்தான்.

சாத்தியர்களென்னும் தேவர்கள், கடுமையான விரதம் மேற்கொண்ட மகா ஞானவானான ஆத்ரேய மகரிஷியைப் பார்த்து, "மகரிஷியே! நாங்கள் சாத்யர்களென்னும் தேவர்கள். உங்கள் தகுதியையோ திறமையையோ தீர்மானம் செய்ய எங்களுக்குச் சக்தி இல்லை. நீங்கள் சாஸ்திரக் கேள்விகளில் தீரர்; புத்திமான்" என்றெல்லாம் போற்றி உபதேசம் கேட்டார்கள். தேவர்களுக்காக ஆத்ரேய மகரிஷி சொல்ல ஆரம்பித்தார்.

**ஆத்ரேய உபதேசம்**

தைரியம், சத்தியம், தர்மம் முதலியவைகளை அனுசரித்து மனிதன் நடக்க வேண்டும். அப்படி நடப்பது அவன் மனதிலுள்ள எல்லாவிதமான எண்ணங்களின் முடிச்சுக்களையும் விலக்கும். விருப்பத்தையும் வெறுப்பையும் சமமாகப் பாவிக்க வேண்டும்.

நிந்திக்கப்பட்டவனைத் திருப்பி நிந்திக்கக்கூடாது. பொறுத்துக் கொள்பவனுடைய கோபமே நிந்திக்கின்றவனை எரிக்கிறது. நிந்தித்தவன் புண்ணியத்தை, பொறுத்தவன் பெற்றுக்கொள்கிறான்.

அடுத்தவனை நிந்தித்தல், அவமதித்தல், நட்புக்குத் துரோகம் செய்வது முதலியவைகளை நீக்க வேண்டும்.

குணம் கெட்டவனிடம் வேலைக்காரனாக இருக்கக்கூடாது. கர்வம் கொண்டவனாகவும், தீய தொழிலைச் செய்பவனாகவும் இருக்கக்கூடாது. கொடூரத்துடனும், கோபத்துடனும் கூடிய வார்த்தைகளைச் சொல்லக்கூடாது. இந்த உலகில் கடுமையான சொற்கள், மனிதர்களின் உயிர் நிலைகளையும், எலும்புகளையும் இதயத்தையும் எரிக்கின்றன. ஆகையால் தர்மத்தில் விருப்பம் உள்ளவன் கடுமையானதும் எரிக்கின்றதுமான சொற்களை ஒருநாளும் சொல்லக்கூடாது.

வருத்தத்தை உண்டாக்குபவன், கடுமையாக இருப்பவன், குரூரமான வார்த்தைகளால் அடுத்தவனை நிந்திப்பவன் முதலானவர்களை, மனிதர்களுள் சிறிதும் செல்வம் இல்லாதவனாகவும் மரணத்தைக் கட்டிக்கொண்டு தூங்குபவனாகவும் அறியவேண்டும்.

மிகவும் கூர்மையானவனும் சூரியன் போலவும் நெருப்பைப் போலவும் சுடுகின்ற சொல் அம்புகளால் அடுத்தவன் தன்னை அவமானப்படுத்தினாலும் கற்றறிந்து மேன்மை பெற்றவன், "அவன் அவமானப்படுத்தியவன் எனக்குப் புண்ணியத்தை உண்டாக்குகிறான். என் பாவங்களை எல்லாம் எடுத்துக் கொள்கிறான்" என்று எண்ணுவான்.

சாயம் தோய்க்கப்பட்ட துணி, சாயத்தின் நிறத்தை அடைவதுபோல ஒருவன் நல்லவனையோ, கெட்டவனையோ, தவசியையோ, திருடனையோ சேர்ந்தால்- சேர்ந்தவர்கள் போலவே ஆகிறான்.

*சிறுசிறு செலவுகளைப்பற்றிக் கவனமாயிரு. சிறு ஓட்டையே பெரிய கப்பலை மூழ்கடித்துவிடும்.*

தீயவைகளைத் தான் பேசாமல் இருப்பதோடு அடுத்தவர்களையும் தீயதைப் பேசாமல் இருக்கும்படி செய்பவன், தான் அடிவாங்கினாலும் திருப்பி அடிக்காமலும், அடுத்தவர்களைக் கொண்டு அடிக்காமல் இருப்பவன், தனக்குக் கேடு செய்தவனைக் கொல்ல விரும்பாதவன்- இப்படிப்பட்ட மனிதனைத் தேவர்களும் விரும்பி வரவேற்கிறார்கள்.

பேசுவதைக் காட்டிலும் பேசாமல் மௌனமாக இருப்பது உயர்ந்தது. பேசினால் உண்மையைப் பேச வேண்டும். அப்படிப் பேசுவதிலும் அன்புடன் பேசவேண்டும். தர்மத்தையே சொல்ல வேண்டும்.

மனிதன் எப்படிப்பட்டவர்களுடன் சேருகின்றானோ, யாருடன் தொழில் செய்கின்றானோ, எப்படிப்பட்டவனாக விரும்புகிறானோ அப்படிப்பட்டவனாக ஆகிறான். (எண்ணமே நீ ஆவாய்!) எது எதிலிருந்து மனிதன் விலகி இருக்கிறானோ, அது அதிலிருந்து வரும் தொல்லைகளில் இருந்து அவன் விடுபடுகிறான். எல்லாவற்றிலிருந்தும் மனத்தளவிலும் விலகியிருந்தால், அணு அளவுகூட துன்பம் வராது. இப்படிப்பட்ட மனிதன் யாராலும் வெல்லப்படுவது இல்லை. அடுத்தவர்களை வெல்ல வேண்டும் என்ற எண்ணமும் இருக்காது. அடுத்தவர்களோடு விரோதம் கொள்வதும் இல்லை, இடையூறு செய்வதுமில்லை. தூற்றினாலும், போற்றினாலும் சமமாக எண்ணி, துயரப்படாமலும் சந்தோசப்படாமலும் இருக்கிறான்.

எல்லாருக்கும் நல்லதையே விரும்புவது, கெடுதலில் ஈடுபடாத மனது, சத்தியம், மென்மை, அடக்கம் முதலியவைகளைக் கொண்ட மனிதன்தான், உத்தமமான மனிதன் என்று உலகத்தில் உள்ளவர்களால் மதிக்கப்படுகிறான்.

தனக்கு நன்மை இருந்தால் இன்சொல் சொல்வது, தருவதாக வாக்குறுதி அளித்தால் தந்துவிடுவது, அடுத்தவனிடம் குற்றம் கண்டுபிடிப்பது முதலியவைகளைக் கொண்டவன் நடுத்தரமான மனிதன்.

செய்யக்கூடாததைச் செய்யக் கட்டளை இடுபவன்; கெட்டவன், மற்றவர்களால் மதிக்கப்படாதவன், நன்றி மறந்தவன், எப்போதும் கோபம் கொள்பவன், தீய சிந்தனை கொண்டவன்- இப்படிப்பட்டவர்கள் மனிதர்களிலேயே மிகவும் மட்டமானவர்கள். தன்னம்பிக்கை இல்லாமலும் அடுத்தவரிடமிருந்து நன்மை உண்டாவதை நம்பாமலும், நண்பர்களை அவமானப்படுத்தவும் செய்பவன் மட்டமான மனிதனேயாவான். இவர்கள் யாருக்கும் நண்பனாவதில்லை.

தனக்கு செல்வத்தை விரும்புபவன் உத்தமர்களையே சேரவேண்டும். இக்கட்டான சந்தர்ப்பம் வந்தால் நடுத்தரமானவர்களுடன் சேரலாம். ஒருபோதும் மட்டமானவர்களுடன் சேரக்கூடாது. மட்டமானவன், தீயவர்களின் கூட்டுறவினாலும், உழைப்பினாலும், அறிவினாலும், சாமர்த்தியத்தினாலும், செல்வத்தை மட்டும் அடைவான். நல்ல புகழையோ, உயர்ந்தவர்களின் நட்பையோ அடைய மாட்டான்.

மேலே உள்ளபடி ஆத்ரேய மகரிஷி கூறியதை விதுரர் சொல்லி முடித்தார்.

**உயர்ந்தவனும் தாழ்ந்தவனும்.**

இவற்றைக் கேட்ட திருதராஷ்டிரன், "உயர்ந்தவர்களின் விடயத்தில் தேவர்களும், தர்மம் முதலியவைகளை நிலையாகக் கொண்டவர்களும், மிகுந்த கல்வியை உடையவர்களும் விரும்புகிறார்கள். விதுரா! உயர்ந்தவர்கள் யார்? சொல்" என்று விதுரரிடம் கேட்டான்.

*கட்டளையிட விரும்புபவன் முதலில் பணிவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்.*

விதுரர், "மன்னா! தவம், ஐம்புலனடக்கம், வேதங்களை அறிந்திருப்பது, பொறுமை, யாகம் செய்தல், தகுந்த குடும்பத்தில் திருமணம் செய்தல், இனிமையான சொற்களைப் பேசுதல், முடிந்தவரை அன்னதானம் செய்தல்- இந்த எட்டுப் பண்பும் கொண்டவர்கள் உயர்ந்தவர்கள் ஆவார்கள்.

நல்ல நடத்தையை எந்நாளும் உடையவர்கள் வம்சமும் அப்படியே இருக்கும். சித்தத்தில் தெளிவுடன் தர்மத்தைக் கடைப்பிடிப்பது தம்குலத்திற்கு சிறந்த புகழைத் தரும் செயலில் ஈடுபடல், பொய் சொல்லாமை- இவைகளைக் கொண்டவர்கள் உயர்ந்த குலத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள்.

யாகம் செய்யாமல் இருப்பது, முறைகேடான திருமணம், வேதத்தை விட்டுவிடுவது, தர்மத்தைப் புறக்கணிப்பது- முதலியவைகளைக் கொண்டவன் உயர்ந்த குலத்தில் பிறந்தவனாக இருந்தபோதிலும் தாழ்ந்தவனாகவே எண்ணப்படுவான்.

கோவில் சொத்துக்களை நாசம் செய்வது, பிரம்மத்தை அறிந்தவர்களின் பொருளைத் திருடுவதுடன் அவர்களை மதியாது நடப்பது, அவர்களை அவமானப்படுத்துவது, அவதூறு சொல்வது, அடைக்கலமாக வைத்த செல்வத்தைத் தானே எடுத்துக்கொள்வது முதலிய தன்மைகளால் நல்ல குலங்களும் கெட்ட குலங்களாக ஆகின்றன.

பசுக்கள், வேலையாட்கள், ஏராளமான செல்வம் முதலியவை இருந்தாலும், ஒழுக்கம் இல்லாவிட்டால் உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவனாகக் கருதப்படமாட்டான். செல்வம் சிறிதளவே இருந்தாலும், நல்ல நடத்தை தவறாமல் இருப்பது, பெரும் புகழையும் தன்னிடம் இழுக்கிறது. உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவனாகவும் எண்ண வைக்கிறது.

ஒழுக்கத்தை முயன்று காக்க வேண்டும். செல்வமானது வரும்; போகும். செல்வத்தால் குறைந்தவன் குறைந்தவனில்லை. ஒழுக்கத்தில் கெட்டவனே கெட்டவனாவான். தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவனாக அவன்தான் நினைக்கப்படுவான். ஒழுக்கமில்லாதவன் வித்தைகளாலும், செழிப்பான செல்வமுடையவனாகவும் இருந்தாலும், முன்னுக்கு வருவதில்லை.

நம் குலத்திலே, ஒருவன்கூட விரோதம் பாராட்டுபவனாக இருக்க வேண்டாம். அடுத்தவர்களுக்குக் கட்டுப்பட்டவனாகவும், அடுத்த்வர் பொருளைப் பறிப்பவனாகவும் இருக்க வேண்டாம். நண்பர்களுக்குத் துரோகம் செய்பவனாகவோ, வஞ்சகம் பொய் நிறைந்தவனாகவோ இருக்க வேண்டாம். பெற்றோர்கள், தேவதைகள், விருந்தினர் முதலியவர்களுக்கு உணவிடாமல் தான் முதலில் சாப்பிடுபவனாக இருக்க வேண்டாம்.

பிரம்மத்தை அறிந்தவர்களைத் துன்பப்படுத்துவது, அவர்களுடன் பகை கொள்வது, பிதுர்களுக்குப் பிண்டம் அளிக்காமல் இருப்பது - முதலிய குணங்களைக் கொண்டவன் நமது சபையிலேயே இருக்க வேண்டாம்.

பேரறிவுள்ள மன்னா! மிகுந்த அக்கறையுடன் கொண்டுவரப்பட்ட இவைகள் தர்மவான்களான புண்ணியவான்களுக்கு பூசைசெய்வதற்காக ஏற்பட்டுள்ளன என விதுரர் கூறிப் பின்னும் தொடர்கிறார்.

(தொடரும்...

பொறாமையினால் ஒருவனின் மனதில் உருவாகும் விஷம் இறுதியில் அவனையே அழித்துவிடும்.

# கண்ணப்பர் ஆன காளத்திவேடன்

– திரு நா. நல்லதம்பி அவர்கள் –

தமிழ் நாட்டிலே, தொண்டை மண்டலத்திலே குறிஞ்சிக் கடவுளாகிய குமாரக் கடவுளிடத்தில் பக்திகொண்டு வாழ்ந்தவன் நாகன் என்னும் வேடன். இவன் வேடர் தலைவன். நெடுங்காலம் புத்திரபாக்கியம் இல்லாமல் இருந்த நாகன் - தத்தை தம்பதியினர், சுப்பிரமணியர் திருவருளினாலே ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத்தனர். அப்பிள்ளைக்குத் திண்ணன் எனப் பெயர் சூட்டி வளர்க்கிறார்கள்.

திண்ணனுக்கு தன் குலத்தொழிலான வேட்டையைத் திறம்படப் பயிற்றுவித்த தந்தையார், தனது வயோதிப காலத்தில் மகனை வேட்டைத் தொழிலுக்கு அனுப்பினார். திண்ணனுக்கு நாணன், காடன் என்கின்ற இருவரும் உதவிக்குச் செல்வதுண்டு.

திருக்காளத்தி மலையிலே, பொன்முகலி ஆற்றங்கரையிலே குடுமித்தேவர் (திருக்காளத்தி நாதர்) கோயில் இருக்கிறது. அங்கே சிவகோசரியார் என்னும் அந்தணர் பூசனை புரிந்து வருகிறார். அவர் அறிவு, அருள், அடக்கம், தவம், சிவபக்தி எல்லாம் உடைய மகாஞானி.

ஒருநாள் வேட்டைக்குச் சென்ற திண்ணனும் நண்பர்களும் ஒரு பன்றியைக் குறிபார்த்துச் சென்றபொழுது, அது வேகமாக முன்னேறிச் சென்றது. வழியில் நாணனும் காடனும் களைப்புற்று ஓரிடத்தில் நிற்க, திண்ணன் அப்பன்றியைத் துரத்திச் செல்கிறான். பன்றியும் களைத்து ஓரிடத்தில் நிற்கவே, திண்ணன் தன் உடைவாளால் அப்பன்றியை வெட்டி வீழ்த்தினான்.

இப்போது நண்பர்களும் வந்து சேர்ந்தனர். களைப்பு நீங்க நீர்தேடி பொன்முகலி ஆற்றங்கரைக்குச் சென்றனர். பன்றியைச் சுட்டு உண்ணலாம் எனப் போனபொழுது காளத்தி மலை தெரிந்தது. அந்த மலையிலே குடுமித்தேவர் கோயில் கொண்டு இருக்கிறார். நாம் போனாற் கும்பிடலாம் என நாணன் சொன்னான்.

எனவே, தீக்கடைகோலால் நெருப்பை உண்டாக்கி இறைச்சியை பதம் செய்யும்படி காடனுக்குச் சொல்லிவிட்டு, நாணனும் திண்ணனும் மலைக்கோயிலுக்குப் போகிறார்கள். மலைக்கு மேலே போகப்போக "உடற்பாரம் குறைவதுபோல இருக்கிறது; என்ன நடக்குமோ அறியேன்" என்று திண்ணன் சொல்லி வேகமாக நடந்தான்; அங்கே சிவலிங்கப் பெருமானைக் காண்கிறான். சிவனார் திருவருட்பார்வை பட்டதும் திண்ணனின் குணம் மாற்றமடைந்துவிட்டது.

நெடுங்காலம் பிரிந்திருந்த குழந்தையைக் கண்ட தாய்போல, விரைந்து ஓடிக் கடவுளைக் கட்டித்தழுவி முத்தமிட்டு கண்களில் நீர்மல்கிக் கசிந்துருகி நிற்கின்றார் திண்ணனார். தவஞ்செய்து பெற்ற குழந்தையல்லவா திண்ணனார். முன்செய்த நல்வினைப் பயன் திண்ணனாரிடம் வெளிப்பட்டது.

தவமும் தவமுடையார்க்கு ஆகும்; அவம் அதனை
அ..திலார் மேற்கொள் வது. (குறள் 262)

இந்தக் காட்டிலே தன்னந்தனியே இருக்கின்றீரே! காட்டு விலங்குகளால் தீமை நேருமே என்று கட்டித் தழுவுகின்றார். அம்பும் வில்லும் கைநழுவிப் போனதும் அறியார். உமக்குத் தலையில் நீர் ஊற்றி பச்சிலையும் பூக்களையும் இட்டவர் யார்? என்று, சிவகோசரியார் சாத்திய பூக்களையும் இலைகளையும் அகற்றுகிறார் திண்ணனார். சுவாமிக்கு

உண்பதற்கு இதோ நல்ல இறைச்சி கொண்டு வருவேன் என்று ஓடிப்போய்க் காடன் வைத்திருந்த இறைச்சியை வாட்டித் தேக்கம் இலையில் வைத்து, பூக்கள் பறித்துக் குடுமியில் சொருகி, வாயினால் நீரை முகந்து கொண்டு ஓடிவந்து, வாயில் இருந்த நீரை சுவாமி தலையில் உமிழ்ந்து, பூக்களை சுவாமிக்குச் சாத்தி, "இறைச்சியை யானே சுவை பார்த்துக் கொண்டுவந்தேன், உண்ணுங்கள்" என்று பக்திமையாற் கேட்டு நிற்கிறார் திண்ணனார்.

இவருக்கு ஏதோ பயித்தியம் முற்றி விட்டது எனக் காடனும் நாணனும், தாய் தந்தையருக்குச் சொல்லப் போய்விட்டார்கள். அவர்கள் போனது தெரியாமல் திண்ணனார் இங்கே மெய்மறந்து நிற்கின்றார்.

வைகறையில் விழித்தெழுந்த திண்ணனார், இறைச்சி கொண்டுவர, வேட்டைக்குப் போய்விட்டார்.

வழக்கம்போல சிவகோசரியார் வந்து பார்த்து அதிர்ச்சியடைகிறார். யாரோ ஊனைப் போட்டுவிட்டார்களே என மனம் நொந்து கொண்டு, அவற்றையெல்லாம் அகற்றிச் சுத்தஞ் செய்துவிட்டு பூசை செய்யலானார். இவ்வாறு ஐந்து நாட்களாகப் பன்றி இறைச்சியைப் படையல் செய்கிறார் திண்ணனார். அந்த நாளெல்லாம் சிவகோசரியார் எல்லாம் வல்ல இறைவனிடமே முறையிடுவார். ஐந்தாம் நாள் இரவு காளத்திநாதர் சிவகோசரியாருக்குக் காட்சி கொடுக்கிறார். ஆறாம் நாள் ஆலய வளாகத்துள் மறைந்து நின்று, இறைவன் சந்நிதியில் நடப்பதைக் கவனிக்கிறார் சிவகோசரியார்.

தேக்கம் இலையில் பன்றி இறைச்சி, ஒரு கையில் அம்பும் வில்லும், கொண்டையிலே செருகப்பட்ட பூக்கள், வாய் நிறைந்த நீர் என்பவற்றோடு வேடன் வருகிறான். அந்தணர் சமர்ப்பித்த பூக்களை அகற்றிவிட்டு வாய் நீரை இறைவன் தலையில் உமிழ்ந்து, இலையில் கொணர்ந்த இறைச்சியைப் படைத்து, பூக்களை இறைவனுக்குச் சூட்டி மெய்மறந்து தொழுது நிற்கிறார் திண்ணனார். "கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலினராய்" சுற்றுச் சூழலை மறந்து நிற்கிறார். சிவகோசரியாரும் மேற்கொண்டு நடப்பவற்றைப் பார்ப்போம் என மறைந்து நிற்கிறார்.

அப்பொழுதுதான் புதுமை நடக்கிறது! காளத்திநாதருடைய ஒரு கண்ணில் இரத்தம் கசியத் தொடங்குகிறது. திண்ணனார் கலக்கமுற்று அங்குமிங்கும் ஓடிப் பச்சிலை பிடுங்கி வந்து வைத்தியம் செய்தார்; பலன் இல்லை. "ஊனுக்கு ஊன்" என உணர்ந்தவர், தனது ஒரு கண்ணைத் தோண்டி எடுத்து அந்தக் கண்ணுக்கு அப்புகிறார். இரத்தக் கசிவு கட்டுப்பட்டது. திண்ணனார் மகிழ்ச்சியில் திளைத்து ஆனந்தக் கூத்தாடினார். ஆனால் மற்றக்கண்ணிலிருந்து இரத்தம் வெளிப்படுகிறதே! அது கண்டும் அவர் கலங்கவில்லை. மருந்து செய்வது பற்றி இப்போது திண்ணனார் அறிந்துவிட்டார் அல்லவா? அதனால், சற்றும் தாமதியாது மற்றக் கண்ணையும் தோண்டி எடுக்க அம்பை எடுத்துக் கொண்டார். செருப்புக் காலை அந்தக் கண் பக்கம் உதைத்துக் கொண்டு, தனது கண்ணைக் குத்திய பொழுது, காளத்தியப்பரின் திருக்கரம் திண்ணனாரின் கையைப் பற்றியது. "நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப, என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப" எனத் தடுத்து அருள் செய்கின்றார். பிரமன் முதலாந் தேவர்கள் பூமாரி பெய்தார்கள். மகாஞானியான சிவகோசரியார் ஆச்சரியமுற்றவராய்க் காளத்திநாதரைத் துதித்து நின்றார். அன்றுமுதல், காளத்தி வேடனான திண்ணனார், "கண்ணப்பர்" ஆனார். தொண்டு செய்து நாளாறில்

*பிறர் குற்றங்களைக் காண முயல்பவன் அரை மனிதன்.*

கண் இடந்து அப்பிய கண்ணப்பர், இறைவனுடைய வலப்பக்கத்தில் என்றும் நிற்கின்ற பேரருள் பெற்றார்.

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ!"

என கண்ணப்பனது எல்லையில்லாத அன்பின் திறத்தை மாணிக்கவாசகர் கோத்தும்பி (இராசவண்டு) ஊடாக வெளிப்படுத்துதல் நமது உய்தியின் பொருட்டேயாகும்.

வாளான் மகவரிந்து ஊட்ட வல்லேன் அல்லன்; மாது சொன்ன
சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லன்; தொண்டு செய்து
நாளாறிற் கண் இடந்து அப்ப வல்லேன் அல்லன்; நான் இனிச் சென்று
ஆளாவ தெப்படியோ திருக் காளத்தி அப்பருக்கே.

-பட்டினத்தடிகள்.

## தெய்வம் நின்று கொல்லும்

குருகுலத்தில் சீடன் ஒருவன், தெய்வம் நின்று கொல்லும் என்று பாடம் சொன்ன குருவிடம், தெய்வம்கூட மன்னிக்காவிடில், தவறு செய்வோர் கதி என்ன? எனக் கேட்டான். சீடனுக்கு அதை விளக்க விரும்பினார் குரு.

இராவணன் தவங்கள் நிறையச் செய்து பிரம்மாவிடம் பல வரங்களைப் பெற்றிருந்தான். அதனால் இறுமாப்புக் கொண்ட அவன், எமனால்கூட தன்னை எதிர்க்க முடியாது என்று கர்வத்துடன் அவருடன் போருக்குச் சென்றான். இராவணனுக்கும் எமதர்மனுக்கும் நடந்த போரின்போது காலதண்டத்தை எமன் உயர்த்தியபோது, பிரம்மா தோன்றி, எமனே! இந்தக் காலதண்டத்தை இராவணன்மீது ஏவி அவனைக் கொன்று என் வரத்தைப் பொய்யாக்கி விடாதே! என் வரத்தைப் பொய்யாக்குபவர்கள் உலகத்தை வஞ்சித்த பாவத்துக்கு ஆளாவார்கள் என்றார். பிரமனின் வாக்கை ஏற்று தேரோடு மறைந்தார் எமன்.

விவரம் தெரியாத இராவணன் தனக்குப் பயந்துதான் எமன் ஓடி ஒளிந்ததாக எண்ணி, நான் எமனையும் வென்றுவிட்டேன் எனக் கொக்கரித்தான். மேலும் மேலும் தவறுகளை வளர்த்துக் கொண்டான். சீதையை அபகரித்தது அவற்றுள் ஒன்று. இப்படித் தன் வலிமையால் பல பாவங்கள் செய்த இராவணன் மன்னிப்புக்கான அளவைமீறி இறுதியில் இராமரால் கொல்லப்பட்டான்.

இராவணன் மட்டுமல்ல, நம் எல்லோரின் பாவங்களையும் கடவுள் மன்னிக்கிறார். நம்மைத் திருத்திக்கொள்ள தரும் வாய்ப்புகளே, தெய்வம் நின்று கொல்வதாய்ச் சொல்லப்படுவது. வாய்ப்புக்களைக் கோட்டைவிட்டு, பாவச்சுமையை ஏற்றிக்கொண்டால், மன்னித்தது போதும் என தெய்வம் தண்டிக்கிறது என்றார் குரு. சீடன் தெளிவடைந்தான்.

*நாளை என்பது சோம்பேறிகளின் தினமாகும்.*

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

அவர்களின் அன்புக் கோரிக்கைக்கு இணங்க நாங்களும் செல்ல ஆயத்தமானோம். நாங்கள் செல்லவேண்டிய ஆலயம் சற்றுத் தொலைவில் இருந்ததால் உங்கள் பேருந் திலே நாங்கள் செல்லலாம் என்று எம்முடன் அவர்களிற் சிலரும் பேருந்தில் ஏறினார்கள். அவர்களில் ஒருவர் எனக்கு அருகில் இருந்த தால் அவருடாக அந்த ஆலயத்தைப்பற்றி அறிய முயன்றேன். அவர் வழங்கிய தகவல் களை ஞானச்சுடர் வாசகர்களாகிய உங் களுடன் பகிர்கின்றேன். தங்கள் கிராமத்தில் இது ஒன்றுதான் தங்கள் வழிபாட்டுக்குரிய கோவில் என்றும் ஏனைய சிறு சிறு பௌத்த வழிபாட்டுத் தலங்கள் உள்ளன என்றும் இல்லாவிட்டால் தாங்கள் அம்பாகோட்டை யில் உள்ள அம்மன் ஆலயத்திற்குத்தான் செல்லவேண்டும் என்றார்கள். அதுமட்டுமல்ல இங்கு எங்களில் ஒருவரான பூசாரி ஐயாதான் பூசை வைப்பார். ஆனால் அங்கு அம்பாளுக்கு பூசை செய்யப் பூசாரி ஐயா இருக்கிறார். இங்கு வெள்ளிக்கிழமைகளில் மாலையில் பூசை வைப்பார். எம்மில் பலர் கூடுவோம். எமக்குச் சிறு சிறு வருத்தங்கள் வரும் வேளைகளில் இங்கே அம்மனுக்கு நேர்த்தி வைத்து பூசாரி ஐயாவிடம் வந்து நீறு போடுவோம். வருத்தமெல்லாம் பறந்துவிடும். அதுமட்டுமல்ல, மாலை விசேட பூசையில் மேள வாத்தியமும் இடம்பெறும். ஐயாவுக்கு சாமி வந்துவிடும். அவர் அந்த வேளையில் வேப்பமிலை கொண்டு எமக்கு வாக்கும் சொல்லுவார். அவரின் வாக்குப் பலிக்கும். நோய் தீரும். மிக ஆக்கிரோஷமான ஆட்ட மாக இருக்கும். அந்தநிலையில் பூசாரி ஐயாவைப் பார்க்க முடியாது. ஒரு தெய்வீக நிலையில் ஆடியபடியே (வாத்தியத்திற் கேற்ப) குறி சொல்லுவார். அவை நிச்சயம் பலிக்கும் என எம்மவர்கள் நம்பியுள்ளனர். சூனியத்திற்காக நூலுங் கட்டுவார். சடங்கு நடக்கும்பொழுது (திருவிழா) மிக அற்புத மாக விளக்குகளாலும், கொடிகளாலும் அலங்காரம் செய்வார்கள். இன்று வந்துள்ளீர் கள் பாருங்கள். உங்களுக்குச் சிலவேளை களில் வாக்குக் கிடைக்கலாம் என்று தங்கள் அனுபவங்களைக் கூறினார். இதனை நான் எழுதியுள்ளேன். அவர்களுக்கேயுரிய தனித் துவமான மொழிக் கையாடலுடன் ஏற்ற இறக்கங்களுடன் மிகவும் உணர்வுபூர்வமாகச் சொன்னார். எனக்கு மிகவும் ரசனையாக இருந்தது.

எமது பேருந்து அந்தக் கிறவல் தெருவில் ஓடி ஒரு மருங்கில் நின்றது. மிக அழகான மலையகத்திற்கேயுரிய பச்சைப் பசேலென்ற கிராமம் சூழ இருப்பதை அவ தானிக்க முடிந்தது. வேலிகளில் எமது கறி முருங்கைத் தடியை அங்கொன்றும் இங் கொன்றுமாக நட்டிருந்தனர். அவையும் கொழு கொழு மொழுமொழு என வளர்ந்திருந்தன. அதேவேளை பூவும் பிஞ்சுமாக சில மரங்கள் தான் காணப்பட்டன. ஏனையவை சாதாரண மாக இருந்தன. அந்த இடப்பஞ்சத்திலும் வற்றாளை, வாழை என்பவற்றைச் சில குடிசை களின் முற்றங்களில் காணக்கூடியதாக

*திறமை தானாக வராது. நாம்தான் வளர்த்துக்கொள்ள வேண்டும்.*

இருந்தது. ஆலயத்தைப் பார்க்கிறேன். ஒரு புறம் ஆற்றோரம் பெரும் பெரும் கற்களைக் கொண்டு கரையோரத்தை அரிப்பில் இருந்து பாதுகாத்திருந்தனர். மறுபுறம் எமது தெரு. இதற்கிடைப்பட்ட ஒடுக்கமான நீர் நிலப்பரப்பில் ஆலயத்திற்குரிய எந்தவகை யான தூபியோ கோபுரங்களோ இன்றி ஓர் நீண்ட கடைத்தொகுதி போன்ற கட்டிடங்கள். எமது புகையிரதப் பாதை ஓரங்களில் உள்ள வேலிகள் மதில்களுக்கும் தண்டவாளப் பாதைக்குமிடையே அமைந்துள்ள சிறு கோவில்கள்போல உள்ளது. நாங்கள் இப்போ இக்கோவில்களுக்கும் பண்டிகைகள் அமைத்துவிட்டோம். ஆனால் நாங்கள் அந்த நாட்களில் இவற்றைப் பார்த்த கோலத்தில் காணப்பட்டது. நாங்கள் ஓர் பெரிய விசால மான கம்பிக்கிறாதி கதவுகளைக் கொண்ட கதவினூடாக ஆலயத்தினுள் பிரவேசிக்கின் றோம். மூலஸ்தானம் போன்ற ஓர் அறை. அதனுள் கம்பிக்கிறாதிகள்தான் அதற்கும் கதவாகப் போட்டிருந்தனர். அதனூடாக அம் பாள் சிலைவடிவில் தெரிகிறாள். ஆகமவிதிப் படி எதுவும் இல்லை. உட்சுவர்களில் ஆங்காங்கே இப்போதைய டிஜிற்றல் கலர் பிறின்றில் அமைத்த விநாயகர், சிவன், முருகன், அனுமான், கிருஷ்ணர், சரஸ்வதி, லக்ஷ்மி, துர்க்கை அனைத்துப் படங்களும் பெரிய அளவில் தொங்கவிடப்பட்டுள்ளன. சில படங்கள் கர்ப்பூர புகையேறியும் இருந் தன. இதற்கிடையே எமது வருகையறிந்த பலரும் வந்து கூடிவிட்டனர். சில சிங்களச் சகோதரர்களும் இளைஞர் வயோதிபருட்பட பலரும் கூடிவிட்டனர்.

முன்னால் ஓர் கம்பியில் எம்முன் ஆலய வாசலில் உள்ள கற்பூரத் தட்டு கம்பியில் நிறுத்தியிருந்தனர். அதில் எம்மில் சிலர் கொண்டு வந்திருந்த கற்பூரத்தை ஏற்றி னர். பூஜை தொடங்கியது. பூசகரைப் பார்க்கிறேன். மிக ஒல்லியான கறுத்த தேகம், தாடி, இடையில் ஓர் பழுப்பேறிய வேட்டி, ஏதோ ஓர் ஆகார்ஷண சக்தி பூசாரிக்கேற்ற கோலம். எமது தற்கால பூசாரிகளைப்போல பளபள பொன்னாடையோ கஷாய, காவி வேட்டியோ இல்லை மிகவும் பக்திபூர்வமாகத் தூபதீப ஆராதனையைத் தொடர்ந்து பூசாரி யார் எம்மை நோக்கி வருகிறார். எமது ஆச் சிரம சுவாமிகள் முன்னே வருகிறார். அவருக் கருகில் நாம் நிற்கிறோம். சுவாமிகளுக்குத் தீபத் தட்டை வழிபாட்டிற்காகக் கொடுக் கிறார். சுவாமிகளும் மிகவும் பயபக்தியுடன் தீபத்தை வணங்குகிறார். நான் மிகுந்த எதிர் பார்ப்புடன் ஏதாவது வாக்குச் சொல்வாரோ என்று நோக்குகிறேன். அப்படி எதுவுமே பேச வில்லை. அருகில் நின்ற எமக்கும் தீப தரிசனம் தொடர்ந்து சுவாமிகளின் காலில் வீழ்ந்து வணங்கியது மட்டுமல்ல எம்போன் றவர்களின் கால்களிலும் வீழ்ந்து வணங்கு கின்றார். நாம் விதிர்விதிர்த்துப் போனோம்

அந்த நாட்களில் எங்கள் கலை ஆடி குறி சொல்லும் பூசாரிமாரின் கோவில் களைப் போன்று அமைப்பு வழிபாட்டு முறை பக்தர்களின் கோலம் என்பன இருப்பதை எண்ணிய அதேவேளை பாவம் இவர்கள் எம்மைப்போன்று படாடோப வழிபாட்டிற்கு வர இன்னும் எத்தனை காலதூரம் பிர யாணிக்க வேண்டும் என என் மனம் எடை போட்டு இரங்கியதையும் உங்களுடன் பகிர்ந்தேயாகவேண்டும். இவர்களின் பக்கம் எம் காருண்யர்களின் பார்வையைத் திருப்ப இம்மலரூடாக அழைக்கிறான் கந்தன். தொடர்ந்து குளிப்பதற்காக...

(காட்சி தொடரும்...

தோல்வி என்பது உண்மையை நிலைநாட்ட ஏற்படும் அனுபவம்.

# சங்கு முழங்கடா தமிழா!

## (பக்தர்கள் பலவிதம்)

– திரு ச. லலீசன் அவர்கள் –

விக்கியின் சங்கொலியைக் கேட்காதவர்கள் சரசாலை மற்றும் மட்டுவிலில் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் கோவில் பக்கம் தலைவைத்துப் படுக்காதவர்கள் என்றுதான் பொருள்.

நான் சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் தரிசித்த அதே விக்கியை அண்மையில் சரசாலைக் காளி கோவிலில் தரிசிக்கும் வாய்ப்பைப் பெற்றேன்

1990 என நினைக்கின்றேன். காளிகோவிலில் இருந்து திருவெம்பாவை வீதி பஜனை இடம்பெறுவது வழக்கம். போர் அப்போது சற்று ஓய்ந்திருந்ததால் அதிகாலை ஊரடங்கும் இருக்கவில்லை.

அப்போதைய இளைஞர்களாகிய எங்களுடன் அமரர் வைரவப்பிள்ளை உபாத்தியாயர், அமரர் இராசாம்பாள் அக்கா எனப் பலரும் இணைந்து வழி நடந்த காலம். சரசாலை வீதிகளில் மோகனம் பெருக்கெடுத்துப் பாயும்.

மின்சாரம் இல்லாத அந்த நாட்களிற் கூட எம்முடன் இருந்த தயாவின் (தற்போது வவுனியா ஆசிரிய நிலைய முகாமையாளர்) தொழினுட்பத் திறனால் பற்றரியில் ரியுப் லைற் எரித்து உலா வந்த காலம். எங்கள் பஜனை ஒலி அதிகாலை வேளையில் அயலூர்களிலும் கேட்கவேண்டும் என்பது இளைஞர்களான எங்களில் அந்நாளைய விருப்பம்.

இதற்காக அறுத்தெடுத்த தண்டவாளம் ஒன்றை தடியில் கட்டித் தூக்கி அதனை இரண்டு பேர் காவ - சுட்டியலால் தண்டவாளத்தில் அடித்துச் சேமக்கல ஒலி எழுப்பியவர்கள் நாங்கள்.

எங்களுடன் இருந்த தெய்வீகன் (தற்போது கனடா) அதிகாலை 3.30 மணிக்கு மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்திற்கு அருகில் இருந்த விக்கியின் வீட்டுக்குச் சென்று நித்திரைப் பாயோடு விக்கியையும் சங்கையும் ஏற்றி வந்து விடுவான்.

பல்லுத் தீட்டுவது, முகம் கழுவுவது பற்றிய கவலையெல்லாம் விக்கிக்குக் கிடையாது. சங்கு ஊதுவதில் இருந்த வெறித்தனம் இவற்றை எல்லாம் அவருக்கு மறக்கப்பண்ணிவிடும்.

ஆறுமுகம் விக்னராஜா என்ற இயற்பெயருடைய விக்கி 18.04.1957 இல் மட்டுவிலில் பிறந்தவர். தந்தை அமரர் ஆறுமுகம் அப்பிரதேசத்தில் புகழ் பெற்ற ஆசிரியர். இயல்பில் ஒரு குழந்தைத்தனம் விக்கியுள் குடிகொண்டிருந்தது. தெய்வத்திருமகன் விக்கிரம் என வைத்துக் கொள்ளுங்களேன்.

"இது சரிப்பட்டு வராது. நான் விடப்போறன்.." என அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பார். அவரைப் பொறுத்தவரையில் இதுவே அவரது வாய்ப்பாடு. நாதஸ்வர வித்துவானுக்கு ஈடாக தனக்கும் மரியாதை தந்து கவனித்தால் என்ன என்பது அவரது அப்பாவித்தனமான எண்ணம்.

*சுதந்திரமாக இரு; எவரிடமும் இருந்து எதையும் எதிர்பார்க்காதே.*

விக்கியின் சங்கொலியைப் பற்றி எங்களுள் ரேண் போட்டு புழுகி அவரை மகிழ்ச்சிப்படுத்தி திருவெம்பாவைப் பஜனைக்கு ஆர்வத்துடன் அவரை வரவைத்தது இன்றும் பசுமையான நினைவாக இருக்கின்றது.

காளிகோவில், முத்துமாரி கோவில், பன்றித்தலைச்சி அம்மன் என அவரது சங்குக் கச்சேரி இடம்பெறாத கோவில்கள் இல்லை எனலாம்.

திருமுறைகளில் குறிப்பிடப்படும் சங்கு என்ற இந்த இசைக்கருவி தொன்மையானது. சம்பந்தரது தேவாரம் ஒன்றில் "ஆடும் பறை சங்கொலியோ" என வருகின்றது. கூவின பூங்குயில் கூவின கோழி.... எனத் திருவாசகத்தில் குறிப்பிடும் மணிவாசகர், "இயம்பின சங்கம்" என்கிறார்.

சங்குகளைப் பலவகையாகப் பாகுபடுத்துவர். இடம்புரிச் சங்கு, வலம்புரிச் சங்கு, சலஞ்சலம் என்னும் சங்கு, பாஞ்சசன்னியம் என்னும் சங்கு என அவற்றைக் குறிப்பிடலாம்.

விஷ்ணுவின் தெய்வீகச் சின்னங்களுள் சங்கும் ஒன்றாகும். விஷ்ணுவின் திருக்கரம் ஒன்றில் சங்கு காணப்படுகின்றது.

சங்கு ஒரு காலத்தில் பெரும் செல்வமாகக் கருதப்பட்டிருக்கின்றது. குபேரன் கொண்டிருந்த நிதிகளுள் ஒன்றாகச் சங்க நிதியைக் குறிப்பிடுகின்றனர்.

சங்கை உருவமாகக் கருதி மந்திரம் சொல்லும்போது "சங்கபுருஷன்" எனக் கொள்வர். சங்கை மங்கலப் பொருளாகவும் காவலாகவும் கருதி மனை, மாளிகை, கோவில், முதலியவற்றின் அத்திபாரங்களில் புதைக்கும் வழக்கமும் உள்ளது.

சங்கைத் தமது அடையாளமாக அரச இலச்சினையாகக் கருதும் வழக்கமும் இருந்திருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் வலம்புரி நாளிதழ் தனது அடையாளமாக சங்கைக் கொண்டிருக்கின்றது.

இன்று ஆலயங்களில் சங்கோசை எழுப்புவதற்கு ஆட்கள் கிடைப்பது அரிதாகிவிட்டது. நாகரிக போக்கினால் சிலருக்கு சங்கை ஊதுவதற்கு வெட்கமாகவும் இருக்கின்றது.

விக்கியுடன் பழகி இருபத்தைந்து வருடங்கள் கடந்த நிலையில் அவரது சங்கு நாதத்தை ஊன்றிக் கவனித்தேன். அதே வெறியுடன் சங்கு முழக்கினார்.

என்னைக் கண்டு அருகில் வந்தவர் "இது சரிப்பட்டு வராது. நான் விடப்போறன்.." என்றாரே பார்க்கலாம்.


**நாவிலே பாடலாய் வந்தருள்புரி சந்நிதிவேலா**

ஆசை வேரை அறுத்தாய் உன் மேல் பாடிட
பாசவேர் வளர்த்தாய் முருகா
நேசமாய் எம்மேலும் நினைவது கொண்டாய்
பாவி நாம் பட்டுழன்ற காம. பாச பந்தத்தை விடுத்தாய்
தேடி நாமுந்தன் தலம் தொழ வழி வைத்தாய்
தேவிமார் இருவரொடு தரிசனம் பொழி முருகா
பாடி நானுந்தன் (திருப்)புகழ் மனதில் கொள்ள
நாவிலே பாடலாய் வந்தருள் புரி சந்நிதி வேலவா.


*-சின்னப்பு தனபாலசிங்கம்-*

*தொண்டு என்பது அடிமை வேலையன்று; அது தெய்வப் பணியாகும்.*

# படங்கள் தரும் பதிவுகள்




ஆனிமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்களிற் சிலர்.



*சிறிய கடன் கடனாளியை உருவாக்கும். பெரிய கடன் எதிரியை உருவாக்கும்.*



ஆனிமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்களிற் சிலர்.



உன் அயலானை நேசி, ஆனால் வேலியை எடுத்துவிடாதே.

(கட்டுரைத்தொடர் - 22)

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## பதினெண் சித்தர்களில் பட்டினத்தார் - பாகம்- 01

பட்டினத்தார் என்ற பெயரில் தமிழகத்தில் மூவர் இருந்தனர். பதினோராந் திருமுறையில் வரும் பட்டினத்தார் பாடல்களைப் பாடியவர், பட்டினத்தார் பாடல் திரட்டு என்ற பகுதியில் வரும் பாடல்களைப் பாடியவர், பதினெண் சித்தர் ஞானக்கோவை என்ற நூலில் இடம்பெற்ற பாடல்களைப் பாடியவர் என மூவர் பட்டினத்தார் என்ற பெயருடன் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்தார்கள் எனக் கூறப்படுகிறது. இம் மூவரைப் பற்றியும் தனித்தனியான வரலாறுகள் எதுவும் கிடைக்கவில்லை. எல்லாச் செய்திகளும் பட்டினத்தார் என்ற தலைப்பிலேயே கூறப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டுச் சித்தர்களில் திருமூலர், பட்டினத்தார், சிவவாக்கியர் ஆகிய மூவரும் முப்பெரும் சித்தர்கள் எனப் போற்றப்படுகின்றார்கள். தமிழ் நாட்டின் காவிரிப்பூம் பட்டினத்தில் செல்வச் செழிப்புமிக்க வணிகர் குலத்தில் பட்டினத்தார் தோன்றினார். இவருடைய தந்தையார் பெயர் சிவநேசர்; தாயார் பெயர் ஞானகலை. திருவெண்காட்டு இறைவன் சுவேதாரணியப் பெருமான் திருவருளால் பிறந்தவர் ஆதலின் சுவேதாரண்யர் என்ற பெயர் இடப்பட்டு பின்பு திருவெண்காடர் என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார். சிவகலை என்னும் பெண்ணைத் திருமணம் செய்தார். குலத் தொழிலான வாணிபத்தில் சிறந்து விளங்கியதோடு திரைகடல் ஓடிப் பெருஞ் செல்வம் திரட்டி மன்னரும் மதிக்கத்தக்க பெரும் செல்வராக விளங்கினார். திருமணம் செய்து பல ஆண்டுகள் ஆகியும் மகப்பேறு கிடைக்காததினால் மிகவும் மனம் வருந்தினார். இவ்வூரில் வாழ்ந்த சிவசருமர் என்னும் சிவனடியார் குளக்கரையில் கண்டெடுத்த ஆண் குழந்தை ஒன்றைப் பட்டினத்தாரிடம் கொடுத்துப் பெரும் பொருள் பெற்றார். இவ்வாறு கிடைத்த குழந்தைக்கு மருதபிரான் எனப் பெயரிட்டு பட்டினத்தார் அன்போடு வளர்த்து வந்தார். பட்டினத்தாரின் வளர்ப்பு மகன் இவரிடம் ஒரு சிறு பெட்டியைக் கொடுத்துவிட்டு வீட்டிலிருந்து வெளியேறிச் சென்று விட்டார். அப்பெட்டியைத் திறந்து பார்த்தபொழுது அதனுள் ஓர் காதற்ற ஊசியும் ஓலைச் சீட்டும் இருந்தன. அந்த ஓலைச் சீட்டில் “காதற்ற ஊசியும் வாராது கண் கடைவழிக்கே” என எழுதப்பட்டிருந்தது. இவ்வளவு காலமும் தம்முடைய வளர்ப்பு பிள்ளையாக இருந்தவர் திருவிடை மருதூர் பெருமான் மருதப்பரே என்பதைப் பட்டினத்தார் தெரிந்து கொண்டார். அக்கணமே தன்னுடைய செல்வச் சிறப்பினை எல்லாம் உதறிவிட்டு துறவுள்ளம் பூண்டு கோவணாண்டியாகி வீட்டைவிட்டு வெளியேறினார்.

செல்வச் செழிப்புடன் வாழ்ந்த பட்டினத்தார் ஊர் ஊராகத் திரிந்து மக்களிடம் யாசகம் செய்தே தனது உணவினை உட்கொண்டு வந்தார். பிச்சை எடுத்து உண்பதில் தமது குலப்பெருமை அழிகிறதே என்று நினைத்த இவரது தமக்கையார் இவருக்கு நஞ்சு கலந்த அப்பத்தைக் கொடுத்து இவரைக் கொலை செய்ய முயற்சித்தார். திருவருளால் இதனை உணர்ந்துகொண்ட பட்டினத்தார், “தன்வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச்

*உழைத்துப் போராடாமல் வெற்றியை அடைய முடியாது.*

சுடும்'' என்று கூறித் தமக்கையார் கொடுத்த அப்பத்தை அவருடைய கூரையின்மீது எறிந்தார். கூரை தீப்பற்றி எரிந்தது.

ஒரு சமயம் இவர் பிள்ளையார் கோயிலிலே நிஷ்டையில் அமர்ந்திருந்தார். பத்திரகிரி ராஜாவின் அரண்மனையில் கொள்ளையிட்டுத் திரும்பிய கள்வர் சிலர் பிள்ளையாருக்குக் காணிக்கையாக ஒரு முத்துமாலையை வீசி எறிந்துவிட்டுச் சென்றார்கள். அது பட்டினத்தாரின் கழுத்தில் விழுந்திருந்தது. கள்வரைத் தேடிவந்த அரண்மனைச் சேவகர்கள் பட்டினத்தாரின் கழுத்தில் இருந்த முத்து மாலையைக் கண்டு இவர்தான் கள்வர் என்று கொண்டுபோய் அரசன் முன் நிறுத்தினார்கள். கள்வனை உடனே கழுவேற்றுக என அரசன் கட்டளையிட்டான். கழுமரத்தை ஏறிட்டு நோக்கிய பட்டினத்தார்

"என்செயலாவது யாதொன்றுமில்லை - இனித் தெய்வமே
உன் செயலே என்று உணரப்பெற்றேன்''

என்று பாடியதும் கழுமரம் தீப்பற்றி எரிந்தது. பத்திரகிரி மன்னன் இந்நிகழ்வைக் கண்டு வியந்து தனது அரசபோகத்தையெல்லாம் விட்டுத் துறவுபூண்டு பட்டினத்தாரையே தன் ஞானகுருவாகக் கொண்டான்.

பட்டினத்தார் துறவியாக அலைந்து திரிந்தபோது தனது அன்னையார் இறந்துவிட்ட செய்தியைக் கேள்விப்பட்டார். உடனே மயானத்திற்கு விரைந்தார். அங்கு சுற்றத்தார் அடுக்கியிருந்த விறகுகளைத் தள்ளிவிட்டு பச்சை வாழை இலைகளையும் மட்டைகளையும் அடுக்கி "ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்று'' என்ற பாடலைப் பாடித் தீ மூட்டினார். பூதவுடல் அக்கினியில் சங்கமமாகியது.

மன ஒருமைப்பாடு ஏற்படாமல் செய்யப்படும் வழிபாடுகள் யாவும் போலியானவை. இறைவன் அவ்வழிபாட்டை ஒருநாளும் ஏற்கவும் மாட்டான் என்கிறார் பட்டினத்தார். கையானது ஒரு தொழிலைச் செய்ய, கண் ஒரு பொருளை நோக்க, மனம் ஒன்றை நினைக்க, வஞ்ச நாவானது பொய்யினையே உரைக்க, உடலானது பரிச உணர்ச்சியில் நிற்க, காது பயனற்ற சொற்களைக் கேட்க செய்யப்படும் பூசை வழிபாடுகளினால் எதுவித பயனும் இல்லை என்பதைப் பட்டினத்தாரின் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழு
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசையெவ்வாறு கொள்வாய் வினை தீர்த்தவனே.

சிவபூசை செய்யும்பொழுது கருவி கரணங்களையும் அப்பூசை வழி நிறுத்த வேண்டும். புலன்களையும் மனத்தையும் பூசைவழி செலுத்தாது செய்யப்படும் பூசை திருட்டுப்பூசை எனப்படும்.

மனதுக்கு உபதேசம் செய்யும் பாடல்கள் பல பட்டினத்தார் பாடல்களில் காணப்படுகின்றன. மனமே! நீ தெய்வம் ஒன்று என்று இரு; அத்தெய்வம் என்றும் உண்டு என்பதையும் நினைவில் கொள்; இவ் உலகத்தில் உயர்வாக எண்ணப்படும் செல்வங்கள் எல்லாம் பொய்யானவை என்பதை அறிந்துகொள். பசித்தவர்களுடைய முகத்தைக் கருணையோடு பார்த்து அவர்களுக்கு அன்னமிடும் பணியை நிறைவாகச் செய்துகொள். சிறந்த அறச் செயல்களும் சான்றோரின் நட்பும் எமது நல்வாழ்விற்கு என்றும் துணையாக

*படிப்பு என்ற மெழுகுவர்த்திக்கு ஆர்வமே திரி.*

இருக்கும். நடுவு நிலைமையில் நின்று நீங்காமல் இறைவன் நமக்கு அளித்தவை இவையே என்று நினைத்து மன அமைதியுடன் இருப்பாயாக என்று மனதுக்கு உபதேசம் செய்யும் பாடலைப் பட்டினத்தார் அருளியுள்ளார்.

ஒன்றென்று இரு தெய்வம் உண்டென்று
இரு உயிர் செல்வம் எல்லாம்
அன்றென்று இரு பசித்தோர் முகம்
பார்நல் அறமும் நட்பும்
நன்றென்று இரு நடு நீங்காமலே
நமக்கு இட்ட படி
என்றென்று இரு மனமேயுனக்கே
யுபதேசம் இதே.

நல்லவர்களுடைய சேர்க்கையும், இறைவனுக்குச் செய்யும் வழிபாட்டில் விருப்பமும், ஞானமும் அல்லாமல் உறுதிநிலை வேறு எதுவும் இல்லை. வீடு, நிலம் முதலியனவும், மனைவியும் மைந்தரும், சுற்றமும், செல்வ வாழ்க்கையும் அழகு பொருந்திய உடலும் மாயையின் வெளி மயக்கத்தினால் ஏற்பட்டவையே என்கிறார் பட்டினத்தார். திருக்காஞ்சியில் எழுந்தருளியுள்ள ஏகாம்பரநாதனை விளித்து பட்டினத்தார் மேற்கூறிய கருத்துக்களை விளக்கும் பாடலைப் பாடியுள்ளார்.

நல்லார் இணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ அகமும் பொருளும்
இல்லாளும் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழில் உடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா கச்சியேகம்பனே.

கல்வி அறிவில்லாதவர்களுடைய உள்ளத்தில் கடவுள் வீற்றிருக்கமாட்டார். கல்வி அறிவில்லாதவன் மிருகம் (வித்யா விஹீன பசு) என்றே வடமொழிச் சுலோகம் ஒன்று குறிப்பிடுகிறது. "கல்லார் நெஞ்சில் நில்லானீசன்" என ஞானசம்பந்தரும் கூறுகின்றார். நினைத்தல் மனத்தால் செய்யும் தொண்டு, துதித்தல் வாக்கால் செய்யும் தொண்டு, தொழுதல் உடம்பால் செய்யும் தொண்டு.

ஞான நூல்களைப் படியாத குற்றத்தையும் அவற்றைப்பற்றிச் சிந்தியாத குற்றத்தையும், மனமுருகி இறைவனைப் பிரார்த்தனை செய்யாத குற்றத்தையும் இறைவனின் திருவடித் தாமரைகளை அகத்திலே நிறுத்தித் தியானம் செய்யாத குற்றத்தையும், பஞ்சாட்சர மந்திரத்தைச் செபியாத குற்றத்தையும் இறைவனை வாயால் கசிந்துருகிப் பாடித் தோத்திரம் செய்யாத குற்றத்தையும் வணங்காத குற்றத்தையும் மற்றுமுள்ள எல்லாக் குற்றங்களையும் பொறுத்தருள வேண்டுமென்று காஞ்சியிலே இருந்து அருள்புரியும் ஏகாம்பரநாதப் பெருமானை பட்டினத்தார் வேண்டுகின்றார்.

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின்னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.

*சிந்திக்காமல் பேசத் தொடங்குவது குறிபார்க்காமல் அம்பை விடுவதற்குச் சமம்.*

இன்றும் நமது ஆலயங்களில் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனைகளில் இப்பாடலைப் பாடியே பஜனையை நிறைவு செய்வது மரபாக உள்ளது.

திருவருட் செல்வம் கைவந்தோர் என்றும் தவத்தில் கருத்துடையவராயிருப்பர்; சாந்த குணத்திலே நிலைத்திருப்பர்; உயிர்களிடத்தில் இரக்கமுடையவராயிருப்பர்; அன்பே சொருபமாகக் காட்சி தருவர்; அவர்களது மொழி கேட்போரது அஞ்ஞானத்தை அழிக்கும் சிவமொழியாகும்.

பொருட் செல்வம் உடையவர்களை அவர்களுடைய கொடையினால் அறிந்து கொள்ளலாம். வீரர்களின் உண்மையான வீரத்தினை போர்க்களத்தில் தெரிந்து கொள்ளலாம். தெளிந்த அறிவுடையோரை அவர்களுடைய முகத்தில் காணப்படும் ஒளியினால் அறிந்து கொள்ளலாம். திருவருட் செல்வமுடையோர்களை அவர்களது தவத்தினாலும் நல்ல குணத்தினாலும், உயிர்களிடத்துக் காட்டும் அருளாலும் தம்முடன் தொடர்புடையவரிடம் காட்டும் அன்பினாலும் அவர்களுடைய வாக்கினாலும் அறிந்து கொள்ளலாம் எனப் பட்டினத்தார் தனது பாடலின் ஊடாக விளக்குகிறார்.

பொருளுடையோரைச் செயலினும் வீரரைப் போர்க்களத்தும்
தெருளுடையோரை முகத்தினும் தேர்ந்து தெளிவது போல்
அருளுடையோரைத் தவத்தில், குணத்தில், அருளில், அன்பில்
இருளறு சொல்லினும் காணத் தகும் கச்சிஏகம்பனே.

பொய் பேசுபவர்களிடத்தில் எல்லாத் துர்க்குணங்களும் நிறைந்திருக்கும். பொய் சொல்லாமல் நடக்கின்ற புனித வழியை மேற்கொண்டால் போதும். மற்ற எந்த தான தருமங்களும் செய்ய வேண்டியதில்லை என்கிறார் வள்ளுவர்.

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

-குறள் 297-

மானிடப் பிறப்பெடுத்து இந்த மண்ணிலே வாழ்கின்றவர்களில் சிலர் ஓயாமல் பொய் பேசுவார்கள். நல்லவர்களைக் குறை கூறுவார்கள். தவஞ் செய்து தன்னைப் பெற்ற தாயாரைத் திட்டுவார்கள். வஞ்சனைகள் பல செய்வார்கள். ஞான நூல்களை ஆராய்ச்சி செய்யமாட்டார்கள். மற்றவர்க்கு இடுக்கண்வரின் அதனைப் போக்குவதற்கு உதவி செய்ய மாட்டார்கள். தம்மை அடைக்கலமாய் அடைந்தவர்கட்கு எதையுமே கொடுக்கமாட்டார்கள். இத்தகையவர்கள் இவ்வுலகத்தில் வாழ்வதால் எவ்வித பயனும் இல்லை; இறப்பதாலும் எதுவித இழப்புக்களும் ஏற்படப் போவதில்லை என்கிறார் பட்டினத்தார்.

ஓயாமல் பொய் சொல்வர் நல்லோரை நிந்திப்பர் உற்றுப் பெற்ற
தாயாரை வைவர் சதியாயிரம் செய்வர் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குபசாரம் செய்யார் தமை அண்டினார்க் கொன்று
ஈயார் இருந்தென்ன போய் என்ன காண் கச்சிஏகம்பனே"

விபூதியும், உருத்திராக்கமும் புறச் சிவசின்னமாகவும், பஞ்சாட்சர மந்திரம் அகச் சிவசின்னமாகவும் சைவர்களால் போற்றப்படுகிறது. நீறில்லா நெற்றி பாழ் என்பது தமிழ் மூதாட்டி ஔவையின் வாக்காகும். நெற்றியிலே திருநீறு அணியாதவர்கள் நமக்கு முன்னாலே வந்தால் நாம் அச்சம் கொள்ளவேண்டும் என்பதை,

*மனிதன் தோல்வியின்மூலமே மேலும் புத்திசாலி ஆகின்றான்.*

"வெண்ணீறு அணிகிலாதவரைக் காணில்
அம்ம நாம் அஞ்சுமாறே"

என மணிவாசகரின் திருவாசகமும் குறிப்பிடுகிறது. நாம் இறைவனிடம் தஞ்சம் அடைவதற்குரிய மந்திரம் நமசிவாய மந்திரம் என்பதை,

போற்றி ஓம் நமசிவாய புயங்கனே மயங்குகிறேன்
போற்றி ஓம் நமசிவாய புகலிடம் பிறிதொன்றில்லை

எனத் திருவாதவூரரும் தனது தெய்வ வாசகத்தில் குறிப்பிடுகின்றார்.

உயிர் உடலில் இருந்து பிரியும் காலத்தில் சிவத்தியானத்தோடு பிரிதல் வேண்டும். இல்லையேல் பிறவிநோய் தொடரும். எடுத்த பிறப்பைச் சரியாகப் பயன்படுத்தி ஆன்மீக நெறியில் நிற்காததால்த்தான் பிறவி தொடர்கிறது என்பதைப்,

"பின்னை நின்றென்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்"

எனத் தமிழ் மந்திரமாகிய திருமந்திரமும் குறிப்பிடுகிறது.

கண்கள் பஞ்சடைந்து, புலன்கள் ஒடுங்கி உயிர் உடலை விட்டுப் பிரியும்போது, நெற்றியிலே திருநீறு அணிந்திருந்தால் ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலங்கள் அத்தனையும் நீறாகிவிடும். நாவால் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதினால் சிவத்தியானம் உண்டாகும். இதனைத் தந்தருள வேண்டுமென்று திருவொற்றியூர்ப் பெருமானின் திருவருளைப் பட்டினத்தார் வேண்டுகின்றார்.

ஐயும் தொடர்ந்து விழியும் செருகி அறிவிழந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போது ஒன்று வேண்டுவன் யான்
செய்யும் திருவொற்றியூர் உடையீர் திருநீறு மிட்டுக்
கையும் தொழப் பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே.

சிவகாமி அம்பாளின் தாளத்திற்கு ஏற்ப நடராஜப் பெருமான் ஆனந்த நடனம் புரியும் திருத்தலம் சிதம்பரம். நாயன்மார்கள் நால்வரும் உள்ளம் உருகிப் பாடிய தலம். ஓடாது நின்ற தேரை ஓடச் செய்வதற்காகச் சேந்தனார் திருப்பல்லாண்டு பாடிய திருத்தலம். சிவனை மறவாச் சிந்தையாளர்களாகிய சிவனடியார்களின் வரலாற்றினை பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டச் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தை அருளிய தெய்வமணம் கமழும் திருக்கோயில் சிதம்பரம்.

சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள சிவகுருநாதனை வேண்டிப் பட்டினத்தாரும் பாடல்களைப் பாடியுள்ளார். ஏற்றத்தாழ்வு நோக்காமலும், யாசிப்பவர்களுக்கு இல்லையென்று சொல்லாமலும் பிறர் குற்றங்களைக் கூறித் திரியாமலும், பாவங்கள் வந்து நெருங்காமலும், நன்னெறியில் ஒழுகும்போது மனம் தளர்ந்து தீய வழியில் செல்லாமலும், நாள்தோறும் நான் செய்யும் வழிபாட்டில் இருந்து தவறாமலும் அன்பு செலுத்தும் பண்பு இல்லாதவர்களுடன் கூடாமல் இருப்பதற்குக் காரணமான திருவருட் செல்வத்தை நமக்குத் தந்தருள வேண்டுமென்று பட்டினத்தார் சிதம்பர தேசிகனைப் பிரார்த்திக்கின்றார்.

பாராமல் ஏற்பவர்க்கு இல்லை என்னாமல் பழுது சொல்லி
வாராமல் பாவங்கள் வந்தணுகாமல் மனமயர்ந்து
பேராமல் சேவை பிரியாமல் அன்பு பெறாதவரைச்
சேராமல் செல்வம் தருவாய் சிதம்பர தேசிகனே" (தொடரும்...

*மன்னிக்கும் உள்ளத்தில் கடவுள் குடியிருக்கின்றார்.*

# இந்து தத்துவத்தினூடாக சான்றோர் காட்டிய அமைதி வாழ்வும் அன்பு நெறியும்

– செல்வி தில்லைநாயகி நடராசா அவர்கள் –

மிகப் பழமைவாய்ந்த மதம் என்ற நிலையில் எமது இந்துமதம் முதல் இடத்தைப் பிடித்துக்கொண்டுள்ளது. அவனியில் அன்பு பெருகி அறம் வளர்த்து அமைதி நிலவி ஆனந்தமாய் வாழ்வதற்கு இறையருளின் அவசியத்தை ஆன்றோர்கள் அனுபவபூர்வமாக உணர்ந்து உலகிற்கு எடுத்துரைக்கின்றார்கள். இவ்வரிசையில் நாயன்மார்கள், அடியார்கள், சைவச் சான்றோர்கள், சித்தர்கள், வேதாந்திகள் குறிப்பிடத்தக்கவர்கள்.

"தன்னையறிய தனக்கு ஒரு கேடில்லை
தன்னையறியாமலே தான் கெடுகிறான்"

என்ற திருமூலரின் வாக்கின்படி மனிதன்தான் பிரம்மத்தின் வடிவம் ஆகும். அவனுள் பிரம்மம் அடங்கியுள்ளது என்ற ஆன்மீக உண்மையை அறிய வேதங்கள், வேதாந்தங்கள், ஆகமங்கள் உதவுகின்றன.

தமிழ் வேதமாகிய திருமுறைகள் மெய்யன்போடு ஓதி உய்வடைந்த தன்மைகளை நாயன்மார் வரலாற்றினூடாக அறிகின்றோம். திருவாசகத் தேனைத் தந்த மணிவாசகப் பெருமானிடம் இறைவனே எழுந்தருளி "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என வேண்டினார். தில்லையிலே மணிவாசகப் பெருமான் கோவைப் பாசுரங்கள் நானூறையும் பாட இறைவன் தமது திருக்கரங்களால் எழுதிக் கைச்சாத்திட்டு மறைந்த செய்தியை திருக்கோவையார் நூலின் வாயிலாக அறிகின்றோம். இந்நூலின் பொருளை நோக்கும்போது அகப்பொருட் கருத்துடையதாகக் காணப்படுகிறது.

திருமந்திரநூலை நோக்கும்போது திருநந்திதேவரினால் திருமூலருக்கு உணர்த்தப்பட்ட ஆகமங்களை மக்கள் யாவரும் உணர்ந்து கொள்ளும்படி மூவாயிரம் ஆண்டுகள் திருவாவடுதுறையில் நிஷ்டையிலிருந்து வருடத்திற்கு ஒன்றாகப் பாடிய பாசுரத்தின் மகிமை அடியார்களாலும் இந்துக்களாலும் போற்றுதலுக்குரியது. இனிய சொற்களால் ஆழமான ஞானக் கருத்துக்களையும் படிப்பவர் உள்ளத்தைக் கவரும் வண்ணம் சாத்திர நூலாக மட்டுமன்றி தோத்திர நூலாகவும் விளங்குகிறது.

அந்நியர் ஆட்சியும் கிறீஸ்தவ மத மாற்றங்களும் தலைதூக்கிய காலத்தில் சைவத்தையும் தமிழையும் வளர்க்க எழுந்தவர் நாவலர் பெருமான். சைவ மக்கள் ஏழு வயதில் சமய தீட்சை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் ஆலயம் ஆன்மாக்கள் லயப்படும் இடம் எனவும் ஆலயத்திற்குச் செல்லும்போது நீராடித் தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்துச் செல்ல வேண்டும் என்றும் வழிபாட்டுமுறை அனுட்டான முறைகள் யாவும் நாவலர் பெருமான் மிக அழகாகக் கூறியுள்ளார்.

குருவருளே திருவருளைப்பெற பெரிதும் துணைபுரிகின்றதென்பதனை நம் பெரியோர் தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள். இறைவன் திருவடியை அடைவதற்கு வழிகாட்டியாய் இருப்பவர் குருவேயாகும். மணிவாசகருக்கு குருந்தமர நிழலில் குருவடிவாக வந்து உபதேசித்தமையை வரலாற்றால் அறிகிறோம். குருவை நிந்தித்தவர்கள் படும் கஷ்டங்களையும்

காண்கின்றோம். ஆன்மாக்கள் உய்யும் நெறிக்கு வழிகாட்டிகளாக திகழ்பவர்கள் ஆசார்ய புருஷர்கள். அறியாமையால் அகந்தை கொண்டு அல்லற்படும் மக்கள் உண்மைநிலையினை அறிவதற்கு துணை புரிந்து சிந்தையைத் தெளிவுபடுத்தி அன்பை வளர்த்து எவ்வுயிரையும் தன்னுயிர்போல் கருதும் நிலையினை அடைந்து தன்னுள் சுடர்விடும் இறவாத தன்மையை எய்துவதே சீவன் முத்தர் நிலையாகும்.

சச்சிதானந்தமான பிரமம் ஒன்றே இது வேதத்தின் தலையாய விளக்கமாகும். மனிதன் அகங்கார மமகாரங்கட்கு உட்பட்டு உலக விடயங்களிலீடுபட்டு மாய வலையில் அகப்பட்டுக் கொண்டு தன்னுள் அடங்கியிருக்கும் ஆத்மஞானத்தை அறிய முடியாமல் அஞ்ஞானத்தில் மூழ்கிக் கிடக்கும் மாயை நிலையை நீக்கி உள்ளத்தின் மாசினை அகற்றி தன்னுள் இருக்கும் ஒளிமயமான மெய்யறிவை அறிவதற்கு உகந்த சித்தாந்தத்தை எடுத்துரைத்து உலகை உய்விக்க அவதரித்த மகான் ஸ்ரீ ஆதிசங்கர். சிவதத்துவத்தை விளக்கி சிவ ஞானத்தை செவ்வனே எடுத்துரைத்து அத்வைத சித்தாந்தத்தை ஸ்தாபித்த மகான் ஸ்ரீ ஆதிசங்கரர்.

திராவிட சார்யா சங்கரர் பரம்பரைக்கு முன்னர் விளங்கிய பிரம்பநந்தி. திராவிட சார்யார் பதஞ்சலிமுனிவர் கௌடபாதடாசார்யார் முதலானோர் வேதப் பொருளை விளக்கிப் பரமார்த்த தத்துவத்தை தெளிவுபடுத்தி ஆத்மஞானத்தை அடைய வழிகாட்டியவர்கள் ஆயினும் ஆதிசங்கரரே அத்வைத சித்தாந்தத்தை முதன்முதலாக விரிவாக உபதேசித்து வைதீக மாற்றத்தைப் பாரதம் முழுவதும் பரவச்செய்தருளினார்.

சங்கரர் நிலைநாட்டிய அத்வைத சித்தாந்தம் மனதைப் பக்குவப்படுத்தி எல்லா வற்றையும் தன்னைப்போல் கருதி நேச மனத்துடன் பெருக்கி ஈசன் எங்கும் நிறைந்திருப்பதைக் காணும்படி செய்கிறது. இந்நிலை ஏற்பட இடைவிடாப் பக்தியும் அகத் தூய்மையும் அவசியமாகிறது. அகத்தூய்மை ஏற்படும்போது அன்பு மலர்கிறது. அன்பின் வளர்ச்சியால் அனைத்தும் ஒன்றாகக் கருதும் மனத் தெளிவும் பக்குவமும் ஒருமை நிலையும் உண்டாகிறது. வேற்றுமை அகல்வதால் அமைதியும் அமைதியினால் ஆனந்தமும் கிட்டுகிறது. அதுவே இன்பநிலை. எல்லாம் சிவமயம் என்பதும் அன்பே சிவம் என்பதும் புலனாகிறது. அன்பு இல்லை என்றால் அருள் இல்லை. அருள் இல்லை என்றால் வாழ்விற்குப் பொருள் இல்லாமல் பயனற்றுப் போகின்றது. வாழ்வின் பலனைப்பெற அருள் அவசியம் என்றால் அருளைப் பெறுவதற்கு அன்பு அவசியமாகிறது. அனைத்திற்கும் அன்பு ஆதாரம் என்பதனை எடுத்துரைத்த சான்றோர் பாதம் பணிந்து பயன்பெறுவோமாக.

---

**கடவுளின் படைப்பு**

ஒரு துறவியும் அவர் சீடரும் நடந்து சென்றுகொண்டிருந்த வழியில் அழகான ரோஜாச் செடியில் பூத்த பூக்களை சீடன் பறிக்கப்போக, நறுக்கென கூரிய முள் அவன் கையைக் குத்தியது. சீடன், "குருவே! இத்தனை அழகான பூப்பூக்கும் செடியில் கடவுள் முள்ளை வைத்திருக்கிறாரே!" என்றான். அதற்குத் துறவி, "ஏன் அப்படி நினைக்கிறாய்? இச்செடி வெறும் முட்செடியாக இருந்தால் இதை யாராவது நேசிப்பார்களா? அழகான ரோஜாப் பூக்களை பூக்கவிட்டு இந்த முட்செடிக்கும் மரியாதை ஏற்படுத்திக்கொடுத்த கடவுளின் படைப்பை நினைத்து வியக்க வேண்டாமா? எதையும் நேர்மறையாகச் சிந்திக்க வேண்டும்" என்று அறிவுரை கூறினார்.

-பக்தி-

*சிறிய தவறுகளைத் திருத்திக்கொள்ளாவிட்டால் பெரிய தவறுகளைத் தவிர்க்க முடியாது.*

# ஆராமையின் முகிழ்ப்பே தீராத பிள்ளைத்தமிழ்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

ஆராத இன்பந்தரும் தீராத விளையாட்டுப் பிள்ளைகளுக்கான ஒரு முகிழ்ப்பே, நீராய் உருக்கியே வைக்கும் பிள்ளைப்பாட்டாம் - தெவிட்டாத பிள்ளைத்தமிழாகும். பிள்ளைப் பராயத்திலே ஓடி ஆடி விளையாட வைத்தும், வயதுக்கு வந்தபின் சைவத்திலும், தமிழிலும் ஆர்வத்தை ஊட்டி பிரகாசிக்க வைத்தும் ஒவ்வொரு கிராமங்களிலும், நாடறிந்த புலவர் களினால் பிள்ளைத்தமிழ் பாடப்படுவது பாரம்பரியமாகும்.

பண்டிதர் சோ. தியாகராஜபிள்ளை அவர்கள் வழங்கிய பிள்ளைத்தமிழ் சமர்ப்பணத்தில், தான் பிறந்து வளர்ந்து ஆளாகிய கரம்பன் ஊரில் வாழும் பச்சிளம் பாலகர்களுக்கு, தாம் இயற்றிய அந்நூலை அர்ப்பணித்தமை, அந்த ஊருக்கு மகிமை சேர்க்கிறது.

**சிறப்பு**

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இதுபற்றிக் கூறுகையில், எந்தவொரு இலக்கியப்படைப்பையும் துருவித் துருவிப் படிக்கும்போது அதிலே ஒரு இன்பம் ஏற்படும். மனத்தைப் பறிகொடுக்க வேண்டி வரும். அவ்வாறான இன்ப நுகர் வினால், பிள்ளைமனம் பிறக்கும். அந்தநிலை முதுமையையும், புலமையையும் சுறுசுறுப் பாக்கும். சும்மா இருக்க விடாது. ஏதோவொரு முகிழ்ப்பினை ஈன்றே தீரும். அந்த வடிவங்களில் ஒன்றுதான் பிள்ளைத் தமிழ். செந்தமிழுக்கு இதுவும் ஒரு தமிழ்ப்பிள்ளையாகும். நாம் பிள்ளைகளைத் தூக்கிக் கொஞ்சி மகிழ்வோம். இத்தகு மகிழ்வின்பால் ஏற்பட்ட விளை வினாலே ஆட்பட்டதுதான் எம் தமிழணங்கினைக் காதல் கொள்ள வைக்கும் பிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்தமாகும்.

"பாடாமல் இருக்க மாட்டாமையினால்
வாடாமை மலர்ந்ததே பிள்ளைத்தமிழ்"

பிள்ளையின் பருவந்தோறும் அவ்வப் பருவத்திற்கேற்ற விளைச்சல்களை கற்பனைகளாக வடித்துக் காட்டுவதே பிள்ளைத் தமிழாகும். ஈழத்திலே பல புலவர்கள் இப்பிரபந்தத்தைப் பாடியருளியுள்ளார்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுகம் அளிப்பன. சுந்தரரின்பால் வயப்பட்ட பண்டிதர் தியாகராஜபிள்ளை அவர்கள், அவரது திருமணக் கோலத்திலிருந்து, பச்சிளங் குழந்தைப் பருவத்திற்கு அழைத்து வந்து பாடுகின்ற பாங்கு மிகவும் அலாதியானது. அதுவே சுந்தரர் பிள்ளைத்தமிழாகும்.

பிள்ளைத்தமிழ்ப் பாடல்களைத் தெளிவுறப் பாடுமிடத்து, மூன்றாம் மாதம் முதலாக இருபத்தோராம் மாதம் வரையிலும் (03-21) அமைந்த மாதங்களுள் சிறந்தனவாகிய ஒன்றித்த மாதங்களில் காப்பு முதலாகியுடைய அந்நூலை உரியோர்கள் கேட்கும் படியாகப் புலவர்கள் கூறுவார்கள். பிள்ளைகளிலும் ஆண்பாற்காயின் பதினாறு ஆண்டளவும், பெண்டாற்காயின் பூப்புப் பருவம் வரையினும் இது பாடி மகிழப்படும்.

**வகைகள்**

"காப்பொடு, செங்கீரை, தால், சப்பாணி
யாப்புறு, முத்தம் வருக என்றல் முதல்
அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர்
நம்பிய மற்றவை சுற்றத் தளவென
விளம்பினர் தெய்வ நலம்பெறு புலவர்"

என பன்னிரு பாட்டியலை ஆதாரமாகக் கொள்வர். முறையே சொல்லப்பட்ட பத்துப் பருவங்களும்,

1) காப்புப் பருவம்
2) செங்கீரைப் பருவம்
3) தாலப்பருவம்
4) சப்பாணிப்பருவம்
5) முத்தப்பருவம்
6) வருகைப்பருவம்
7) அம்புலிப்பருவம்
8) சிற்றிற் பருவம்
9) சிறுபறைப்பருவம்
10) சிறுதேர்ப்பருவம் என்பன.

பத்துப் பருவங்களிலும் "முத்துப் பருவம்" இனிக்கும் சுவை தருவதாகும். குழந்தைகளிடம் முத்தம் பெறுகையில், பெரும்பாலும் அவர்களிடம் தழுவிக் கொள்ளுதல் இயல்பாதலின், அதனை யாப்புறு முத்தம் என இலக்கிய வித்தகர்கள் குறிப்பிடுவர். பண்டிதமணி இரசித்த பண்டிதரின் பாடலிது.

**முத்தம்**

பொழியுங் கருணைப் பெருவெள்ளம்
புணரும் வெண்ணெய் அருட்டுறையுள்
புகுந்து மூழ்கி முத்தெடுத்தும்
புன்னை வன்னி மணம் நாறும்,
விழியும் மனமும் குளிரவரு
விமலர் உறையும் ஆரூரில்
விளங்கு பரவைதனை அணைந்து
விளையாட் டயர்ந்து முத்தெடுத்தும்

இழியும் செம்பொன் முத்தாற்றில்
இட்டுப் பொய்கை தனிலெடுத்தும்
ஏற்றங் காணப் புக்கொளியூர்
இனிய மடுவில் முத்தெடுத்தும்

அறிவு தலைக்குக் கிரீடம்; அடக்கம் காலுக்குச் செருப்பு.

மொழியும் மதுரக் கனிவாயால்
முத்தந் தருக முத்தமே
முழங்குந் தமிழ்தேர் திருநாவ(ா)ல்
முதல்வா முத்தந் தருகவே.

பத்துப் பருவங்களிலும் முத்தப் பருவம் தித்திப்பதாகும்.

கயிலையிலிருந்து இறங்கிப் பூவுலகில் வாழ்வை முடித்துக்கொண்டு, மீண்டும் கயிலைக்கு ஏகியதே சுந்தரர் சரிதம். இதனை நன்குணர்ந்த பண்டிதர் தியாகராஜப்பிள்ளை அவர்கள் சுந்தரரைப் பிள்ளையாக அனுபவித்து முத்தம் பெற்றமை செம்மொழியாம். தமிழின் இளமை தரும் கன்னித்தன்மைக்கு பத்துப் பருவங்களும் எடுத்துக்காட்டாகும். இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா அவர்கள் இயற்றிய சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மை பிள்ளைத்தமிழ் (1987), வல்லிபுர மாயவன் பிள்ளைத்தமிழ் (1989), முதுபெரும் புலவரின், பறாளை சிவசுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ், சந்நிதி முருகன் பிள்ளைத்தமிழ் இன்னும் பலவும் படித்துச் சுவைத்துப் போற்றத்தக்கவையாகும். பிள்ளைத்தமிழ் பாடினால் கொள்ளையின்பம் நெஞ்சை அள்ளும். தேடிப் பாடுங்கள்.

**பக்குவம்**

நமது பெரியார்கள் இறைவனிடம் அன்பினைச் செலுத்த பல வழிகளை வகுத்துத் தந்திருக்கிறார்கள். தாய், தந்தையராக, தலைவன் தலைவியாக, நாயகன் நாயகியாக, தோழன் தோழியாக எல்லாவற்றுக்கும் மேலாகப் பச்சிளங் குழந்தையாகப் பாவித்து, சீராட்டி மகிழுங் கவிதையே பிள்ளைத் தமிழ் என்பதை நாம் உணர்ந்து பட்டத்திற்காக அல்லாது தமிழின் பக்குவத்திற்காக பாடி இன்புறுவோமாக. தமிழில் பெரியாழ்வாரே முதன்முதலில் கண்ணனது பிள்ளைப் பருவத்தைப் பாடலாக வடித்துள்ளார். குமரகுருபரர் பிள்ளைத்தமிழ், திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ், அழகர் பிள்ளைத்தமிழ், மாசிலாமணி தேசிகர் இயற்றிய சம்பந்தர் பிள்ளைத்தமிழ், கலாநிதி மு. கந்தையாவின் நாவலர் பிள்ளைத் தமிழ் ஆகிய இவை எல்லாம் தமிழை அழகொழுக வாரி அணைக்கத்தக்கவையாகும்.

1) கருணை என்றும் புரக்க,
2) செங்கீரை யாடியருள,
3) இசைஞானி பயந்த சிறுவா தாலோ,
4) கொழுந்தே கொட்டு சப்பாணி,
5) உவந்தே முத்தந் தருக,
6) இசைக்கும் வண்டே வருக,
7) அம்புலீ ஆட வாவே,
8) அரசே சிற்றில் சிதையேலே,
9) சிறுபறை முழக்கியருளே,
10) சிறுதேர் உருட்டியருளே

ஆகிய பிள்ளைத்தமிழ்ப் பக்குவங்களை ஆற அமர நுகர்ந்து விளக்கவும், கேட்கவும் இனியாருளர்?


*அதிஷ்டத்தை என்றும் நம்பாதே. அது உன்னைச் சோம்பேறியாக்கும்.*

# மலேசியப் பயணத்தின் முன்னோடி:

(தொடர்ச்சி...

– திரு செ. மோகனதாஸ் சுவாமிகள் –

தலயாத்திரைமூலம் எம்மால் மேற்கொள்ளப்படும் பயண ஒழுங்கின் அடிப்படையில் நாடுவிட்டு நாடு போகும் செயற்பாட்டிற்கு நாட்டில் உள்ள சட்டவரையறைக்குட்பட்டு செயலாற்ற வேண்டியது மிகவும் அவசியமான ஒன்று. அதனடிப்படையில் 2008ஆம் ஆண்டு என்னால் மேற்கொள்ளப்பட்ட வட இந்திய தலயாத்திரை முதன்மை பெறுகின்றது. இராணுவ கெடுபிடிகளின் மத்தியில் அப்பயணம் அமைந்ததற்கு காரணமாக விளங்கியவர் அக் காலப்பகுதியில் ஆச்சிரமத்தால் மேற்கொண்டிருந்த இலவச மருத்துவப் பணிக்கு தன்னாலான பங்களிப்பை வழங்கிவந்த மகப்பேற்று நிபுணர் G. பவானி அவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அவரது விடாமுயற்சி காரணமாக தலயாத்திரைக்கு முகவராக விளங்கிய திரு T. ஸ்ரீரங்கநாதன் அவர்களோடு தொடர்பை ஏற்படுத்தி எமக்குரிய பயண ஒழுங்கினை மேற்கொண்டிருந்தார்கள். அவ்வகையில் எனது கடவுச்சீட்டு, வெளிநாட்டிற்குரிய அனுமதி (விசா) முதலிய செயற்பாடுகள் எல்லாம் திரு T. ஸ்ரீரங்கநாதனும் மகப்பேற்று நிபுணர் G. பவானி அவர்களும் மேற்கொண்டதன் பிரகாரம் எனது முதல் வட இந்திய தல யாத்திரைக்கு கால்கோள் இடப்பட்டது.



ஆம் 2008ஆம் ஆண்டு என்னால் ஆரம்பிக்கப்பட்ட வட இந்திய யாத்திரை ஒருமுறை தானே, பார்க்கக்கூடிய இடங்களையும் ஆலயங்களையும் பார்த்துவிட்டு வருவோம் எனும் சிந்தனை இருந்ததே ஒழிய தொடராக வருடாவருடம் தலயாத்திரை மேற்கொள்வேன் என்று கனவிலும் நினைக்கவில்லை. அத்துடன் தலயாத்திரையின் பொருட்டு ஒருமாத காலம் ஆச்சிரமப் பணிகளை விடுத்து என்னால் மன அடக்கத்துடன் ஈடுபட முடியுமோ என்ற சந்தேகமும் என் மனதில் பூதாகரமாக உருவெடுத்திருந்தது. ஆனாலும் இத்தல யாத்திரைக்கு என்னை அழைத்துச் செல்ல வேண்டும் என்ற முனைப்புடன் செயலாற்றிய மகப்பேற்று நிபுணர் G. பவானி அவர்களும் முகவர் T. ஸ்ரீரங்கநாதனும் மேற்கொண்ட செயற்பாடுகளுக்கு எதுவித தடங்கல்களும் ஏற்படாத வகையில் பிரயாணத்துக்குரிய ஒழுங்குகள் இடம்பெற்றமையையும் பார்த்தபொழுது எல்லாம் நான் வணங்கும் சந்நிதியானின் அனுமதியோடுதான் இச்செயற்பாடுகள் நடைபெறுகின்றன என்னும் எண்ணம் என்மனதில் வலுப்பெற்ற வகையில் எனது முதலாவது வட இந்தியப் பயணம் ஆரம்பமாயிற்று.

அதனைத் தொடர்ந்து 2009, 2011, 2013, 2014ஆம் ஆண்டுவரை எமது வட இந்திய யாத்திரை அமைந்திருந்தது. ஒவ்வொரு தடவையும் புதிய புதிய அடியார்களோடு எனது தலயாத்திரை இடம்பெற்றது. இவ்வகையான எனது யாத்திரைக்கு பிரயாண முகவராக செயற்பட்ட T. ஸ்ரீரங்கநாதனது அனுசரனை பேருதவியாக அமைந்திருந்தது. ஒவ்வொரு வருடமும் என்னால் மேற்கொள்ளப்பட்ட தலயாத்திரையின்போது காசி, கேதாரநாத், பத்ரிநாத், திரிவேணி சங்கமம், ரிஷிகேசம், கயா முதலிய தலங்களோடு பல புதிய தலங்களையும் தரிசிக்கக் கூடியதாக இருந்தது.

இவ்வகையான தொடர் யாத்திரைகளின் பயனாக பலவித அனுபவங்களை கலந்துகொண்ட அடியவர்கள் அனைவரும் பெறக்கூடியதாகவும் இருந்தது. இவ்வெண்ண எழுகையில் மேலும் மேலும் இவ்வகை யாத்திரைகளில் பங்குபற்றி ஆன்மீக சிந்தனையை வளர்க்க வேண்டும் எனும் பேரவா வளர்ந்து கொண்டே இருந்ததேயொழிய குறையவே இல்லை.

இவ்வ்கையான செயற்பாட்டின் அடிப்படையில் இலங்கை மீரியப்பெத்தையில் இடம்பெற்ற மண்சரிவின் காரணமாக 2015ஆம் ஆண்டு வட இந்திய யாத்திரையில் கலந்துகொள்ள முடியவில்லை. மலையகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யும் முகமாக மாதம் ஒரு தடவை எமது மலையகப் பயணத்தில் ஈடுபடுவதன் காரணமாக எனது யாத்திரை தடைப்பட்டது. அத்தோடு எனது கடவுச்சீட்டும் (பாஸ்போட்) புதுப்பிக்க வேண்டியும் இருந்தது. அதன் காரணமாகவும் எனது யாத்திரைப் பயணம் இடைநிறுத்தப்பட்டது. ஆனாலும் மலையக மண்சரிவின்போது மலேசியாவில் இருந்து வருகை புரிந்து எமது மலையகப் பயணத்தில் கலந்துகொண்ட திரு த. கணேசமூர்த்தியின் உறவினர் திரு K. செல்வராசா அவர்களது மலேசியாவுக்கு வாருங்கள் என்ற கோரிக்கையினை மனது ஏற்றுக்கொண்டதே யொழிய அதில் உள்ள பல நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக உடனடியாக என்னால் அப்பயணத்தில் ஈடுபடமுடியவில்லை. காலப்போக்கில் பார்ப்போம் எனும் சிந்தனையோடு...

(தொடரும்...

*உண்மைக்கு பகை உள்ளத்தில் தோன்றும் பயம்.*

# திருமுறை ஓதுக திருவருள் பெறுக

– செல்வி செ. ஐடா அவர்கள் –

தமிழ்மொழி இனிமையுடையது. "தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" என்பது அப்பர் சுவாமிகளின் அருள்வாக்கு. தெய்வீகத் தன்மை அமைந்துள்ள தமிழ்மொழி பக்தியை வெளிப்படுத்த எம்மொழியிலும் மேம்பாடுடையது. தமிழ் வேதங்களாகத் திகழும் பன்னிரு திருமுறைகள் இறைவனே அருளாளர்கள்மூலம் அருளியவை. "எனதுரை தனதுரையாக" என்கிறார் ஆளுடைய பிள்ளையார்.

"பக்திமையால் பணிந்து அடியேன் தன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில் வித்தானை"

என அப்பர் சுவாமிகளின் அருள் மொழிகளாலும் இதனை அறியலாம்.

மூன்று வயதில் ஆளுடைய பிள்ளையார் பாடினார் எனின், இறையருளே அவ்வாறு செய்ததாகும். சுந்தரமூர்த்தி நாயனாருக்கு அடியெடுத்துக் கொடுத்ததும், "பாட்டே அர்ச்சனை யாகும் பாடு" எனப் பணித்ததும் இறைவனே. மாணிக்கவாசகப் பெருமானுக்குக் குருவாய்த் தோன்றி உபதேசத்தை அருளி, உண்மை உணர்த்தித் திருவாசகம் பாடும்படி செய்ததும், அத்திருப்பாசுரங்களைத் தாமே கேட்டு அருளியதும் இறைவனே. சேரமான் பெருமான் கயிலையில் அருளிய "திருக்கைலாய ஞான உலா" இம் மண்ணுலகுக்குக் கிடைக்கும்படி செய்ததும் முழுமுதற்பொருளே. "உலகெலாம்" என்று அடியெடுத்து உதவி சேக்கிழார் பெருமானைத் திருத்தொண்டர் புராணம் பாடும்படி பணிவித்ததும் இறைவனே. இவ்வாறு சிவபெருமான் அருள் பெற்ற அருளாளர்கள் அருளியவை தமிழ் வேதமாகத் திகழும் பன்னிரு திருமுறைகள்.

சைவ மக்கள் திருமுறைகளைப் பொருள் உணர்ந்து ஓதி, வேண்டிய யாவும் பெறும் வாய்ப்புப் பெற்றவர்கள். தமிழ் மொழியில் பஞ்சாமிர்தம்போல் சுவைக்கக்கூடிய அருள்மொழிகளை அறிந்து, ஓதி, வீடுபேறு பெறமுயலாது அவர் தேவர், இவர் தேவர் என்று அங்கும் இங்கும் ஓடி அலைகின்றனர். தற்காலிகமாக வேண்டிய சிறு ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்கே இங்கும் அங்குமாக அலைகின்றனர். ஆசைக்கோர் அளவில்லை. வாழ்க்கைக்கு இன்றியமையாத் தேவைகளாகிய உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை பெற்று, ஏனைய பொழுதெல்லாம் இறை வழிபாட்டில் அமைவது விரும்பத்தக்கதும் உகந்ததுமாம்.

இறைவனை உள்ளன்போடு வணங்குதலே எமது பொறுப்பும் கடமையுமாகும். அவன் எங்களுக்கு வேண்டியவற்றை அருளுவான். "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்கிறார் அப்பர் சுவாமிகள். மண், பொன், பொருள், கல்வி முதலியவற்றைப் பெறவும், பிணிகள் நீங்கவும், குடும்பத்தில் வரும் எல்லா இடர்களையும் நீக்கவும், பகைமை தீரவும், திருமணம் நிகழவும், தொழில் முன்னேற்றமுறவும், கிரக தோஷங்கள் அகலவும்,

*விடுதலை பெறும்போதுதான் உண்மையைக் காணமுடிகின்றது.*

தீவினை அகன்று நல்வினை பெறவும், மரணபயம் அகலவும், ஆன்மபலம் அடையவும் இம்மையில் எல்லாவித நலன்களைப் பெறவும் வேண்டியவாறு பொருத்தமான பாசுரங்கள் திருமுறைகளுள் அருளப்பட்டன. யாவற்றுக்கும் மேலாக எடுத்த பிறவியின் பயனெய்தற்கு ஸ்ரீருத்திரமாக விளங்கும் அப்பர் சுவாமிகளின் திருத்தாண்டகம் உளது. வடமொழி வேதத்துக்குச் சமமாகத் தமிழ் மொழியில் வேதத்தின்பொருள் யாவும் இத்திருமுறைகளுள் பொதியப்பட்டுள. அவரவர்க்கு வேண்டியதை ஓதி, அவரவர் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.


தம்முள்ளே புதைந்து கிடக்கும் தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்த உதவுவது திருமுறைகளே. இவைகளைப் பொருள் உணர்ந்து ஓதித் திருவருள் பெறுவோமாக.

நான்கு யுகங்களிலும் இறை வழிபாடு நிகழ்ந்தது. கிருத யுகத்தில் ஞானத்தால் முத்தியும், திரேதாயுகத்தில் தானத்தால் முத்தியும் துவாபரயுகத்தில் யாகத்தால் முத்தியும், இக்கலியுகத்தில் பக்தியினாலேயே முத்தியும் என ஆன்றோர் புகலுவர்.

பக்தி வெறும் அனுட்டானமன்று. ஆசாரம், ஆலய வழிபாடு, விழா எடுத்தல் பாடல்களை மனனஞ் செய்தல் என்பன ஆரம்பநிலையாகும்.

இவைகளுக்கு மேலாக மனத்தூய்மையே பக்திநெறியாகும். மனிதனைப் பண்புள்ளவனாக்குவது பக்தி. சுயநலம் சிறிதுமின்றி எவ்வுயிரையும் தன்னுயிர்போல் செந்தண்மை பூண்டு எவன் வாழ்கிறானோ அவனே பக்தன்.

சிவ பக்தி மாத்திரம்தான் மனிதனைப் பண்புள்ளவனாக்கும். மற்றவை அனைத்தும் பிரயோசனமற்றவை. ஆகவே தினமும் காலையில், கை, கால், உடல் கழுவி, தூய நீறணிந்து, பூவும் நீரும் கொண்டு இறைவனுக்கு அர்ப்பணித்து திருமுறைகளை மெய்யன்போடு ஓதி, இன்ப அனுபவத்தோடு கூடிய திருவருள் பெறுவோமாக.



தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருநாவலூர்

– வல்வையூர் அப்பாண்ணா –

திருச்சியிலிருந்து சென்னை செல்லும் பாதையில் உழுந்தூர்ப்பேட்டை தாண்டியதும் "கெடிலம்" எனும் பேருந்துத் தரிப்பிடத்தில் இறங்க வேண்டும். இடதுபுறமாகப் பிரிந்து செல்லும் சந்தியில், பண்டிருட்டி வழியாக கடலூர் செல்லும் பேருந்தில் 2km பயணித்தால் "திருநாவலூர்" திருக்கோவிலில் இறங்கிக் கொள்ளலாம். சுந்தரர் பிறந்து - வளர்ந்து - வாழ்ந்த சுந்தர பூமியாதலின் "திருநாவலூர்" தனிச் சிறப்புப் பெறுகிறது. சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் நம்பியாரூரர் (சுந்தரரின் இளமைப் பெயர் இதுவே) மகனாகப் பிறந்தார் எனும் கூற்றை பெரியபுராணம் இவ்வாறு வர்ணிக்கிறது.

மாதொரு பாக னார்க்கு வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடைய னார்க்கு
ஏதமில் கற்பின் வாழ்க்கை மனை இசை ஞானியார்பால்
தீதகன் றுலகம் உய்யத் திருஅவ தாரம் செய்தார்.

-பெரியபுராணம்: பாடல் இல: 149.

மண்டபத்தின் ஒரு பக்கமுள்ள விளம்பரப் பலகைபோன்ற பகுதியில் சுந்தரர் பற்றிய விபரங்கள் பெரிய எழுத்தில் குறிக்கப்பட்டுள்ளன. சுந்தரர்- ஆடிச்சுவாதி- 8ஆம் நூற்றாண்டு, தந்தையார்- சடையனார், தாயார்- இசைஞானியார், அவதார தலம்- திருநாவலூர், இறைவன் ஆட்கொண்டது- திருவெண்ணை நல்லூர், முத்தி தலம்- திருஅஞ்சைக்களம். விபரமும்- அதற்கான விளக்கங்களும் தெளிவாகவே உள்ளன.

ஐந்து நிலைகள் கொண்ட ராஜகோபுரம் கிழக்குப் பார்த்தபடி புதிய பொலிவுடன் உயர்ந்து நிற்கிறது. பரவை நாச்சியார், சங்கிலி நாச்சியார் சூழ சுந்தரர் வீற்றிருக்கும் அகன்ற சந்நிதி கோபுர வாசலருகே உள்ளது. எதிரில் வெள்ளை யானை நிற்க, சுந்தரர் தாளமேந்திக் காட்சி தருகிறார். சுந்தரர் எதிரில் ஏன் வெள்ளை யானை? கைலாசத்திலிருந்து வருகைதந்த வெள்ளை யானையின் மீதேறி "திருஅஞ்சைக்களம்" திருக்கோவிலிலிருந்தே சுந்தரர் புறப்பட்டு கைலாசத்தை அடைந்தார் என்பது வரலாறாகையால் சுந்தரர் முன்பாக வெள்ளை யானை காணப்படுகிறது. மண்டபத்தில் கவசமிடப்பட்ட கொடிமரமும்- பலிபீடமும் காணப்படுகின்றன. கொடிமரத்தடி விநாயகர் இங்கு "சுந்தர விநாயகராக" அருள் புரிகிறார். சற்றே பெரிய உருவத்தில் நந்தி ஒன்றுள்ளது.

சுந்தரர் சந்நிதிக்கு அடுத்திருப்பது உற்சவத் திருமேனிகள் பாதுகாக்கப்பட்டிருக்கும் அறையாகும். நால்வர், சுந்தரர் (பெரிய மூர்த்தமாக- மனைவியர் இருவருடனும்) நடராசர்- சிவகாமி, வள்ளி- தெய்வானையுடனான முருகன், விநாயகர் திருவுருவங்கள் அங்கே பாதுகாக்கப்பட்டுள்ளன.

ஆற்றலைவிட ஆர்வமே வெற்றிக்கு அடிப்படைக் காரணம்.

சிறிய கருவறையில் நேராக மூலவர் தரிசனம் கிடைக்கிறது. மூலவர் "ஸ்ரீ பக்த ஜனேசுவரர்" லிங்கபாணம் சற்றே உயரமாக- பளபளக்கும் வெள்ளி நாகபடம் லிங்க பாணத்தின் மேலாக உயர்ந்தபடி ஜொலிக்க- அளவான அலங்காரத்துடன் அருள் பாலிக்கிறார். கருவறைச் சுவர் முழுவதும் "வியாயசருமர்" (இதுவே சண்டேஸ்வரரின் பிறப்புப் பெயர்) வரலாறு சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளது. மாடு மேய்ப்பது- பால் கறப்பது- தந்தையார் மரத்தின் மீதேறி ஒளிந்திருந்து பார்ப்பது- திருமஞ்சனம் செய்வது- தந்தையார் பாற்குடத்தை தட்டி விடுவது- தந்தையின் கால்களை வெட்டுவது- இறைவன் கருணை கூர்ந்து "சண்டீசர்" பதவி கொடுப்பது என வியாயசருமரின் வரலாற்றின் முக்கிய அம்சங்கள் அனைத்தும் செதுக்கப்பட்டுள்ளன.

கோஷ்ட மூர்த்தங்களுள் தென்புறமுள்ள தெட்சணாமூர்த்தியின் திருவுருவம் ரிஷப வாகனத்தின் முன்னால் நின்றபடி, வலது கையை ரிஷபத்தின்மீது ஊன்றி, இடது கையில் சுவடி ஏந்தியபடி இருப்பது ஏனைய கோயில்களில் இருப்பதைவிட வித்தியாசமான அம்சமாக இருந்தது.

உட்பிரகாரத்தில் "நரசிங்கமுனையர்" பூசித்த லிங்கம் தனிச் சந்நிதியில் உள்ளது. யார் இந்த "நரசிங்க முனையர்"?

நரசிங்க முனையர் என்னும் நாடுவாழ் அரசர் கண்டு
பரவருங் காதல் கூரப் பயந்தவர் தம்பால் சென்று
விரவிய நண்பி னாலே வேண்டினார் பெற்றுத் தங்கள்
அரசிளங் குமரற் கேற்ப அன்பினால் மகன்மை கொண்டார்.

-பெரியபுராணம்: பாடல் இல- 151-

சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் மகனாகப் பிறந்த நம்பியாரூரரை, அவ்வூரை ஆண்டு வந்த "நரசிங்க முனையர்" எனும் மன்னன் நட்புரிமையினால் வேண்டிப் பெற்றுக்கொண்டு சென்று, தங்களது மகனாக ஏற்று வளர்த்து ஆளாக்கினார். அந்த மன்னரே மேற்குறித்த "நரசிங்க முனையர்" ஆகும்.

உட்பிரகாரத்தின் இன்னொரு பக்கத்தில் ஸ்ரீதேவி- பூதேவியுடன் காட்சிதரும் கோலத்தில் உள்ள ஸ்ரீ வரதராஜப் பெருமாள் சந்நிதி தனியாகக் காணப்படுகிறது. உற்சவ மூர்த்தங்களான பெருமாள்- தாயார்- இராமர்- இலக்குவன்- சீதை முதலானவையும் அங்குள்ளன.

உட்பிரகார தென் சுற்றில் பொல்லாப் பிள்ளையார், சேக்கிழார், அறுபத்து மூவர் உள்ளனர். மேற்குச் சுற்றில் மூர்த்தங்கள் நிறைந்துள்ளன. வலம்புரி விநாயகர், சோமஸ்கந்தர், ஆறுமுகர் சந்நிதிகளுடன் கிருதயலிங்கம், சண்டேஸ்வரர், திரோதாயுலிங்கம், பிரம்மா, துவாரபரயுக லிங்கம், சுந்தரர் பூசை செய்த லிங்கமான கலியுகலிங்கம் ஆகியன உள்ளன.

தென்மேற்கில் கஜலெட்சுமியின் தனிச் சந்நிதியும், பன்னிரண்டு திருக்கரங்களுடனான வள்ளி- தெய்வானை சகிதம் ஆறுமுகர் மூர்த்தமும் அற்புதமானவை. வடமேற்கில் நடராஜர் சபையுண்டு. நவக்கிரக சந்நிதியில் நடுவே உள்ள சூரியன் மூலவரைப் பார்த்தபடி உள்ளார். இச்சந்நிதியில் சுக்கிரன் வழிபட்ட "ஸ்ரீபார்க்கலிங்க" மூர்த்தத்தை உருத்திராட்ச விதைகளை மாலையாகக் கோர்த்து பந்தலிட்டு அழகுற வைத்துள்ளனர்.

அளவில்லாத ஆசை நமது நல்ல குணங்களை அழித்துவிடும்.

பக்கத்தில் இரண்டு பைரவர் திருமேனிகள் உள்ளன. ஒன்று உருவத்திற் பெரியது. மற்றையது சிறியது. சிறிய பைரவ மூர்த்தியின் நாய் வாகனம் மறுபக்கமாக (இடது புறம் தலை இருக்கும் விதத்தில்) உள்ளது. வைரவர் சந்நிதானம் அருகே சூரிய சந்நிதியுமுண்டு.

**"ஸ்ரீ மனோன்மணி"** அம்பிகையின் சந்நிதி தனியாகக் காணப்படுகிறது. "சுந்தரநாயகி", "சுந்தராம்பிகை" என்பன அம்பிகையின் மறுபெயர்களாகும். 12 தூண்கள் கொண்ட முன் மண்டபத்துடன் கூடிய கருவறையில் அம்பாள் நின்ற திருக்கோலத்தில் அருள் பாலிக்கிறார். நந்தி- பலிபீடம் ஆகியனவும் உள்ளன.

கோவிலுக்கு வெளியே வந்தால், நிறைந்த சிற்ப வேலைப்பாடுகளுடனான தேர் ஒன்று தேர் தரிப்பிடத்தில் போதிய பராபரிப்பின்றி உள்ளது. தேரில் உள்ள ஒவ்வொரு சிறு சிறு சிற்பங்களும் கொள்ளை அழகுடன் மிளிர்கின்றன. கோவிலுக்குப் பக்கத்திலேயே சுந்தரர் மடாலயம் உள்ளது. மடாலயத்தின் மையத்தில் உள்ள சுந்தரர் சொரூபம் மிகமிக அழகானது.

"கோவல னான்முகன் வானவர் கோனுங் குற்றேவல் செய்ய
மேவலர் முப்புரந்தீ யெழுவித்த வன்ஓர் அம்பினால்
ஏவலனார் வெண்ணை நல்லூரில் வைத்து எனையாளுங் கொண்ட
நாவலனார்க்கு இடமாவது நந் திருநாவலூரே"

-சுந்தரர்-

# ஞானச்சுடர் மலருக்கு ஆக்கங்களை வழங்கியோருக்கான அறிவுறுத்தல்

**மேற்படி 2014, 2015ஆம் ஆண்டு காலப் பகுதியில்**

**ஞானச்சுடர் மலரில் வெளிவந்த ஆக்கங்களுக்கு**

**உரித்துடையோர் தங்கள் முகவரி, தங்களது**

**ஆக்கம் பற்றியவிபரங்களை**

**ஆவணிமாத இறுதிக்குள்**

**அறியத்தரவும்.**

**-பேரவையினர்-**

நீ துயரப்படக் காரணம் எதுவாக இருந்தாலும் பிறருக்குத் துன்பம் செய்யாதே.

# ஆவணிமாத வாராந்த நிகழ்வுகள்

**05.08.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "முருகனின் பெருமை"

வழங்குபவர் :- திரு சிவஞானம் பாலமுரளி அவர்கள்

[ஆசிரியர், யா/ பொலிகண்டி இ.த.க. பாடசாலை]

---

**12.08.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

**19.08.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**26.08.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் ஆவணிமாத வெளியீடு

## 224ஆவது மலர்

வெளியீட்டுரை :- திரு க. ஸ்ரீச்சந்திரன்அவர்கள்

[ஆசிரியர் – அ.மி. கல்லூரி]

மதிப்பீட்டுரை :- திரு க. நடேசன் (தெணியான்) அவர்கள்

[இளை. அதிபர்]

பதிவு இல. *QD/160/NEWS/2016*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

